விலை ரூபா 20.00



உலகம் எங்கும் போர் 9



திரும்புவாராம் முஷாரப் 10

மோசடிகளுக்கு இந்தியரசு உடந்தை 11



ஆடிய ஆட்டம் என்ன....! 24



www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 59

வள்ளுவர் ஆண்டு 2043 தை 10 செவ்வாய்க்கிழமை (24/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை ரத்து

## போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறத் தவறியதால் முடிவு

கொழும்பு, ஜனவரி 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவி பிள்ளை (நவநீதம் பிள்ளை) பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு மேற்கொள்ள இருந்த பயணத்தை இரத்துச் செய்துவிட்டார் என்று உதயனுக்கு நேற்று அறிய வந்தது. அவரது இந்த முடிவு கொழும்பு ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கை, இறுதிப் போரின்போது நிகழ்ந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறத் தவறிவிட்டதன் காரணமாகவே நவநீதம் பிள்ளை அம்மையார் தனது இலங்கைக்கான பயணத்தை ரத்துச் செய்துள்ளார் என்று ஐ.நா. வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.



ஜெனிவா மாநாடு நெருங்கிவரும் தறுவாயில், மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் எடுத்துள்ள இந்த அதிரடியான தீர்மானத்தால் கொழும்பு

27

## இலங்கை மீது அழுத்தம் தயாராகிறது மேற்குலகு

### ஜெனிவாவில் கூடி ஆராய்வு

ஜெனிவா,ஜனவரி 24

அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில், இலங்கை மீது போர்க்குற்ற விசாரணைகளை நடத்த அழுத்தம் கொடுக்கும் வகையிலான இராஜதந்திர நகர்வுகள் ஜெனிவாவில் தீவிரமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்குலக ராஜதந்திரிகள் உட்பலப் பலர் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன் ஒரு கட்டமாக, கடந்த வாரம் ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் வட்டமேசைக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆராய ஐ.நா பொதுச்செயலர் நியமித்த நிபுணர் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரி

27

## ஜெனிவாவில் எதையும் எதிர்கொள்ளத் தயார்

### அமைச்சர் மகிந்த சமரசிங்க சவால்

கொழும்பு,ஜன 24

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் எந்தவகையான அனைத்துலக அழுத்தங்களையும் எதிர்கொள்வதற்கு இலங்கை அரசு தயாராகவே உள்ளது என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்

27

## கல்வி நடைமுறையில் மாற்றம்

கொழும்பு,ஜன. 24

நடைமுறையில் உள்ள 'இஸற்' புள்ளி முறை உட்பட அனைத்துக் கல்வி நடைமுறைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

சில மாணவர்கள் 3 பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றிருந்த போதிலும்

27

## யாழ். ஆஸ்பத்திரியில் சிப்பாயின் சடலம்

யாழ்ப்பாணம், ஜன.24

512 இராணுவத் தலைமையகத்தை சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் திடீரென மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் அவரது சடலம் ஒப்படைக்கப்பட்டது.

பொலநறுவையைச்சேர்ந்த ஹேலத் முதிசீனங்கே சண்யூன் குமார் பண்டாரா (வயது - 28) என்ற இராணுவ வீரரே இவ்வாறு சடலமாக ஒப்படைக்கப்பட்டவராவார்.

திடீரென மரணமானதாகவே தெரிவித்தே இராணுவத்தினரால் இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இவருக்கு திருமணமாகி ஒரு குழந்தை இருப்ப

27

### பரீட்சைகள் குறித்து தெளிவில்லையா? அழையுங்கள் 1911

பரீட்சைகள் தொடர்பில் ஏதாவது தெளிவின்மை காணப்படின் 1911 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி முறையிடுவதன் மூலம் தெளிவை பெற்றுக் கொள்ள முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

### அகதியின் சாவு குறித்து விசாரணை ஆரம்பம்

நெதர்லாந்தில் தன்னை மாய்த்துக் கொண்ட இலங்கையர் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, நெதர்லாந்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நெதர்லாந்துக்கு அகதியாகச் சென்ற நிலையில், தமது அகதி அந்தஸ்துக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த டிசெம்பர் மாதம் இலங்கை அகதி ஒருவர் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டார். ஷ்கிபோல் வானூர்தி நிலைய அகதிகள் பதிவு நிலையத்தில் வைத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அவர் ஏற்கனவே பல தடவை இவ்வாறான முயற்சியில் இறங்கிய போதும், அவருக்கு அகதி அந்தஸ்து வழங்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (த)

### பாக். பயணமாகிறார் ஜனாதிபதி மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தானுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்த மாதத் தொடக்கத்தில் பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொள்ளும் அவர் அங்கிருந்து சிங்கப்பூர், மியான்மர் ஆகிய நாடுகளுக்கும் செல்லவுள்ளார். பெரும்பாலும் அடுத்த மாதம் 6 ஆம் அல்லது 7ஆம் திகதி பாகிஸ்தானுக்கான பயணத்தை ஜனாதிபதி மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளின் கட்டடங்கள் பல்கலை மாணவருக்கு

வன்னியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டடங்கள் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தங்குவதற்குப் பயன்படுத்தப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. கிளிநொச்சியில் புலிகளினால் நிர்மாணிக்கப்பட்ட சில கட்டடங்கள், பல்கலைக்கழக மாணவர்களின் நலனுக்காகப் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளன. குறிப்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தங்குவதற்கு இந்தக் கட்டடங்கள் பயன்படுத்தப்பட உள்ளன எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினிசமரநாயக்க தெரிவித்துள்ளார். புலிகளினால் கலாசார மையமாகப் பயன்படுத்தப்பட்ட கட்டடம் ஒன்றை மாணவர்களின் விடுதியாகப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலட்சியத்தை கைவிடாதீர்

### யாழ். மாணவர் மத்தியில் கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.24

இளைஞர்களுக்கு இலட்சியம் அவசியம். இலட்சியத்தை அடைவதற்கு விடாமுயற்சி வேண்டும். முயற்சியுடன் செயற்பட்டால் யாராக இருந்தாலும் வெற்றியடைய முடியும்.

தென்றலின் சுகத்தை அடைய வேண்டும் எனில் பல புயல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். தோல்வி மனப்பான்மையைத் தோல்வி அடையச் செய்யவேண்டும். இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் இந்திய முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று மாணவர் மத்தியில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பல்கலைக்கழக மாணவர்களால் நிரம்பி வழிந்த கைலாசபதி கலையரங்கில் அப்துல்கலாம் உரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் தெரிவித்தமை வருமாறு:-

வரலாற்றின் பக்கங்களைத் தன் பக்கமாக மாற்றிய இலட்சிய புருஷர்களைப் பற்றி அறிந்

27

## கலாமிடம் ஒரேயொரு கேள்வி

யாழ்ப்பாணம் பற்றி நாளாந்த விடயங்களை அறிந்துகொண்டு தான் இருக்கிறேன். யாழ்ப்பாணத்தின் மீது எனக்கு அதிக ஈடுபாடு உள்ளது.

என்னைக் கற்பித்த ஆரம்பக் கல்வி ஆசிரியர் கூட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றார் இந்திய முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நேற்று மாணவர் ஒருவர் எழுப்பிய ஒரேயொரு கேள்விக்குப் பதிலளிக்கும் போதே கலாம் இதை

27



நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ். பல்கலைக்கழகத்தில் சிறப்புரையாற்றிய இந்திய முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாமுக்கு பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நினைவுப் பரிசு வழங்குகிறார். (த)

## எனது கணித பாட ஆசான் யாழ்ப்பாணப் பெருமகன்

''நான் பயின்றது யாழ்ப்பாணத்து ஆசிரியர் ஒருவரிடம். அவரிடம் கணிதத்தை மட்டுமல்ல வாழ்க்கை நெறியையும் கற்றுக்கொண்டேன்'' என்று கூறிப் பெருமிதமடைந்தார் இந்திய முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம்.

யாழ்.பல்கலைக்கழகத்தில்

27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தொடர்ந்தும் பங்களிப்பேன்

## சம்பந்தனுடனான சந்திப்பில் கலாம் உறுதிமொழி

கொழும்பு, ஜன.24

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தொடர்ந்தும் பங்களிப்பேன் என்றுகூட்டமைப்பிடம் அப்துல் கலாம் உறுதியளித்துள்ளார். இனப்பிரச்சினைக்கான தீர்வில் அப்துல் கலாமும் பங்களிப்பு செய்ய வேண்டும் என்று கூட்டமைப்பினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கலாம் ஏற்றுக் கொண்ட பின்னரே அவர் இவ்வாறு உறுதியளித்தார்- இந்தத் தகவலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாம் இலங்கையின் பல தரப்பட்ட அரசியல் கட்சிகளையும், அரசியல்வாதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார். அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்று இரவு கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார் கலாம். இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் மட்டும் கலந்து கொண்டிருந்தார்.



**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது பரிமாறப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் அப்துல் கலாம், சம்பந்தனிடம் தெரிவித்தார்.**

இந்தச் சந்திப்பு தொடர்பாக இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அப்துல் கலாம் யாழ்ப்பாண விஜயம் தொடர்பாக தனது பூரண திருப்தியை என்னிடம் வெளியிட்டார். பல்கலைக் கழகத்திலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் மாணவர்கள் தன்னை உற்சாகமாக வரவேற்றதாகவும், பயணம் திருப்தியளிக்கும் வகையில் அமைந்ததாகவும் தெரிவித்தார். அத்துடன் அங்கு ஆற்றிய உரையின் நகலினையும் எனக்குத் தந்தார்.

அத்துடன் சமகால நிலவரங்கள் தொடர்பாக பல விடயங்கள் அவருடன் பேசப்பட்டது. அவரும் தற்போதைய நிலைமைகளினை அறிவதில் ஆர்வம் செலுத்தினார். மேலும் அரசியல் கட்சிகளினது நிலைப்பாடுகள், அரசியல் தீர்வு தொடர்பாகவும் அவர் என்னிடம் கேட்டறிந்து கொண்டார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது பரிமாறப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் அவர் எனக்குத் தெரிவித்தார்.

தங்களுடைய பங்களிப்பு தொடர்ந்து இருக்க வேண்டும். இனப் பிரச்சினையை தீர்ப்பதில் நீங்கள் அக்கறை செலுத்தினால் அதன் மூலம் அதிகளவான நன்மைகள் கிடைக்கும். எனவே தாங்கள் தொடர்ந்து பங்களிப்பு செய்ய வேண்டும். இந்தியாவினது பங்களிப்பும் முக்கியமாக தொடர்ந்து இருக்க வேண்டும். இந்தியாவின் பங்களிப்பு இருந்தால்தான் இனப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்று அவரிடம் நான் கோரினேன். இதற்கு கலாம், தான் தொடர்ந்தும் அக்கறையுடன் இதுகுறித்து கருத்துத் தெரிவிப்பதாகக் கூறினார்- இவ்வாறு சம்பந்தன் தெரிவித்தார்.

(ங-15)

# இராணுவக் கழிவுகளால் தொற்றுநோய் அபாயம்

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி இராணுவ முகாம்களின் கழிவுகளால் தொற்று நோய்கள் பரவக் கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

கிளிநொச்சியின் பல்வேறு இடங்களிலும் உள்ள இராணுவத்தினர் கழிவுகளை உரிய முறையில் அகற்றாமையால் பொதுமக்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதுடன் தொற்றுநோய்களும் பரவக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் உள்ள 58 ஆவது படைப்பிரிவு முகாமில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மற்றும் கழிவு நீர் என்பன கணேசபுரத்துக்குத் தண்ணீரைக் கொண்டு செல்லும் நீர்ப்பாசனக் கால்வாயினுள் விடப்படுவதால், நீர் விநியோகம் பாதிக்கப்படுவதுடன் கழிவுப் பொருள்களும், கழிவு நீரும் சேர்ந்து துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் புழுக்களின் பெருக்கமும் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்களாலும் பொது அமைப்புக்களாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருநகர் பகுதியில் நிலை கொண்டுள்ள 557 ஆவது படைப்பிரிவு முகாமில் இருந்து வெளியேறும் கழிவு நீர், வீதியின் ஓரமாகச் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் வரை தேங்கி நின்று இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதால் தொற்றுநோய்கள் பரவும் அபாய நிலையும் காணப்படுகின்றது.

**இராணுவத்தினர் கழிவுகளை உரிய முறையில் அகற்றாமையால் பொதுமக்களுக்குத் தான் பல்வேறு அசௌகரியங்கள்.**

இதேபோன்று கிளிநொச்சி விநாயகபுரம் பகுதியில் உள்ள இராணுவ முகாம் கழிவுகள் தனியார் காணி ஒன்றில் கொட்டப்படுகின்றன. இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் கட்டாக்காலிநாய்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுத்து மக்கள் நெருக்கமாக வாழும் இந்தப் பகுதிகளில் கழிவுகளை உரிய முறையில் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்டு வரும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# அரசுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள்

வவுனியா,ஜன.24

அரசுக்கு எதிரான கருத்துக்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வவுனியாவில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சகோதரத்துவத்தின் மக்கள் அரண் அமைப்பினரின் தலைமையில் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் நேற்று முற்பகல் 10 மணியளவில் விநியோகிக்கப்பட்டன.

வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை மீளவும் உருவாக்குதல் மற்றும் ஜனநாயகத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்துதல் என்பன இந்தத் துண்டுப் பிரசுரங்களில் முக்கிய விடயங்களாகக் காணப்பட்டன.

மேலும் பேச்சுக்கள், அதிகாரப்பகிர்வு ஆகியன மூலம் அரசு மக்களை ஏமாற்றி வருவதும் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

**சகோதரத்துவத்தின் மக்கள் அரண் அமைப்பினரின் தலைமையில் இந்தத் துண்டுப்பிரசுங்கள்.**

இந்தத் துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்த சகோதரத்துவத்தின் மக்கள் அரண் உறுப்பினர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் உள்ளூர் சமூகநலன்புரித் தொண்டர்களும் மற்றும் இந்த அமைப்பின் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். (க-421)

# மீண்டும் விமான சேவை

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் மீண்டும் விமானசேவையை ஆரம்பிக்கப் போவதாக எக்ஸ்போ எவியெசன் நிறுவனம் அறிவித்துள்ளது.

நாளொன்றுக்கு இரண்டு சேவைகளை நடத்தவுள்ளது எனவும், இதற்கு 12 ஆசனங்களைக் கொண்ட விமானங்களை பயன்படுத்தவுள்ளது எனவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

விமான சேவையை ஆரம்பிக்க இலங்கையின் குடியியல் விமான சேவை அதிகாரசபையின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றோம் எனவும், எக்ஸ்போ நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏ-9 வீதி திறக்கப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு நாளொன்றுக்கு சுமார் 200 பேர் விமானம் மூலம் பயணம் செய்து வந்தனர்.

தற்போது ஏ-9 வீதி திறந்து விடப்பட்டுள்ள நிலையில் நாளொன்றுக்குத் தேவைப்படும் விமானப் பயண ஆசனங்களின் எண்ணிக்கை 36 ஆக குறைந்துள்ளன எனவும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ங-சி)

# முல்லை ஆசிரியர்களுக்கு இன்று சம்பளம்

யாழ்ப்பாணம்,ஜன. 24

முல்லைத்தீவில் கல்வி வலய ஆசிரியர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளம் இன்று வழங்கப்படவுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகள் வழங்கப்படாததை அடுத்து இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனை அடுத்து ஆசிரியர்களுக்கான ஜனவரிமாதக் கொடுப்பனவு இன்று வழங்க ஏற்பாடாகியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய திகதியில் வேதனம் வழங்கப்படாமையால் முல்லைத்தீவு வலய ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-11-10)

# வெளியேற்றும் நடவடிக்கை; கண்டிக்கிறார் விநோ

மன்னார், ஜன.24

கடந்த பல வருடங்களாக அடர்ந்த காட்டினுள் வாழ்ந்து வந்த மக்களை வெளியேற்றும் நடவடிக்கையைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

சன்னார் கிராம மக்கள் தமது முயற்சியின் பலனாகச் சிறு சிறு அபிவிருத்திகளைக் கண்டு வருகின்றனர். ஆனால் அந்த மக்களை வெளியேற்றி விட்டுத் தமக்குத் தேவையானவர்களை அந்த இடத்தில் மீள்குடியமர்த்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் கண்டனத்துக்குரியன.

மேலும் அங்குள்ள அரச அதிகாரிகள் தமது பதவிக்காகவும், தமது இடங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் அப்பாவி மக்களைத் தமது தேவைக்காகப் பயன்படுத்துகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



இதேவேளை, தமது கிராமத்தினுள் அத்துமீறி நுழைந்து சட்ட விரோதமான முறையில் பாதை அமைத்து மக்களின் வீடுகளை உடைக்க முற்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சன்னார் கிராம மக்கள் நேற்றைய தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஒன்று கூடினர். அத்துடன் மேலதிக அரச அதிபர் திருமதி எஸ்.மோகநாதனைச் சந்தித்து உரையாடியதுடன் மனுவொன்றையும் கையளித்தனர்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எஸ்.விநோநோகராதலிங்கம், மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மாந்தை மேற்குப் பிரதேச சபைத் தலைவர் எஸ்.வரப்பிரகாசம், சன்னார் கிராம மக்களின் பிரதிநிதி ஆகியோர் மேலதிக அரச அதிபருடன் கலந்துரையாடினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மன்னார் மேலதிக அரச அதிபர்;

சன்னார்க் கிராம மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. நீங்கள் சற்று அமைதியாக இருக்க வேண்டும். உங்களுடைய கிராமத்துக்கு நாங்கள் உடனடியாக வந்து பார்வையிடுவதுடன் உங்களின் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (க-601)

**தமது முயற்சியினால் சன்னார் மக்கள் சிறு சிறு அபிவிருத்தி கண்டுள்ளனர். ஆனால் அந்த மக்களை வெளியேற்றி விட்டுத் தமக்குத் தேவையானவர்களை அந்த இடத்தில் மீள்குடியமர்த்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் கண்டனத்துக்குரியன.**

# இருக்கு நவீன வசதிகள் இல்லையே மருத்துவர்கள்

நெடுங்கேணி, ஜன.24

நெடுங்கேணிப் பொது வைத்தியசாலைக்கு நவீன வசதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை.

இந்த வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான ஆண், பெண் விடுதிகள் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் மருத்துவர்கள் இல்லாததால் நோயாளர்கள் இந்த விடுதிகளில் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் ஸ்கானிங் கருவிகள், பற்சிகிச்சைக்கான கருவிகள் என்பன பொருத்தப்பட்டுள்ள போதிலும் அவற்றை இயக்குவதற்கும் ஆள்கள் இல்லை.

இந்த வைத்தியசாலையில் நான்கு மருத்துவர்களுக்கான ஆளணி உண்டு. ஆனால் ஓர் உதவி மருத்துவர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் இங்கு மருத்துவர் பற்றாக்குறை நிலவுகின்றது.

மேலும் தாதியர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. மிகவும் பாதிக்கப்பட்ட நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள மக்களுக்குச் சிறந்த மருத்துவ வசதிகளை வழங்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

ஆகவே இந்த வைத்தியசாலையில் நிலவும் மருத்துவர் மற்றும் தாதியர் வெற்றிடங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து உரிய மருத்துவ வசதிகளை வழங்க வேண்டுமென அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது என்ற நியதியில்...

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதா? அல்லது ஒரேயடியாக அரசால் அதற்கு முழுக்குப் போடப்பட்டுவிட்டதா?

இலங்கை அரசியலில் விடை தெரியாத வினாவாக இது எழுந்து நிற்பதால், அரசாங்கத் தரப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளே கையைப் பிசையும் நிலை காணப்படுகிறது.

அரசாங்கத்தின் உத்தேச தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்கம் தெரிவிக்கும் வரை, இரு தரப்புப் பேச்சுக்கள் சாத்தியம் இல்லை என்று அரசின் உயர்வட்டாரங்கள் அழுங்குப் பிடியில் நிற்பதாக, அதன் உள்வீட்டு வட்டாரங்கள் சாடை மாடையாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை, காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட முக்கிய அம்சங்களில் அரசு ஆக்க பூர்வமான, அனுகூலமான நிலைக்கு வாராவிடில் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற கட்டத்தை அது எட்டிவிட்டது.

அடிப்படை அதிகாரங்கள் குறித்துப் பேசுவதற்கு முன்வராத அரசுடன், பேசுவதோ தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதற்கு இணங்குவதோ, பாழ் கிணற்றில் வீழ்வதற்குச் சமன் என்பதே, கூட்டமைப்பினரைத் தங்கள் அரசியல் பிரதிநிதிகளாக தெரிவு செய்த தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தும் மாற்றமுடியாத நிலைப்பாடுமாகும்.

இப்போதைய அரசியல் நெருக்கடி நாட்டைச் சூழ்ந்துள்ள நிலையில், 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று, புதிதாக அல்லது வேறு வடிவத்தில், தமிழருக்கு ஒரு தீர்வை மஹிந்த வழங்குவதற்கு சிங்களப் புத்திஜீவிகளோ, அரசியல்வாதிகளோ அனுமதிக்க மாட்டார்கள். அவ்வாறு செயற்பட்டால் அவரைப் பதவியில் இருந்து தூக்கி வீசுவதற்குத் தயங்கப் போவதில்லை என்று பேராசிரியர் நளின் டீ சில்வா போன்றவர்கள் சிங்கள் மக்கள் சார்பில் குமுறுகிறார்கள்.

13+ வழங்குவதாக ஜனாதிபதி, இந்திய அமைச்சர் கிருஷ்ணாவிடம் வாக்குறுதி அளித்திருந்தாலும் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற கடப்பாடோ, கட்டாயமோ அரசுக்கு இருக்க முடியாது என்று பிரசித்தி பெற்ற அரசியல் சாணக்கியன் கௌடில்யரை உதாரணம் காட்டி, ஜனாதிபதி மஹிந்தவை மடக்கிவிடவும் சிங்களப் புத்திஜீவிகள் 'ஆர்ப்பாட்டம்' பேயாட்டம் போடுகிறார்கள்.

13+ குறித்து ஜனாதிபதி இந்தியாவிடம் கூறியிருக்கலாம். போர் நடைபெற்ற சூழலில் அவர் அதனைத் தெரிவித்திருந்தாலும் கூட, இன்றைய போர் முடிந்த பின்னணியில் அதனை வழங்கியாக வேண்டும் என்றில்லை. இப்போதைய சூழ்நிலை முற்றுமுழுதாக மாறுபட்டதாகும். ஆகையால் இலங்கை மீது இது விடயத்தில் எவரும் அழுத்தம் போட இயலாது என்று அரசுக்கு நெருக்கமான மற்றொரு புத்திஜீவி வாதாடுகிறார்.

எவ்வாறாயினும், மார்ச் மாதம் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டுக்கு முன்னதாக கூட்டமைப்புடனான பேச்சுக்களை முன்னகர்த்தி சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெறவேண்டிய அவசியம் அரச தரப்புக்கு உண்டு. 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு காணவும் தயார் என்று கூறியதும், மூதவை (செனற் சபை) குறித்து அறிவித்ததும் இதனாலேயே. மூதவையையும் கூட்டமைப்பு நிராகரித்த நிலையில், பேச்சு முழுஅளவில் ஸ்தம்பித நிலையை அடைந்துவிட்டது.

பேச்சை முன்னெடுப்பதற்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதே இன்று எழும் முக்கிய கேள்வி. அரசிடம் தற்போது இரு வழிகளே உள்ளன. ஒன்று கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவதன் மூலம் பணிய வைப்பது. கூட்டமைப்பை உடைத்துப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன.

பேச்சை முன்னகர்த்த உள்ள மற்றொரு வழி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம். நோர்வேயின் மத்தியஸ்தம் மூலம் பெற்ற படிப்பினை காரணமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் குறித்து அரசு இனி நினைத்தும் பார்க்கமாட்டாது. இனப்பிரச்சினை சர்வதேசமயப் படுத்தப்பட்டதற்குக் காரணம் நோர்வேயின் மத்தியஸ்தம்தான். அரசின் ஆதரவாளர்கள் மற்றும் அதன் சிந்தனைக் கூடங்களைச் சேர்ந்தவர்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற வார்த்தையைக் கேட்டதுமே எகிறிப் பாய்கிறார்கள்!

இத்தகைய நிலையில், அரசுக்கு ஏற்பட்டுள்ள சிந்தனைதான் சர்வகட்சிக் குழு. கூட்டமைப்புடனான பேச்சுத் தோல்வி அடைந்தால், சர்வகட்சிக் குழு ஒன்றை அமைத்துக் கூட்டமைப்பின் பங்களிப்பு இல்லாமலேயே ஓர் அரசியல் தீர்வை உருவாக்க அரசு திட்டமிடுகிறது. கூட்டமைப்பு மட்டுமன்றி ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. ஆகியவையும் உத்தேச சர்வகட்சிக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்கப் போவதில்லை என்பதில் திட்டவட்டமாக உள்ளதாகத் தோன்றுகிறது. இந்த மூன்று கட்சிகளும் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தலைமையிலான சர்வகட்சி மாநாட்டைப் பகிஷ்கரித்தன. நாடாளுமன்ற தெரிவுக் குழுவையும் பகிஷ்கரித்தன. சர்வகட்சிக் குழுவைப் பொறுத்தவரையும் அதே நிலைப்பாடுதான்.

அரசு தன்னிச்சையாக ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமா? இது சாத்தியமாகுமா?

தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளான கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி ஓர் இணக்கத்துக்கு வருவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். இது அரசுக்கும் நன்கு தெரியும். பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் முட்டுக்கட்டை தொடருமானால் தானாகவே இதுவிடயம் பூதாகரமாகிவிடும்.

இத்தகைய ஒரு சூழமைவில், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் சர்வதேசத்தால். வலிந்து புகுத்தப்படும் நிலை தோன்றக்கூடும். சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். பலரைப் பல காலம் ஏமாற்றலாம். எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற முடியாது. ஏமாற்றுவோருக்கு முடிவுகாலம் வருவதும் வாழ்வியலின் நியதி. அது அரசியலுக்கும் நூறு வீதம் பொருந்தும்.

# தீர்வுக்கான பேச்சை தொடர்வதே தமிழினத்தின் இன்றைய தேவை

## கனடாவில் சுமந்திரன் எம்.பி

மொன்றியல்,ஜன. 24

இலங்கை விவகாரத்தில் கனடிய அரசின் செயற்பாடு எங்களின் மக்களுக்கு பெரிய நம்பிக்கையையும் பேரெழுச்சி யையும் தருகிறது. வெற்றியோ தோல்வியோ தீர்வுக்கான முயற்சிகளை தொடர்வதே தமிழினத்தின் இன்றைய தேவை என கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித் துள்ளார்.

கனடாவில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழ் மக்களின் சார்பில் கனடிய அரசுக்கு நன்றியைத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கனடா இப்படிக் கொள்கை வழி நிற்பது மற்றைய நாடுகளின் இராஜதந்திரிகளுடன் உரையாடும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெரியதொரு பலமாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இப்போது இடம்பெறும் பேச்சுக்களைப் பற்றி பலரும் பலவாறாகப் பேசுகிறார்கள். ஆனால் யதார்த்தின்படி இந்தப் பேச்சில் தொடர்ந்தும் நிலைத்து நின்றாலேயே தமிழர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதோடு இன்றுவரையுமான பேச்சுக்களில் அரசு பல தடவைகள் மறுத்துப் பேச்சுக்கள் தடைப்பட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோள்களை மஹிந்த தரப்பு ஏற்றதால் மாத்திரமே பேச்சு இழுபட்டபடி தொடர்கிறது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கிப் போகவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மக்களுக்கு வேறு தெரிவுகள் இருந்த போதும் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்ததன் மூலம் வழங்கப்பட்ட பொறுப்பை நாங்கள் நிறைவேற்றியேயாக வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளதாகவும் கூறினார்.

வடக்கு கிழக்கு இணைந்த ஒரு தமிழர் தாயகம் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமெனவும், தாயகத்திலுள்ள மக்களிடமும் உலகப்பந்தில் சரியான முடிவுகளை எட்டும் நாடுகளின் தலைமைகளிடமும் இந்தப் பிரச்சினை தீர்க்கப் படவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான உங்களின் ஆதரவை நாங்கள் வேண்டி நிற்கிறோம் என்றும் கூறினார்.

> உலகப்பந்தில் சரியான முடிவுகளை எட்டும் நாடுகளின் தலைமைகளிடமும் இந்தப் பிரச்சினை தீர்க்கப் படவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத் தமிழர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு அமைதி பேணி பேச்சு நடவடிக்கைகளை கவ்னிக்க வேண்டுமெனவும் இதுவொரு சுலபமான செயற்பாடல்ல என்பது தனக்குத் தெரியுமென்றும் ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்களின் பலமானது ஓர் அரசியற் பலமாக மாறி எமது தாயக மக்களின் விடிவுக்கு வழிவகுக்க வேண்டுமெனவும் தாயக மக்களின் சார்பில் கேட்டுக் கொண்டார். (த)

## கொழும்பில் இன்று மெழுகுவர்த்தி பேரணி

ஊடகவியலாளர் பிரகீத் எத் நெலிகொட காணாமல் போய் இரண்டு வருடங்கள் பூர்த்தியடை வதை முன்னிட்டும் வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாகவும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரியும் தாய்மார்கள் மற்றும் உறவினர்களால் மெழுகுவர்த்தி போராட்டமும், பாதயாத்திரையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இன்று மாலை 4.30 மணிக்கு இப்போராட்டம் இடம்பெறவுள்ளது. மெழுகுவர்த்தி ஏந்தியப் போராட்டம் ரயில் நிலையத்திலிருந்து ஜிந்துப்பிட்டி அன்னைவேளாங்கண்ணி தேவாலயம் வரை நடைபெறும். (ப)

## 60 லட்சம் பேருக்கு மனநோய்

கொழும்பு, ஜன.24

இலங்கையின் சனத்தொகையில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்டோர் அதாவது 60 லட்சம் பேருக்கு மேல் பல்வேறு விதமான மனநோய்களுக்கு உள்ளாகியுள்ளதாக அங்கொடை தேசிய உளவியல் சுகாதார ஆய்வகத்தின் பணிப்பாளரான உளவியல் மருத்துவ நிபுணர் ஜபான் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டு காலத்துக்குள் நாட்டிலுள்ள மனநோயாளர்களின் எண்ணிக்கை நூறில் இரண்டு என்ற வீதத்தில் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடும் மனத் தாக்க நோய்களினால் 1.5 வீதமானோரும் கடும் விரக்தி நிலைக்கு உள்ளாகியுள்ள 12 வீதமானோரும், மனநோயாளிகளாக 18 வீதமானோரும் அவஸ்தைப் படுவதாக மேற்படி வைத்திய சாலைப் பணிப்பாளர் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக நாளாந்தம் 70 பேர் வரையான நோயாளர்கள் வருவதாகவும் ஒரு நாளில் 30 வரையான நோயாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார். (த-22)

# காணி, பொலிஸ் அதிகாரம் பிள்ளையானும் ஆதரவு

## சம்பந்தனுக்கு அவர் கடிதம்

மட்டக்களப்பு,ஜன 24

வடக்கு கிழக்கு இணைப்பு தவிர்ந்த காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் நானும் எனது தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் தங்களுடன் ஒருமித்த கருத்துடனேயே உள்ளோம்' என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு இணைப்பு தவிர்ந்த காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் நானும் எனது தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் தங்களுடன் ஒருமித்த கருத்துடனேயே உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அக் கடிதத்தில் முதலமைச்சர் சந்திரகாந்தன் மேலும் தெரிவித்துள் ளதாவது:

அரசுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த 18 மாதங்களாக 15 சுற்றுக்களாக நடத்தி வரும் பேச்சுக்களில் பேசப்படும் விடயங்கள், தமிழ்மக்களின் சார்பாக கூட்டமைப்பினரால் முன்வைக்கப்படும் அதிகாரப்பகிர்வுக்கான யோசனைகள் இதுவரை கூட்டமைப்பினரால் தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கோ, நாட்டுக்கோ பகிரங்கப்படுத்தப்படவில்லை.ஆனாலும் அண்மைக் காலமாக ஊடகங்களிலும் அரச தரப்பினராலும் வெளியிடப்படும் கருத்துக்களின் அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது அரசுடன் மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் வடக்கு கிழக்கு இணைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பேச்சு நடத்துவதாக ஊகிக்க முடிகின்றது.

எமது ஊடகம் உண்மையாக இருக்குமானால் வடக்கு கிழக்கு இணைப்பு தவிர்ந்த காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் நானும் எனது தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் தங்களுடன் ஒருமித்த கருத்துடனேயே உள்ளோம். வட கிழக்கு இணைப்பின் சாத்தியப்பாடு குறித்தும் அதில் கிழக்கு மாகாண மக்களது அபிலாசைகள் பற்றியும் தங்களுடன் விரிவாக கலந்துரையாட நாம் தயாராகவுள்ளோம்-என்றுள்ளது.

# நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பாடத்தெரிவு தொடர்பான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(த-313)

**மெய்வன்மைப் போட்டி**

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பிற்பகல் 1மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் வே. அரசகேசரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய்க் கோட்ட கல்வி அதிகாரி வே. பாலசுப்பிரமணியம் கலந்துகொள்வார். (த-11)

**அடிக்கல் நாட்டுவிழா**

தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தில் புதிய கட்டத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா மு.ப. 10 மணிக்கு தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் தெற்கு வீதியில் இடம்பெறும். இதில் வட மகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொள்வர்.(ங-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனாளிகளாக மாறிய வீட்டுப் பயனாளிகள்

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடுகளை அமைக்கும் பயனாளிகள் கடனாளிகளாக மாறியுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசா தெரிவித்துள்ளார்.

கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

**காணிகளின் ஆவணங்களையும், நகைகளையும் வங்கிகளில் வைத்துப் பணம் பெற்று வீடுகளை அமைக்கும் பயனாளிகள்.**

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத் திட்டங்களைப் பொறுத்தவரையில் 3 லட்சத்து 35 ஆயிரம் என்பது ஒரு நிறைவான நிதியுதவியல்ல. அரசினுடைய ஒழுங்கமைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக இந்த நிதி ஒதுக்கப்பட்டாலும், எமது பிரதேசத்தில் இருக்கக் கூடிய சில நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன.

நிதிப் பற்றாக்குறை காரணமாகப் பல பயனாளிகள் இன்று கடனாளிகளாக மாறியுள்ளனர். காணிகளின் ஆவணங்களையும், நகைகளையும் வங்கிகளில் வைத்துப் பணம் பெற்று வீடுகளை அமைக்கும் பயனாளிகள் பலர் இங்கு உள்ளனர். 5 லட்சம் வரையான நிதி ஒதுக்கீடு ஓரளவுக்கு நியாயமானதாகவுள்ளது.

7 லட்சம் வரையான நிதி வழங்கினால் மக்கள் வீட்டுத் திட்டத்தின் காரணமாகக் கடனாளிகளாக மாறியிருக்க மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (க-410-6)

## உவராகும் ஆபத்து

அக்கராயன், ஜன.24

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தின் சில பகுதிகள் உவராகும் ஆபத்தை எதிர் கொண்டுள்ளன.

இந்தக் கிராமத்தின் மேட்டுக் காணியொன்றின் ஆரம்பத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொதுக் கிணறு ஒன்றின் நீர் உவர் நீராகக் காணப்படுகின்றது. இங்குள்ள நிலப் பகுதிகள் உவர்த் தன்மை கொண்டதாக மாறிவருகின்றன.

மேலும் இங்குள்ள பெரிய மரங்கள் அழிந்து வருகின்றன. இதேவேளை வயல் நிலங்களின் சில பகுதிகளில் உவர்த் தன்மை அதிகரித்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமம் உவர் ஆபத்தை எதிர்கொண்டுள்ள நிலையில் மரங்களைப் பாதுகாப்பதற்குக் கிராம மக்கள் அக்கறை செலுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-410)

## இறுதிப் போரின் சாட்சியாக...

*அக்கராயன், ஜன.24*

*முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு நகரம் இறுதிப் போரின் சாட்சியாக விளங்குகிறது.*

*புலிகளின் நிர்வாகத்தின் போது முக்கியநகரமாகத் திகழ்ந்த புதுக்குடியிருப்பின் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதி தவிர ஏனைய பகுதிகள் வெடிபொருள்களையும், போரின் சுவடுகளையும், இடிபாடுகளையும் தாங்கியவாறு காணப்படுகின்றன.*

*புதுக்குடியிருப்பு நகரில் காணப்பட்ட பெரிய மரங்கள் வெடிபொருள்களின் தாக்கத்தினால் அழிந்த நிலையில் உள்ளன.*

*பனை, தென்னை என்பன தலையில்லாமல் முண்டங்களாகக் காட்சியளிக்கின்றன. அநேகமான காணிகளில் பெரும் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன. பெரிய மரங்களில் புதைந்திருக்கும் வெடிக்காத எறிகணைகள் அச்சமூட்டுவதாக உள்ளன. மொத்தத்தில் புதுக்குடியிருப்பு நகர் போரின் அழிவிலிருந்து மீளாத நகராகவே இன்றும் காணப்படுகின்றது.* *(க-410)*

## மோசமான நகர வீதிகள்

அக்கராயன், ஜன.24

முல்லைத்தீவு நகரத்தின் வீதிகள் புனரமைக்கப்படாது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

கடற்கரையிலிருந்து நகரினூடாகச் செல்லும் செல்வபுரம் வரையான இரண்டு கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. மக்கள் குன்றும் குழியுமான வீதியூடாகவே மிகுந்த சிரமத்துடன் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

ஆழிப்பேரலை இடம்பெற்றபோது பெரும் அழிவுகளை இந்த வீதி சந்தித்திருந்தது. பெருமளவான மக்களின் நடமாட்டம் இந்த வீதியின் ஊடாகவே இடம்பெறுகின்றது. மக்களின் போக்குவரத்துக்கு மிகவும் இலகுவாக இந்த வீதியைப் புனரமைக்குமாறு இந்தப் பகுதியிலுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-410)



*அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்ற தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழாவின்போது மாணவர்கள் அணிவகுப்புடன் அழைத்து வரப்படுகின்றனர்.*

## கமக்கார அமைப்புக்கள் யாவும் சிறப்பாகச் செயற்பட வேண்டும்

அக்கராயன், ஜன.24

கமக்கார அமைப்புக்கள் சிறப்பாகச் செயற்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் அம்பலப் பெருமாள்குளம் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

கமக்கார அமைப்புக்கள் கிராமிய மட்டங்களில் சிறப்பாக இயங்க வேண்டும். அப்போதுதான் கிராமங்களில் சிறந்த விவசாய முன்னேற்றங்களை எட்ட முடியும். மக்கள் மீள்குடியமர்ந்த இடங்களில், கமக்கார அமைப்புக்கள் இயங்குவதில் சவால்கள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் சமாளித்து சிறந்த சேவைகளைக் கமக்கார அமைப்புக்கள் ஆற்ற வேண்டும்.

அம்பலப் பெருமாள் குளம் கமக்கார அமைப்பு, துணுக்காயில் இயங்கி வரும் ஏனைய 20 அமைப்புக்களை விடச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. அத்துடன் கிராமத்தின் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றி வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-410)

## பணப் பரிசில் வழங்கி கௌரவிப்பு

பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதிபெற்ற மாணவர்கள் பணப்பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கே இந்தக் கௌரவம் கிட்டியுள்ளது.

இந்தப் பாடசாலையிலிருந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்வதற்கான தகுதியைப் பெற்ற வில்வராசா தேனுகா விஜயகுமார் தீபா, கணேசன் ஜீவப்பிரியா, சோமசுந்தரம் ஜதீஸ், இரத்தினம் பிரியங்கா, இலட்சுமிகாந்தன் கிருபனா ஆகிய மாணவர்களே பணப்பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்கள் ஆவார்.

இவர்களுக்கு இராணுவ உயரதிகாரிகளான பிரிகேடியர் பனன்வெல, மேஜர் அகமட் ஆகியோர் பணப் பரிசில்களை முல்லைத்தீவு அரச அதிபர் ஊடாக வழங்கியதோடு தமது பாராட்டுக்களையும், ஆசீர்வாதத்தையும் தெரிவித்தனர்.

இத்தகைய செயற்பாடுகள் எதிர்காலத்தில் ஏனைய மாணவர்களுக்கும் உந்து சக்தியாக விளங்குமெனப் பலரும் தெரிவித்தனர். (க-500)

## திரும்பிச் செல்லும் கடிதங்கள்

முல்லைத்தீவு, ஜன.24

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சரியான முழு விலாசம் குறிப்பிடப்படாத கடிதங்கள் விநியோகிக்கப்படாமல் திரும்பிச் செல்கின்றன.

வங்கிகளிலிருந்தும், அரச திணைக்களங்களிலிருந்தும் அனுப்பி வைக்கப்படும் முக்கியமான கடிதங்களும் சரியான முழுமையான விலாசங்கள் இல்லாமையால் திரும்பிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

மேலும் முத்துஐயன் கட்டில் உள்ள காணிகளுக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கு வசிப்பவர்கள் காணி இலக்கங்களைக் குறிப்பிடுவதில்லை. ஏனையவர்கள் தமது வீட்டு இலக்கங்களையும் தெரிவிப்பதில்லை. இதனால் இவர்களுக்கான கடிதங்களை ஒழுங்காக விநியோகிக்க முடியாது தபால் ஊழியர்கள் சிரமப்படுகின்றனர்.

மேலும் பண்டாரவன்னி, பேராறு 3 ஆம் கண்டம், கணேசபுரம் ஆகிய கிராமங்கள் கற்சிலைமடுவை அண்டி இருப்பதால் அங்குள்ளவர்கள் தமது விலாசங்களை வழங்கும்போது கற்சிலைமடு என்றே குறிப்பிடுகின்றனர்.


இதைவிடுத்துத் தமது இடங்களின் பெயர்களைக் குறிப்பிட வேண்டுமெனத் தபால் நிலையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## இன்னமும் அனுமதியில்லை

துணுக்காய், ஜன.24

தாம்போதி வேலைகள் பூர்த்தியடைந்த போதிலும் பாவனைக்குத் திறந்து விடப்படாததால் மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் செல்வபுரம் செல்லும் பிரதான வீதியில் இந்தத் தாம்போதி அமைந்துள்ளது. ஆனால் இதன் புனரமைப்பு வேலைகளில் சில, பூர்த்தியாகாததால் இதுவரை மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படவில்லை. இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.



இது தொடர்பாக வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப அதிகாரி இ.சுதர்சன் கருத்துத் தெரிவிக்கும்போது; கிரவல் மண் கொண்டு தாம்போதியின் இருமருங்கும் மண் அணைக்க வேண்டியுள்ளது.

மேலும் சிமெந்து இட்டுச் செம்மைப்படுத்தவும் வேண்டியுள்ளது. தற்போது இங்கு காணப்படும் நீர் வற்றியதும் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுப் பூர்த்தியடைந்து விடும். அதன் பின்னர் தாம்போதி, மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படும் என்றார். (க-415)

## கிளிநொச்சியில் வர்த்தகர்களால் இடையூறு

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் ஒருசிலர் சந்தை நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

**நடைமுறைகளைச் சிலவணிக நிலைய உரிமையாளர்கள் கடைப்பிடிப்பதில்லை. இதனால் ஏனையவர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.**

அம்பாள்குளம் பகுதியில் இயங்கி வரும் கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் போக்குவரத்துக்கும், ஏனைய வர்த்தகர்களுக்கும் இடையூறு ஏற்படாத வண்ணம் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனச் சந்தை நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நடைமுறைகளைச் சில வணிக நிலைய உரிமையாளர்கள் கடைப்பிடிப்பதில்லை. இதனால் ஏனையவர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

மரக்கறி வாணிபத் தொகுதியில் வணிக நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் ஒரு சில வர்த்தகர்கள் சந்தை நிர்வாகச் சட்டங்களைக் கடைப்பிடிக்காது அத்து மீறிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடன் சந்தை நிர்வாகம் சட்டம் பற்றிக் கூறும் போது இவர்கள் குறிப்பிட்ட சிலரின் உதவியுடன் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

சந்தைப் பகுதியில் வெளியாரின் செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் சட்டத்துக்கு முரணாகச் செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஏனைய வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ஒருவர் இருவரின் செயற்பாடுகளால் ஒட்டு மொத்த வர்த்தகர்களும் நாளாந்தம் சந்தைக்கு வரும் பொதுமக்களும் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்த கலாமிடம் கோரிக்கை

## கடற்றொழிலாளர் சம்மேளனம் மகஜர் ஒன்றையும் வழங்கியது



யாழ்ப்பாணம், ஜன.24
இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிடம் வட மாகாண கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று முற்பகல் 11 மணியளவில் வருகை தந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை யாழ். மாவட்ட அரச அதிபர் வரவேற்றார்.

இதன் பின்னர் 11.30 மணியளவில் பழைய பூங்காவினுள் உள்ள வட மாகாண ஆளுநரின் வசிப்பிடத்துக்கு அப்துல் கலாம் சென்றார்.

இந்தியா சார்பில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கேகாந்த், இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கை சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலர் திருமதி ஆர்.விஜயலஷ்மி, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முதலில் அரச அதிபர் பிரதிநிதிகளுடன் அப்துல் கலாம் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துக் கூறுகையில்:

யாழ்.மாவட்டத்தில் சிறப்பான முறையில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் சில பத்திரிகைகளில் தவறான முறையில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

நீங்கள் தற்போது நேரடியாக யாழ்ப்பாணத்தின் நிலைமைகளை பார்க்கும் போது உண்மை உங்களுக்குப் புரியும். விவசாயம், மீன்பிடி துறைகளில் சிறப்பாக எமது மாவட்டம் இருக்கின்றது. துரதிர்ஷ்டவசமாக யுத்தம் காரணமாக அவை பாதிக்கப்பட்டாலும் மீண்டும் தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றன.- என்று கூறினார்.

யுத்தத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் இயங்கின. ஆனால் தற்போது அவை செயலிழந்த நிலையில் உள்ளன என்று இதன் போது யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

இறுதியாக கடற்றொழிலாளர் சமூகங்களின் பிரதிநிதிகள் அப்துல் கலாமை சந்தித்து கலந்துரையாடினர்.

> யாழ்.மாவட்டத்தில் சிறப்பான முறையில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் சில பத்திரிகைகளில் தவறான முறையில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன என்றார் டக்ளஸ்

இதன்போது வடகடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாகவும் அவர்களால் எங்கள் கடல் வளம் அள்ளிச் செல்லப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இந்திய மீனவர்கள் எமது கடலில் அத்துமீறிப் புகுந்து வலைகளை அறுத்துச் செல்வதனால் எங்களது தொழில் பாதிக்கப்படுகின்றது என்று கூறியதுடன் இறுதியில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (ம-15)

## எழிலூட்டப்படும் எழிலூர் கிராமம்

> இந்தக் குடியேற்ற கிராம வீடுகள் அனைத்தும் யுத்தத்தால் சேதமடைந்து புனரமைக்கப்படாதுள்ளன.

கொழும்புத்துறை, ஜன.24
கொழும்புத்துறை எழிலூர் கிராமத்துக்கு வீதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 15 வருடங்களின் பின்னர் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இந்தப் பகுதியில் உள்ள உள்ளக வீதிகள் அனைத்தும் சேதமடைந்து காணப்பட்டன.

தற்போது இந்தப் பகுதியில் வேளாங்கண்ணி ஆலயம் புதிதாக அமைத்து திறந்து வைக்கப்பட்டு மக்கள் குடியமர்ந்து வருகின்றனர். இந்த நிலையில் 5 உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, வீடமைப்பு அதிகார சபையின் உதவியுடன் உருவாக்கப்பட்ட இந்தக் குடியேற்ற கிராம வீடுகள் அனைத்தும் யுத்தத்தால் சேதமடைந்துள்ள போதிலும் புனரமைக்கும் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவுறுகின்ற போதிலும் குடியிருக்கக் கூடிய நிலையில் வீடுகள் இல்லை என்றும் கூறப்பட்டது. (ம-135)

## முதலாம் காலாண்டு மருந்துகள் வந்தன

யாழ்.மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளுக்கான முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டுள்ளதாகச் சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மருந்து வகைகளைச் சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெரும்பாலான வைத்தியசாலைகளில் சில மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவியது.

இந்த நிலையில் தற்போது வாகனம் மூலம் எடுத்து வரப்பட்ட இந்த மருந்து வகைகள் உடனடியானவே வைத்திசாலைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதனை விட ஜனவரி மாதத்துக்கான சத்துணவுகளும் விரைவில் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவுள்ளன என்று கூறப்பட்டது. (ம-17)

# தொழிலுக்காக இந்தியப் படகுகள் வடக்கு வர அனுமதியில்லை

## கடற்றொழிலாளர் கூட்டமைப்பு கூறுகிறது

யாழ்ப்பாணம், ஜன.24
தொழில் நோக்குடன் வரும் இந்தியப் படகுகள் ஒருபோதும் வடபகுதிக் கடலுக்குள் அனுமதிக்கப்படமாட்டா என்று வட மாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வடமாகாணக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் யாழ். செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மீனவப் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை முன்வைத்த போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்திய அரச பிரதிநிதிகள் கொழும்பில் ஒன்று கூடி வெளியிட்ட அறிக்கையும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது மேலும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் கொழும்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்திய மீனவர்களுக்கு சாதகமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துமீறி, சட்டத்தை மீறி வருபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பது வேதனைக்குரிய விடயமாக உள்ளது. கடலில் ஏற்படும் புயல் இயற்கை அனர்த்தங்களின் போது இந்திய மீனவர்கள் வட கடலில் தஞ்சமடையும் போது மனித நேய உதவிகளை வழங்குவோம். ஆனால், தொழில் நோக்குடன் வரும் இந்தியப் படகுகளை ஒரு போதும் எமது எல்லைக்குள் அனுமதிக்க மாட்டோம் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இருநாட்டு மீனவக் குழுக்களுக்கான கலந்துரையாடல் மிகவும் தேவையாக உள்ளது. ஒரு மீனவக்குழுவை இந்தியாவுக்கு அனுப்ப எடுத்த முடிவு வரவேற்கத்தக்கது. எனினும் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடும் போது வடபகுதி மீனவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

## நவீன முறையில் இருமாடிக் கட்டடம்



யாழ்ப்பாணம், ஜன.24
வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கென புதிய இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடற்கரைவீதியில் அமைந்திருக்கும் இந்த புதிய கட்டடம் சீன அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றதை அடுத்து சமய ரீதியான கிரியைகளும் இடம்பெற்றுள்ளன.

நவீன வசதிகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் விரைவில் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-17)

# வெளிநாட்டு இராஜதந்திரிகள் இந்துக்களையும் சந்திக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஜன.24
வடபகுதி மக்களின் குறைநிறைகளை நேரில் அவதானிப்பதற்கு வருகை தரும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தையும் சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

> மக்களது குறைநிறைகளைக் கேட்டறிவதற்காக வடபகுதிக்கு வரும் வெளிநாட்டு இராஜ தந்திரப் பிரதிநிதிகளுக்கு தேவையான தகவல் வழங்கப்படும்

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

ஒன்றியத்தின் மாதாந்த ஆன்மிக சஞ்சிகையான சிவானந்தம் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு ஆனைப்பந்தியிலுள்ள ஒன்றியத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபரிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனையடுத்தே அரச அதிபர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த நிகழ்வில் ஒன்றியத் தலைவர் தெரிவித்ததாவது:

மக்களது குறைநிறைகளைக் கேட்டறிவதற்காக வடபகுதிக்கு வரும் வெளிநாட்டு இராஜதந்திரப் பிரதிநிதிகள் எமது ஒன்றியத்தையும் சந்தித்து தற்போதைய நிலவரம் குறித்து அறிந்து கொள்ள வேண்டும்.

அதற்கான ஏற்பாடுகளை அரச அதிபர் மேற்கொள்ள வேண்டும்.

வடக்கில் அதிகமாக இந்து மதம் சார்ந்தவர்களே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் மக்களது பிரச்சினைகள், தேவைகள் என்பன பற்றி எமது ஒன்றியம் தெளிவு படுத்துவதற்குத் தயாராக இருக்கிறது.- என்றார். (ம-14-04)

# தீவுப் பகுதியில் தொற்றுநோய் பீடிக்கப்படுவோர் அதிகரிப்பு

தீவுப்பகுதியில் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டுவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துக் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக வேலணை அரசினர் வைத்தியசாலையில் தினமும் 75 இற்கும் மேற்பட்டோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய காலநிலை வேறுபாடு மற்றும் கடும் பனி போன்றவற்றாலேயே அதிகமானவர்களுக்கு இந்த நோய் ஏற்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அதனை விட, காய்ச்சல் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் மக்களை வாட்டி வருகிறது.

காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை யாழ். ஆஸ்பத்திரியில் அதிகரித்துக் காணப்படுகிறது. வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இந்த காய்ச்சலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுச் செல்வோரின் எண்ணிக்கை இந்த வாரத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது என தகவல் தெரிவிக்கின்றது.

அதைவிட தனியார் வைத்தியசாலைகளிலும் பெரும் எண்ணிக்கையானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.12.379 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் யாழ்.ஆஸ்பத்திரிக்கு

## கனேடிய அபிவிருத்திச் சங்கம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜன.24


கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் கனேடிய மருத்துவ மற்றும் கனேடிய பல் அபிவிருத்திச் சங்கத்தால் 12.379 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

எதிரொலி இதயத்துடிப்பு பதிவுக்கருவி ஈ.சி.ஜி இயந்திரம், தானியங்கி இரத்த அழுத்தக் கண்காணிப்புக் கருவிகள் என்பன இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை வைபவரீதியாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் இதய ஆய்வு கூடப் பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக் கானகடைாதுதுவர் புரூஸ்லீவி, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பி.ஜி. மகிபாலா, றோட்டரி 3220 மாவட்ட ஆளுனர் றொட்டேறியன் பி.எச்.எவ்.ஸ்ரீபத்தனா, கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத் தலைவர் றொட்டேறியன் பி.எச்.எவ். வி.ரமணா, கொழும்பு றோட்டறிக் கழக முன்னாள் தலைவர் எம்.பி. ஏச்.எவ்.எ. எம் முபாரக் ஆகியோர் கொண்ட குழுவினர் கலந்து கொண்டனர். வரவேற்புரையை யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதி ராஜா நிகழ்த்தினார். வருகை தந்த றோட்டறிக் குழுவினர் தமது செயற்றிட்டம் தொடர்பாக விளக்கம் அளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.





அதனைத் தொடர்ந்து நன்றியுரையை யாழ்.போதனா வைத்திய சாலையின் இதய நோய்ப்பிரிவு டாக்டர் பூபா லன் லக்ஷ்மன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் கொழும்பு றோட்டறிக் கழக உறுப்பினர்கள், யாழ் போதனா வைத்தியசாலை இதய நோய்ப்பிரிவு வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ம-313-ரி)

# தந்தையின் அடாவடியால் தன்னை மாய்த்த மகள்

யாழ்ப்பாணம், ஜன.24

தினமும் மது போதையில் வீட்டுக்கு வந்து தனது தாயுடன் சண்டையிடும் தந்தையின் அட்டூழியங்களைச் சகிக்கமுடியாத மகள் தன்னை மாய்த்துக் கொள்ள தனக்குத் தானே ம ண் ெ ண ண் ெ ன ய் ஊற்றித் தீமூட்டிக் கொண்டுள்ளார். பற்றிய தீ உடலின் ஒரு பகுதியைத் தானும் விட்டு வைக்கவில்லை. உயிர்போகும் தறுவாயில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பயனளிக்காது அவர் மரணமானார்.

இதேவேளை தீ மூட்டிக் கொண்ட மகளைக் காப்பாற்றச் சென்ற தந்தையும் எரிகாயங்களுக்குள்ளாகி போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

சிறுப்பிட்டி தெற்கு, கலைஒளி வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் நல்லதம்பி கௌசிகா (வயது-16) என்பவரே மரணமானார். இவரது தந்தையான நல்லதம்பியே வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதா வது:

தந்தையார் தினமும் குடிபோதையிலேயே இரவு வீட்டுக்குப் போய்ச் சேருவார். போனதும் மனைவியுடன் தினமும் சண்டையிலீடு படுவதும் அடாவடித்தனம் புரிவதுமாக செயற்பட்டு வந்துள்ளார். அவர்களது பிள்ளைகள் எவ்வளவோ சொல்லியும் அவர் கேட்ப தில்லை.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை மதுபோதையில் அவர் மனைவியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். இவற்றைப் பொறுக்கமுடியாத அவர்களது ஒரு மகளான கௌசிகா மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டிக் கொண்டுள்ளார்.

இருவரும் கோப்பாய் பிரதேச வைத்திசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர். எனினும் சிசிக்சை பயனளிக்காது கௌசிகா மரணமானார். இவர் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ஜீ.சி.ஈ. சாதாரணதர வகுப்பு மாணவியாவார். யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று மல்லாகம் நீதிவான் கஜநிதிபாலன் மரண விசாரணை மேற்கொண்டார். உடற் கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-4)

## சிறிய வெங்காயம் விலை சரிந்தது

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென சரிந்து காணப்படுகின்றது.

கடந்த டிசெம்பர் மாதத்தில் பெரும்போக வெங்காயச் செய்கையில் அதிகளவிலான விவசாயிகள் ஈடுபட்டனர்.

இந்த வெங்காய அறுவடைக்கு முன்பாகவே ஏற்கனவே கையிருப்பில் இருந்த வெங்காயம் பெருமளவில் சந்தைக்கு வரத் தொடங்கியதும் அவற்றின் விலை திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

நேற்று திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் 40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

இந்த வெங்காயம் கடந்த வாரத்தில் கிலோ 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

வெங்காயத்தின் விலை திடீரெனச் சரிந்ததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க தெற்கிலிருந்து பெரிய வெங்காயமும் கூடுதலாகத் தருவிக்கப்பட்டுள்ளது.இந்தப் பெரிய வெங் காயம் கிலோ 45 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின் றது.

பெரிய வெங்காயத்தின் இறக்குமதியாலேயே சிறிய வெங்காயத்தின் விலை சரிந்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே உள்ளூர் விவசாயிகளின் நலன்கருதி பெரிய வெங்காய இறக்குமதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்றும் விவசாயிகள் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (ம-17)

## அப்துல் கலாம் கேள்வி; மௌனமான மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜன.24

'பல்கலைக்கழகத்தில் நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள துறை மூலம் இலங்கையை மேம்பாடு அடையச் செய்வீர்களா?'' என்று இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கேட்ட கேள்விக்கு யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் மௌனத்தையே பதிலாகக் கொடுத்தனர்.

யாழ்.பல்கலைக்கழக சகல பீடங்களிலும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் முன்னிலையில் கைலாசபதி கலையரங்கில் நேற்று கலாம் உரையாற்றினார். அதன்போதே அவர் அங்கிருந்த மாணவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார். தான் எழுதிய அவரின் தன்நம்பிக்கை ஊட்டும் கவிதைகளை கலாம் சொல்லிக் கொடுக்க அதை உற்சாகத்துடன் உரத்த குரலில் சொல்லிக்கொண்டிருந்த மாணவர்கள் கலாமின் கேள்விக்கு மட்டும் பதிலளிக்க முடியாது தயங்கியதை அவதானிக்க முடிந்தது.

அதுவரையும் கலாமின் கவிதைகளால் அதிர்ந்த கைலாசபதி கலையரங்கு 'இலங்கை மேம்பாடடைய உழைப்பீர்களா?' எனக் கலாம் கேட்ட கேள்வியால் அமைதியானது.

(த-14)

## மந்திகள் பாய்ந்து மாணவிகள் காயம்

சாவகச்சேரி, ஜன.24

குரங்குகள் பாய்ந்து சென்றதால் பாடசாலை வகுப்பறைக்குப் பொருத்தப்பட்டிருந்த நான்கு அடி நீளமான ஜன்னல் திடீரென சரிந்து வீழ்ந்ததில் நான்கு மாணவி கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கல் வயலைச் சேர்ந்த குகன் சஜிதா (வயது-12) என்னும் தரம் 7 மாணவிக்கு தலையிலும் இடுப்பிலும் காயமேற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனைய 3 மாணவிகள் சிறு காயங்களுக்கு இலக்காகி வீடு திரும்பினர். வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் குரங்குகள் பாய்ந்து சென்றதால் ஜன்னல் சரிந்து வீழ்ந் ததாக தெரிவிக்கப்பட்டது.

(ம)

## பார்வை படாத நிலையில் கழிவுநீர் வடிகால்



கழிவுநீர் ஓடும் கால்வாய் அதற்கு மேல் குடிமனை

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.குருநகர்ப் பகுதியில் உள்ள கழிவுநீர் வடிகால் ஒன்று சுகாதாரப் பிரிவினரின் பார்வை படாத நிலையில் துர்நாற்றம் வீசி உள்ளது

இந்த வடிகாலின் நிலை யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவுக்கோ அல்லது டெங்கு ஒழிப்பு பிரிவுக்கோ தெரிய வில்லையா? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கடற்கரை வீதியில் உள்ள இந்த வடிகாலின் மேல் குடிமனை ஒன்று அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மக்கள் செறிந்து வாழும் இந்தப் பகுதியூடாகச் செல்லும் வடிகாலில் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதோடு நுளம்பின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இப்படிப்பட்ட கால்வாயினால் டெங்கின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-12)

# யாழ்.மாநகர சபைப் பிரிவில் 17 பேருக்கு எதிராக வழக்கு

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் எதிரொலி

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ். மாநகரசபைப் பிரிவுக்குட்பட்ட 7 வலயங்களில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புத் தீவிர நடவடிக்கைகளின் போது 17 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையின் ஏற்பாட்டில் கடந்த 16 ஆம் திகதி முதல் 22 ஆம் தகதி வரை பசார் I,II நாவாந்துறை, கொழும்புத்துறை, குருநகர் I,II, அரியாலை, வண்ணார் பண்ணை, நல்லூர் ஆகிய இடங்களில் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் செயற் திட்டத்தின் போது 3 ஆயிரத்து 227 நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பசார் I,II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 349 நிலையங்களும், நாவாந்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 313 நிலையங்களும், கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 339 நிலையங்களும், குருநகர் I,II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 677 நிலையங்களும், அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 457 நிலையங்களும் வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 591 நிலையங்களும், நல்லூர் பொதுச் சுகாதாரப் பரி சோதகர் பிரிவில் 501 நிலை யங்களும் உள்ளடங்களாக 3 ஆயிரத்து 227 நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது 519 இடங்களில் நுளம்பு பெருக ஏதுவான இடங்களாக இருந்தமையும்,32 இடங்களில் நுளம்பின் குடம்பிகள் காணப்பட்ட இடங்களாகவும் கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் பசார் I,II பிரிவு ஒருவருக்கும் கொழும்புத்துறைப் பிரிவு ஒருவரும் குருநகர் பிரிவில் 6 பேருக்கும் அரியாலைப் பிரிவில் ஒருவருக்கும் வண்ணார்பண்ணைப் பிரிவில் ஆறு பேருக்கும், நல்லூர் பிரிவில் இரண்டு பேருக்கும் என 17 பேருக்கு எதிராக நுளம்பு பெருகும் சூழலை வைத்திருந்த குற்றத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் செயற்திட்டத்தின் மூலம் மாட்டீன் வீதி, கல்வியங்காட்டுப்பகுதி, ஆகிய இடங்களில் பெரியளவில் நுளம்பு பெருகும் சூழல் காணப்பட்டதையடுத்து புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மாட்டீன் வீதிப் பகுதியில் உள்ள கிணறுகளில் நுளம்புக் குடம்பிகளை அழிக்கவல்ல மீன்கள் விடப்பட்டுள்ளன.

(ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட தொழிலாளர்களை இனவாதிகளால் அடக்கமுடியாது

மனித உரிமை மீறல்களுக்கும், படுகொலை கலாசாரத்திற்கும் முதன்மை பெற்று விளங்கும் இலங்கைக்கு தோட்டப் பகுதியில் இடம்பெறும் அடக்குமுறைகளால் சர்வதேசத்தில் தேயிலைச் சந்தையில் வீழ்ச்சி ஏற்படுவது நியாயமாகும். தொழிலாளர்களை கசக்கிப் பிழிபவர்களுக்கு இது படிப்பினையாகும் என்று ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி. யோகராஜன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நுவரெலியா, ஜன.24

வடக்கு, கிழக்கு மக்களை அரசும், இராணுவமும் அடக்கி ஆள்கின்றார்கள். மலையகத் தோட்டப்புறத்தை இனவாதிகளும், தோட்டத் தலைவர்களும் அடக்கியாள நினைக்கிறார்கள். அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மஸ்கெலியா, அப்புகஸ்தன்னை மேல் பிரிவில் இலங்கை தேசியதோட்டத் தொழிலாளர் சங்க வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு ஒப்பந்தத்தில் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கான 515 ரூபா நாளாந்த சம்பளத்தைக் குறைத்து வழங்குவதற்கு கம்பனிகளுக்கு உரிமையோ, அதிகாரமோ கிடையாது. தொழிலாளர்களின் பாதுகாப்புக்கும், தொழில் உரிமைகளுக்கும் முழுமையான சட்டபூர்வமான சம்பளத்துக்கும் ஆபத்து வராமல் காப்பதற்கு தொழிற்சங்க பேதங்களை மறந்து தொழிலாளர்கள் ஓரணியில் திரள வேண்டும்.

வெள்ளைக்காரர்களின் அதிகாரப் போக்குக்கும் மேலாக தற்போதைய கருப்பு தலைவர்களின் நிர்வாகிகள் குறுநில மன்னர்களைப் போல் தொழிலாளர்களை அடிமைப்படுத்தி இம்சித்து வருவது ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகும்.

நீதிக்குப் புறம்பான முறையில் அடக்குமுறையை மேற்கொண்டுள்ள இனவாதிகளுக்குத் தகுந்தபாடம் புகட்டவேண்டும். தொழிலாளர்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து நிர்வாகத்துடன் பேச்சுநடத்த தோட்டங்களுக்கு வருகை தரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், இரண்டு கிலோ தேயிலைத் தூளும், தமது வாகனத்திற்கு பத்து லீற்றர் டீசலையும் அனுபவித்து விட்டுப்போகின்றனர் என்ற தொழிலாளர்களின் முறைப்பாடுகள் உண்மையானவை என்ற இரகசியமும் தற்போது வெளியாகியுள்ளது.

இந்த தொழிற்சங்கவாதிகள் தொழிலாளர்களை ஏலம்போடும் அவலத்துக்கு எதிராகத் தொழிற்சங்க பேதமின்றி ஒன்றிணைந்து தொழிலாளர்களைக் காட்டிக்கொடுக்கும் சந்தர்ப்பவாத தொழிற்சங்கவாதிகளுக்கு தகுந்தபாடம் புகட்ட வேண்டும். கம்பனிகளுக்கும், தோட்ட நிர்வாகிகளுக்கும் சார்பாகப் பேசி தொழிலாளர்களுக்கு எதிராக செயற்படும் தொழிற் சங்கங்களின் போலித்தனத்தை அம்பலப் படுத்தவேண்டும்.

மனித உரிமை மீறல்களுக்கும், படுகொலை கலாசாரத்துக்கும் முதன்மை பெற்று விளங்கும் இலங்கைக்கு தோட்டப்பகுதியில் இடம்பெறும் அடக்குமுறைகளால் சர்வதேச தேயிலைச் சந்தையில் வீழ்ச்சி ஏற்படுவது நியாயமாகும். தொழிலாளர்களை கசக்கிப்பிழிபவர்களுக்கு இது படிப்பினையாகும்- என்றார். (ச)

# கல்வியில் உயர்வடைந்தால் இழந்தவற்றைப் பெறலாம்

நமது சமூகம் இழந்தவைகளை வென்றெடுக்க வேண்டுமாயின் எமது இனம் கல்வியில் உயர்ந்த நிலையை எட்ட வேண்டும் என்கிறார் திருமலை நகர சபைத் தலைவர்.

மூதூர், ஜன.24

கல்வியறிவு இல்லாமல் எந்த இனமும் உயர்ந்த நிலைக்குச் சென்றுவிட முடியாது. தமிழினம் இழந்தவற்றை வென்றெடுக்க வேண்டுமாயின் கல்வியில் உயர்ந்த நிலையை எட்ட வேண்டும். இல்லையேல் தமிழினம் பின்நோக்கிய துர்ப்பாக்கிய நிலைக்கே தள்ளப்பட்டுவிடும் என்று திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா தெரிவித்தார்.

திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியில் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நமது தமிழர்கள் மெய்ப்பாடுகளை எட்டாகவும், இசையை ஏழாகவும், சுவையை ஆறாகவும், நிலத்தை ஐந்தாகவும், காற்றை நான்காகவும், தமிழை மூன்றாகவும், வாழ்க்கையை அறம், புறம் என இரண்டாகவும் கண்டார்கள். ஆனால், தமிழர்களாகிய நாம் ஒன்றாகி நின்று நம் அறிவியல் தளத்தை, கல்வியை உயர் நிலைக்கு இந்த நூற்றாண்டில் கொண்டு செல்ல வேண்டும்.

இதற்கான வழியை நாம் செய்யவேண்டும். அறிவியலில் நாம் உயரவேண்டும். தமிழும் வாழவேண்டும். கல்வி இல்லாமல் எச்சமூகமும் உயர் நிலைக்குச் சென்றுவிட முடியாது. நமது சமூகம் இழந்தவைகளை வென்றெடுக்க வேண்டுமாயின் எமது இனம் கல்வியில் உயர்ந்த நிலையை எட்ட வேண்டும்.

பறவைகள் பழத்தைச் சாப்பிட்டுவிட்டு தமது சொண்டுகளில் பல மரங்களுக்கான விதைகளைச் சுமந்து செல்கின்றன. இதே போன்றதுதான் கல்வியறிவும். ஒருவர் தான் கற்றவற்றைக் கொண்டுசென்று பல சமுதாயங்களுக்கு அறிவூட்டுகிறார். எனவே, எமது மண்ணில் புதுயுகம் படைக்க நீங்கள் முன்வரவேண்டும்.

மாணவர்களே! வறுமைக்கும், வளமின்மைக்கும் நீங்கள் ஒருபோதும் பயந்துவிடாதீர்கள். இவற்றை முறியடித்துக்கொண்டு நீங்கள் சாதனையாளராக சாதனைகள் படைக்கவேண்டும். சாதாரணமாக இருந்த உங்களை சாதனையாளர்களாக மாற்றும் ஆசிரியர்களையும் அதற்கு உறுதுணையாக இருக்கும் பெற்றோரையும் நாம் எப்போதும் மறக்கக் கூடாது. - என்றார் . (ச)

## புதையல் தோண்டிய ஐவர் கைது

மட்டக்களப்பு,ஜன.24

மட்டக்களப்பு - மாவலியாறு பிரதேசத்தில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த ஐவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டபோது இந்த இடத்தில் இருந்த மேலும் ஐந்து பேர் தப்பியோடியதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து பூசை பொருள்கள், உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. (ச)



சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைப்பதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில்வரை வீதியோரங்களில் விழிப்புணர்வு பதாகைகள் நடப்படுகின்றன.

## பொலிஸ் அதிகாரிகள் இடைநிறுத்தம்

கண்டி, ஜன.24

கண்டி, தவுலகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் உதவிப் பொறுப்பதிகாரி ஆகிய இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் கடமையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்று உடைத்து கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பான முறைப்பாடு குறித்து விசாரணை மேற்கொள்ளத் தவறியதன் காரணமாகவே இவர்கள் பொலிஸ் மா அதிபரால் கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

## வைத்திய நிபுணருக்கு இப்படியும் ஓர் ஆசை!

திருகோணமலை, ஜன. 24

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர் தனக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற சிற்றூழியர்களுக்கான விசேட கூட்டமொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தான் வாகனத்திலிருந்து இறங்கிவரும்போது வெளிநோயாளர் பிரிவுகளில் கடமைக்காக அமர்த்தப்படுபவர்கள் தன்னைக் கண்டு எழும்பி மரியாதை செய்வது இல்லையென அவர் கூறியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தனக்கு உரித்தல்லாத கடமைகளையே இவர் செய்து வருகின்றார் என்று சிற்றூழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

''வைத்தியசாலைப் பணிப்பாளர் நோயாளர்களுடனும், ஊழியர்களுடனும் அன்பாக பழகுகின்றார்; அப்படியான ஒருவர் கூறாத கருத்துக்களை வைத்திய நிபுணர் கூறுவது கவலைக்கிடமாகவுள்ளது'' எனவும் சிற்றூழியர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

## வெடிபொருள் மீட்பு

கல்முனை,ஜன.24

கல்முனை - ஒஸ்மன் வீதியில் நேற்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

ஒஸ்மன் வீதியில் பொதியொன்றில் வெடிபொருள்கள் காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ச)

# டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்தோருக்கு வழக்கு

மட்டக்களப்பு,ஜன.24

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலை வைத்திருந்த 19 பேருக்கு எதிராக வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் வாழைச்சேனைப் பொலிஸாரால் வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

ஓட்டமாவடிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலை வைத்திருந்த 15 பேரும் கோறளைப்பற்று பிரதேசத்தில் 4 பேரும் இனங்காணப்பட்டுள்ள நிலையிலேயே இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் 30 பேர் டெங்கு நோயாளர்கள் என்று இனங்காணப்பட்ட போதிலும், இதில் 24 பேர் டெங்கு நோயாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் 15 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட போதிலும் 8 பேர் டெங்கு நோயாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார். (ச)

## ரயில் தண்டவாளங்களை கழற்றியோர் கைது

நாவலப்பிட்டி ரயில் நிலையத்திற்கு அருகில் தண்டவாளங்களை கழற்றிய மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நபர்கள் ரயில் நிலையத்திற்கு அருகில் தண்டவாளங்களையும், இரும்புக் கம்பிகளையும் கழற்றியதாக் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தன் - பிள்ளையான் சந்திப்பு

கொழும்பு, ஜன.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், கிழக்கு மாகாண முதல்வர் சி.சந்திரகாந்தனுக்கும் இடையே முக்கிய சந்திப்பொன்று இன்னும் சில தினங்களில் இடம்பெறவுள்ளது.

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் முதல்வர் சி.சந்திரகாந்தன், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தையடுத்தே இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என கூட்டமைப்பு வட்டாரங்கள் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தன.

இதற்கமைய சந்திப்புக்கான திகதி உட்பட சில முக்கிய விடயங்கள் உள்ளடங்கிய பதில் கடிதமொன்றை சம்பந்தன், முதல்வர் சந்திரகாந்தனுக்கு அனுப்பிவைப்பார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாணசபைகளுக்கான அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக முதல்வர் சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதன் காரணமாகவே அவர் விடுத்த அழைப்பை கூட்டமைப்பின் தலைமைப்பீடம் சாதகமாகப் பரிசீலித்துள்ளது எனத் தெரியவருகிறது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு, கிழக்கு மாகாண முதல்வர் எழுதிய கடிதத்தில், ''மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பாக நானும், எனது தலைமையிலான கட்சியும் தங்களுடன் ஒருமித்த கருத்துடனேயே உள்ளோம். வடக்கு, கிழக்கு இணைப்பின் சாத்தியப்பாடு குறித்தும் அதில் கிழக்கு மாகாண மக்களது அபிலாஷைகள் பற்றியும் தங்களுடன் விரிவாகக் கலந்துரையாட நாம் தயாராகவே உள்ளோம். எனவே, இந்த விடயங்கள் உட்பட முக்கிய சில விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு இக்கடிதம் கிடைக்கப்பெற்று 15 நாள்களுக்குள் தங்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதிலை எதிர்பார்க்கின்றேன்" எனக் குறிப்பிட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-சி)

(முன்னர் வந்தசெய்தி 03ஆம் பக்கத்தில்)

### பிரசவித்த சிசுவை புதைத்த தாய்

கிளிநொச்சி, .ஸ்கந்தபுரம் பகுதியில் இலக்கம் 2 பாடசாலை வீதியில் நேற்றுமுன்தினம் பெண்ணொருவர் குழந்தை ஒன்றைப் பிரசவித்து வீட்டின் பின்புறம் புதைத்த சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரசவித்த சிசுவை ஏன் புதைத்தார், அதனைக் கொலை செய்து புதைத்தாரா என்பது குறித்த விவரங்கள் ஏதும் தெரியவரவில்லை. சம்பவம் குறித்து தகவல் கிடைத்த கிளிநொச்சிப் பொலிஸார் சிசு வின் சடலத்தை மீட்டெடுத்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஒ-6-319)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திருமதி ஆரபி சிவகுகன்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தேசிய இலக்கிய விழா 2011க்கான கவிதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்.



### திரு. நித்தியானந்தன் மதிரூபன்

தீவக கல்வி வலயத்தில் சங்கீத சேவைக் கால ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்று சென்றமையை இட்டு மனமார வாழ்த்துகின்றோம்.

யா. கொக்குவில் இந்துக் கல்லூரி.

ஆசிரியர் நலன்புரி கழகம்



## சுன்னாகத்தில்

அனைவருக்கும் கணினிக் கல்வி

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.01.2012**

| | |
|---|---|
| Dip. in Microsoft Office | 3000/= |
| Dip. in Office Management | 4000/= |
| Dip. in Computer Application | 6000/= |
| Dip. in Hardware Engineering | 4000/= |
| Dip. in Desktop Publishing (DTP) | 4000/= |
| Dip. in Web Designing | 4000/= |
| Dip. in Accounting Package | 4000/= |
| Dip. in Video & Audio Editing | 6000/= |
| Dip. in Visual Basic Program | 3000/= |
| Cer. in Internet E-Mail | 2000/= |
| Cer. in Adobe Photoshop | 2000/= |
| Cer. in Kids Program | 400/= |

75% கட்டணக் கழிவு

**WINSOFT TECHNOLOGY**
COMPUTER EDUCATION
STATION ROAD, CHUNNAKAM
சுன்னாகம் சிவன் கோயிலுக்கு முன்பாக


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## நாகமணி - கேதீஸ்வரன்



இந்துமா சமுத்திரத்தில்
இலங்கை திருநாட்டில்
உதித்திட்ட
உத்தமனே..
பத்துமாதம் சுமந்து
பெற்றெடுத்த
தாயை
பரிதவிக்கவிட்டுச் சென்றாய்
ஐயா..
தந்தை மனம் குளிர வந்தாய்
ஐயா
சகோதர, சகோதரிக்கு
தம்பியாய்
மச்சான், மச்சாளுக்கு
நண்பனாய்
மருமகன்மாருக்கு மாமனாய்
பெறா மகன்மாருக்கு
சித்தப்பனாய்
நண்பர்களுக்கு சகோதரனாய்..
பாசமோடு வலம்வந்தாய் ஐயா
எங்கள் அருமை சகோதரனே
குட்டியே
உனது அன்பு மழையில்
குளித்தோமையா..
உனது பாசக் கயிற்றால்
கட்டினாய்
ஐயா

அன்னை மடியில்
06
04
1979

ஆண்டவன் அடியில்
25
12
2011

உனது புன்னகை உதிர்ந்து
போனதையா..
உனது மருமகன் குட்டிமாமா
குட்டிமாமா
என்று சொல்லும் போதெல்லாம்
எங்கள் இதய பொக்கிஷம் உடைந்து
போனதையா..
பாலன் பிறப்பிலே உயிர் பிரிந்து
சென்றதையா
உன் நினைவுகள் என்றும்
அழியவில்லை ஐயா..
நினைத்து நினைத்து நெஞ்சம்
கலங்குதையா..
எங்கள் அன்பு குட்டியே..
புதியாண்டில் நீ வருவாய் என்று
உறவோடு உருவாகி வந்துவிடுவாய்
ஐயா..
உறவெல்லாம்
காத்திருக்கிறோமையா
31 நாள்கள் சென்றாலும்
ஆறாதையா உன் நினைவுகள்..
தீராதையா எம் சோகங்கள்

*எமது செல்வப் புதல்வனின் பிரிவுத்துயரில் எம்மோடு துயர் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும், தொலைபேசி மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் இறுதிவரை நின்று சகல உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

நாகமணி - இராசம்மா
குடும்பத்தினர்

## பரிகார பூஜைக்குச் சென்ற மேர்வினின் சகாக்கள்

### முன்னேஸ்வரத்தில் திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, ஜன.24

அமைச்சர் மேர்வின் சில்வாவின் பரிகாரப் பூஜையை முன்னேஸ்வரம் காளிகோவில் பூசகர்கள் ஏற்க மறுத்துவிட்டனர் என்றும், பரிகாரப் பூஜைக்கு அமைச்சர் தனது அடியாட்களை அனுப்பிவைத்ததே இதற்குப் பிரதான காரணம் என்றும் தெரியவருகிறது.

முன்னேஸ்வரம் காளிகோவிலில் நடைபெறவிருந்த மிருகப்பலி பூஜையை அமைச்சர் மேர்வின் அண்மையில் தடுத்து நிறுத்தி ஆலய வளாகத்தில் அடாவடியில் ஈடுபட்டார்.

பல தலைமுறைகளாக இடம்பெற்று வந்த மிருகப்பலிபூஜையை அமைச்சர் மேர்வின் தடுத்து நிறுத்தியமையால் ஆத்திரமுற்ற பூசகர்கள் அவருக்கு இறைதண்டனை வேண்டி யாகம் செய்தனர்.

அமைச்சர் காளிதேவியிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோராவிட்டால் காளிதேவியின் சாபம் அவரை வாட்டி வதைக்கும் எனப் பூசகர்கள் கூறினாலும், தான் எவரிடமும் மன்னிப்புக் கோரப்போவதில்லை என அமைச்சர் மேர்வின் சூளுரைத்ததுடன், கட வுள் தன்னைத் தண்டிக்கமாட்டார் என்றும் உறுதியாகக் கூறினார்.

இவ்வாறானதொரு நிலையில் அமைச்சர் மேர்வினின் கோட்டை எனக் கூறப்படும் களனி அரசியல் களத்தில் அவருக்கு எதிராகப் பல சர்ச்சைகள் ஏற்பட்டன.

களனியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரமுகர்கள் அமைச்சர் மேர்வினின் மோசடிகளை அம்பலப்படுத்தினர். இதனால் அவரின் தேசிய அரசியலும் ஆட்டம் கண்டது.

காளிதேவியின் சாபத்துக்குள்ளாகியுள்ள அமைச்சர் மேர்வின் துர்க்காதேவியிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோராவிட்டால் அவரது வாழ்க்கை விபரீதமாகிவிடும் எனப் பூசகர்கள் அறிவித்தனர். இதனால் பயந்து போன அமைச்சர் மேர்வின் முன்னேஸ்வரம் காளிகோவிலில் பரிகார பூஜை நடத்துவதற்கு முயற்சித்துள்ளார் எனக் கூறப்படுகிறது. முன்னேஸ்வரம் காளிகோவிலுக்கு ஓர் ஆடு சகிதம் குழுவொன்று சென்றுள்ளது. அந்தக் குழுவில் பெண்களும் உள்ளடங்கியிருந்தனர்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் சகாக்கள் எனக் கூறப்படும் அந்தக் குழுவினர் ஆலயத்திற்குள் வரும் முன்னர் ஆலய நிர்வாகத்திற்கு அதுகுறித்தான தகவல் கிடைத்துள்ளது.

இதனால் பூசகர்கள் அமைச்சர் மேர்வினுக்கா பூஜை எனக் கேட்டுள்ளனர். அதற்கு அந்தக் குழுவினர் மேர்வின் என்ற பெயரில் ஒருவர் தான் உலகத்தில் உள்ளாரா? எனக் கேட்டனர். அதனைத் தொடர்ந்து வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் அங்கிருந்து அந்தக் குழு திரும்பிச்சென்றுவிட்டது. (ஒ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை நாகேஸ்வரன்

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை - நாகேஸ்வரன் நேற்று (23.01.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியநாதன் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் சு.நாகேஸ்வரனின் பாசமிகு மனைவி யும் சங்கீதனின் (தென். கிழக்குப் பல்கலைக்கழக மாணவன்) அன்புமிகு தாயும் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் கணக்காளர் வைத்தியநாதன் பூபதியின் அருமைச் சகோதரியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் அம்மன் கோயிலடி,
கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### நடராசா காசிவேந்தன் (B.com, M.A.)

(முகாமைத்துவப் பணிப்பாளர், சமுர்த்தி மகாசங்கம், உடுவில்)



இணுவில் கிழக்கு, வங்கியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா காசிவேந்தன் நேற்றுமுன்தினம் (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா- பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், புஸ்பலோஜினியின் (சமுர்த்தி வங்கிச் சங்கம், சுன்னாகம்) அன்புக் கணவரும், வேந்தினி (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), நாவேந்தன் (கிராம முன்னேற்றச் சங்க முன்பள்ளி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கந்தசாமி- பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வங்கியடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானைத் தாக்கினால் உலகம் எங்கும் போர்

## எச்சரிக்கிறார் சர்கோஸி

பரிஸ்,ஜன.24


இஸ்ரேல் ஈரானைத் தாக்கினால் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்படும் போரை யாராலும் தடுக்க இயலாது என்று பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி தெரிவித்துள்ளார்.

அதிபர் சர்கோஸியை பிரான்ஸின் உயரதிகாரிகள் சந்தித்துப் பேசினர்.

இதன்போது சர்கோஸி தெரிவித்ததாவது:

ஈரான் அணு ஆயுதங்களின் மீது கொண்டுள்ள ஆசையின் காரணமாகப் போர் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலிய அரசியல் வாதிகள் அச்சுறுத்திய படி ஈரான் மீது இஸ்ரேல்

**ஈரான் மீது இஸ்ரேல் போருக்குத் தயாராகி வருகிறது. இதனால் பிரச்சினை எதுவும் தீரப்போவதில்லை. உலகம் முழுக்க, குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் போரும் குழப்பமும் உருவாகும்**



போருக்குத் தயாராகி வருகிறது. இதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினை எதுவும் தீரப்போவதில்லை.

மாறாக உலகம் முழுக்க, குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் முழுவதிலும் போரும் குழப்பமும் உருவாகும் என்றார்.

மேலும் ஈரானின் எண்ணெய் இறக்குமதியைத் தடைசெய்தும், ஈரானிய மத்திய வங்கியின் சொத்துகளை முடக்குவதுமான பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐக்கிய நாடுகள் முன்வர வேண்டும். சீனாவும், ரஷ்யாவும் ஐ.நா பாதுகாப்புக் குழு ஈரான் மீது எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். (ந)

# உலகைச் சுற்றி வந்த 16 வயதுப் பெண்



உலகை ஒற்றைக்கப்பல் மூலம் சுற்றி வலம் வந்து மிக இளம் வயது நபராக லாரா டெக்கர் என்னும் நெதர்லாந்து இளம் யுவதி புதிய சாதனை படைத்துள்ளார்.

16 வயதுநிரம்பிய லாரா சுமார் ஒருவருடமாக மேற்கொண்ட இச்சுற்றுப் பயணத்தின் முடிவில் கரிபியன் தீவுகளில் உள்ள புனித மார்டென் துறைமுகத்தில் தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டார். அவரை அவரது குடும்ப உறுப்பினர்களும், நண்பர்களும் கொண்டாட்டத்துடன் வரவேற்றனர்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி 11.5 மீற்றர் நீளம் கொண்ட தனது படகில் பயணத்தை ஆரம்பித்து 15,000 கி.மீ மேல் கடலில் பயணித்துள்ளார். முதலில் அவர் தனியாகச் செல்வதை அவரது தாயார் விரும்பவில்லை. நெதர்லாந்து சமூக வலைத்தளங்களும், அவரது பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றம் சென்றிருந்தன. லாரா தனது படகுப் பயணத்தின் போது தனக்கேற்படும் அனுபவங்களை உடனுக்குடன் பதிந்து கொள்ள வலைப்பதிவு ஒன்றை ஆரம்பித்தார். இது இளம் சமூகத்துக்கு நல்லதல்ல. அவர்களின் மனதில் தேவையில்லாத விபரீத ஆசைகளை ஏற்படுத்திவிடக்கூடியது என நெதர்லாந்துச் சமூக வலைத்தளங்கள் தெரிவித்திருந்தன. எனினும் நீதிமன்ற தீர்ப்பு லாராவுக்கு சாதகமகவே இருந்தது. சாதிக்க துடித்த லாராவை அவரது தாயாரும் தைரியமாக வழியனுப்பி வைத்தார். இப்போது உலகை தண்ணீரில் சுற்றிவந்த மிக இளம்வயது நபராக லாரா சாதனை படைத்துள்ளார்.

ஆனால் அவரது சாதனையை கின்னஸ் குழுவினரோ, வேறு கடல் பிரயாணத் துறையினரோ உத்தியோகபூர்வமாகப் பதிந்துகொள்ள முடியாது எனத் தெரிவித்துவிட்டனர். இளவயதுக் காரர்களிடையே இந்த ஆபத்தான படகுப் பிரயாணம் செய்யும் ஆசையைத் தூண்டுவதற்கு காரணியாக இப்பதிவு இருந்துவிடக் கூடாது என்பது அவர்கள் வாதம்

## ஈரானில் பர்பி பொம்மைகளுக்குத் தடை



ஈரான்,ஜன.24

ஈரானில் மேலைத்தேச கலாசாரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் பர்பி பொம்மைகளை விற்பனை செய்யும் கடைகளுக்கு அதிகாரிகள் சீல் வைத்தனர்.

ஏனெனில் , நீச்சல் உடையில் பர்பி பொம்மைகள் தயாரிக்கப்படுகின்றன. பெண்கள் பொது இடங்களில் செல்லும் போது முகத்தை மறைத்து பர்தா அணிந்து செல்ல வேண்டும் என்று ஈரானில் சட்டம் உள்ளது. இதுபோன்ற ஒரு சமுதாயத்தில் பர்பி பொம்மைகள் கலாசார சீரழிவுக்கு வழிவகுக்கின்றன. இந்தப் பொம்மைகள் விற்பனைக்கு ஈரானில் கடந்த 1990ஆம் ஆண்டே தடை விதிக்கப்பட்டது.

பர்பி பொம்மைகளுக்குப் பதில், ஈரான் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் தாரா - சாரா என்ற பெயரில் இரட்டைப் பொம்மைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் தெஹ்ரானில் பர்பி பொம்மைகளை விற்பனை செய்து வந்த கடைகளுக்கு சீல் வைத்துள்ளனர் அதிகாரிகள். (ந)

# ஐரோப்பிய யூனியன் தடை

பிரஸ்ஸல்ஸ், ஜன.24

ஈரான் எண்ணெய் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 20 சதவீதம் வாங்குகிறது ஐரோப்பியா. தற்போது அதற்குத் தடை விதிக்க முடிவு செய்து உள்ளது.

ஐரோப்பிய யூனியனின் வெளியுறவுச் செயலர்களுக்கான கூட்டம் பிரஸ்ஸல்ஸில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஈரானில் இருந்து எண்ணெய் வாங்குவதற்கு படிப்படியாகத் தடை விதிக்கும் அறிவிப்பை அவர்கள் வெளியிட்டனர்.

ஈரான் நாட்டின் மிகப்பெரிய மதிப்புடைய சொத்து இந்த எண்ணெய் வளம்தான். இதை வைத்து தான் ஈரானில் அரசு நடக்கிறது.

ஈரான் தொடர்பான இந்த முடிவால் ஈரானிய பொருளாதாரத்தில் மிகப்பெரிய பாதிப்பு ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது. (ந)



*சீனாவில் நேற்று 'டிராகன்' புத்தாண்டு பிறந்தது. இந்தநிலையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலாவில் வசிக்கும் சீனர்கள் 'டிராகன்' உருவப் பொம்மைகளை வீதிகளில் ஊர்வலமாக எடுத்துவந்து கொண்டாடினர்.*

# சிகிச்சைக்காக சலே அமெரிக்கா பயணம்

சானா,ஜன.24

உடல் நலக்குறைவால் அவதியுறுவதால், அமெரிக்கா சென்று சிகிச்சை பெற ஏமன் அதிபர் சலே திட்டமிட்டுள்ளார்.

ஏமன் அதிபராகக் கடந்த 33 ஆண்டுகளாக இருந்து வந்த அலிஅப்துல்லா சலே அரசுக் கெதிராக கடந்த ஆண்டு மக்கள் புரட்சி ஏற்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அரேபிய தீபகற்பத்தில் உள்நாட்டு போருக்கு வழி வகுக்கும் என மேற்குலக நாடுகள் கண்டனம் தெரிவித்தன. எனினும் அதிபர் சலே பதவிவிலக மறுத்தார்.

இந்த நிலையில் ஏமன் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மாற்றியமைக்க முடிவு செய்தார் சலே. விரைவில் நாடாளுமன்றத்தேர்தல் நடத்த சம்மதித்ததாகக் கூறப்படுகிறது. அவருக்கு பொதுமன்னிப்பு வழங்க வகை செய்யும் மசோதாவும் நேற்று முன்தினம் ஏமன் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

இதைத்தொடர்ந்து அதிபர் சலே,தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், ''அமெரிக்கா சென்று சிகிச்சை பெற நாட்டைவிட்டு வெளியேறுகிறேன். கடந்த கால தவறுகளை ஏமன் மக்கள் மன்னிக்வேண்டும். விரைவில் நாடு திரும்புவேன்'' இவ்வாறு சலே கூறினார்.

## அடுத்தாண்டு பொதுத் தேர்தல்



இராணுவத்துக்கும், அரச நிர்வாகத்துக்கும் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்துள்ள பாகிஸ்தானில், அடுத்த ஆண்டு பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று அந்த நாட்டின் பிரதமர் யூசுப் ரசா கிலானி நேற்று அறிவித்துள்ளார். இதுதொடர்பாக நேற்று தகவல் வெளியிட்டுள்ள அவர், பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

''ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி துணிந்து தேர்தலில் போட்டியிடும். அரச செயற்பாடுகளின் அடிப்படையில் மக்களிடம் தைரியமாக வாக்குக் கேட்போம்.

பாகிஸ்தானில் புரட்சி ஏற்படுத்த போவதாக கூறுபவர்களுக்கு மக்களிடம் ஆதரவு இல்லை. அவர்களால் தேர்தலில் வெற்றி பெற முடியாது. புதிதாக அரசியல் கட்சி ஆரம்பித்தவர்களிடம் வலிமையான கொள்கைகள், திட்டங்கள் எதுவும் இல்லை.

எனவே, வரும் தேர்தலிலும் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம்'' என்று கிலானி கூறியுள்ளார்.

## பயணிகள் சாட்சி

ரோம்,ஜன.24

இத்தாலியில் பாறையுடன் மோதி விபத்துக்குள்ளான கோஸ்டா கான்கோர்டியா என்ற கப்பலின் கப்டன் குடி போதையில் கப்பல் ஓட்டியதாக உயிர் தப்பிய பயணிகள் சாட்சியம் அளித்துள்ளனர்.

இத்தாலியைச் சேர்ந்த கோஸ்டா கான்கோர்டியா என்ற கப்பல் கடந்தவாரம் பாறையில் மோதி கடலில் மூழ்கியது. இது தொடர்பாகக் கப்பல் கப்டன் கைது செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் குடி போதையில் இருந்த அவர் கவனகுறைவாகக் கப்பலைச் செலுத்தியதால் தான் பாறையில் மோதி கவிழ்ந்தது என என பயணி [illegible] உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர். (ந)

# மெக்சிக்கோவில் நில நடுக்கம்



மெக்சிகோ,ஜன.24

மெக்சிகோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து பொது மக்கள் அச்சத்தினால் அலறியடித்துக் கொண்டு ஓடி வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மெக்சிகோவில், கவுதமாலா எல்லையை ஒட்டியுள்ள பசிபிக் கடற் பகுதியில் ஸ்டெபெக் நகரில் நேற்று கடும் நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் குலுங்கின. ஜன்னல்கள் உடைந்து நொருங்கின.

இதனையடுத்து மக்கள் பதட்டமும், அச்சமும் அடைந்து வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் ஓடினர். இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.2 ஆகப் பதிவாகியுள்ளதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது. பூமிக்கு அடியில் 40 மைல் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உருவானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் மற்றும் உயிரிழப்பு சம்பவங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (ந)

## அறுவைச் சிகிச்சை செய்யப்பட இருந்த யானைக்குட்டி மரணம்

பெர்லினின் பிறந்து மூன்று மாதங்களே ஆன யானைக் குட்டியின் இதயத்தில் ஏற்பட்ட ரத்த அடைப்பைச் சரி செய்ய, இதய அறுவைச் சிகிச்சை செய்ய, டாக்டர்கள் முடிவு செய்திருந்தனர். எனினும் அந்தக் குட்டி சிகிச்சைக்கு முன்னர் இறந்து விட்டது.

ஜெர்மனின் ஹெல்லாப்ரோன் உயிரியல் பூங்காவில், பிறந்து மூன்று மாதங்களே ஆன லோலா என்ற யானைக் குட்டி மூச்சுத் திணறலால் அவதிப்பட்டு வந்தது. அதற்கு இதய அறுவை சிகிச்சை செய்ய, மூனிச் பல்கலைக்கழக டாக்டர்கள் முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பேராதரவுடன் திரும்புவாராம் முஷாரப்

இஸ்லாமாபாத், ஜன.24

இராணுவத்தையோ அல்லது உளவுத்துறையையோ நம்பி தான் நாடு திரும்பப் போவதில்லை என்றும் மக்களின் பேராதரவுடன்தான் நாடு திரும்புவேன் என்றும் பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முஷாரப், லண்டனில் இருந்து இந்த மாத இறுதியில் நாடு திரும்பப் போவதாக அறிவித்திருந்தார்.

முஷாரப் பாகிஸ்தான் திரும்பினால் அவர் மீதான குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்படுவார் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் கூறியிருந்தார். இதையடுத்து, நாடு திரும்பும் தனது திட்டத்தை தற்காலிகமாக முஷாரப் ஒத்தி வைத்துள்ளார்.

**பாகிஸ்தான் இராணுவம் மற்றும் உளவுத்துறையின் ஆதரவுடன் நான் நாடு திரும்ப மாட்டேன்.**

இந்த நிலையில் நேற்று இஸ்லாமாபாத்தில் முன்னாள் இராணுவ வீரர்களுடன், தொலைக்காண் ஒலிவாயிலாக முஷாரப் உரையாடியுள்ளார். இதன்போது அவர்,



"இராணுவம் அல்லது ஐ.எஸ்.ஐயின் ஆதரவுடன் நான் நாடு திரும்பமாட்டேன். மாறாக மக்களின் பேராதரவுடன்தான் நாடு திரும்புவேன். என் மீதான அனைத்து வழக்குகளும் அரசியல் மற்றும் தனிப்பட்ட நோக்கம் கொண்டவை. இராணுவத்தின் மேற்பார்வையில், சுயேச்சையான, சுதந்திரமான தேர்தல் நடத்தப்பட வேண்டும்" என்று தெரிவித்தார். (ந)

# பாக்.கடலிலும் அத்துமீறும் இந்தியர்

இஸ்லாமாபாத், ஜன.24

தங்கள் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, மீன் பிடித்ததாகக் கூறி, 31 இந்திய மீனவர்களைப் பாகிஸ்தான் கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

மீன் வளம் மிக்க பாகிஸ்தான் கடற்பகுதிக்குள் சென்று மீன் பிடித்துள்ளனர் எனக் கூறி, 14 படகுகளுடன் 31 இந்திய மீனவர்களை அந்நாட்டுக் கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர். இதுதொடர்பாக கடலோரப் பாதுகாப்பு படைப் பேச்சாளர் தெரிவித்ததாவது:-

அத்துமீறி சட்ட விரோதமாகப் பாகிஸ்தான் எல்லைக்குள் மீன் பிடித்ததால் 31 இந்தியரை பிடித்துள்ளோம். அவர்களை கராச்சி பொலிஸிடம் ஒப்படைத்துள்ளோம் - என்றார்.

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, மீன் பிடித்த குற்றச்சாட்டில் கடந்த ஆண்டில் மட்டும் 23 படகுகளுடன் 122 இந்தியர்களைப் பாகிஸ்தான் கைது செய்தது. இரு நாட்டு அரசும் மேற்கொண்ட பேச்சை அடுத்து பாகிஸ்தானில் சிறைவாசம் முடித்த 179 இந்திய மீனவர்கள் இந்த மாதத் தொடக்கத்தில் விடுதலையாகினர்.

இலங்கைக் கடலிலும் இந்திய மீனவர்கள் நாளாந்தம் அத்துமீறி வருகின்றனர். (ந)

# சிரியாவிலுள்ள தூதரகத்தை மூடிவிட அமெரிக்கா முடிவு!

சிரியாவில் நிலவும் உள்நாட்டுக் குழப்பநிலையால் பாதுகாப்புக் கருதி டமாஸ்கஸில் உள்ள தூதரகத்தை மூடுவதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

சிரியாவில் அதிபர் பஷர் அல்-அசாத் அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டம் கடந்த 10 மாதங்களுக்கும் மேலாக நடந்து வருகிறது. அவ்வப்போது குண்டுவெடிப்புச் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

**சிரியாவில் அதிபர் பஷர் அல்–அசாத் அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம்.**

இந்த நிலையில் கடந்த ஒக்ரோபரில் தலைநகர் டமாஸ்கஸ்ஸில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கும், அதிகாரிகளுக்கும் தொடர் மிரட்டல்கள் வந்தன. அது மட்டுமன்றி அமெரிக்கத் தூதரகம் முன்பாகச் சமீபத்தில் கார்க்குண்டுத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து தூதரக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பைக் கருதி, சிரியாவில் உள்ள தனது தூதரகத்தை மூட அமெரிக்கா நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

# உணவில் சிறுநீரை கலந்து சிற்றூழியர் சிறுமைத்தனம்

லண்டன், ஜன.24


உணவில் சிறுநீரைக் கலந்து வழங்கிய குற்றச்சாட்டில் பிரிட்டன் உணவு விடுதி ஊழியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரிட்டனின் கிழக்கு லண்டன் பகுதியில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் உள்ள உணவு விடுதி ஒன்றில் நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட சூப், சலாட், சான்ட்விச் போன்றவற்றில் இருந்து ஒருவிதமான துர்நாற்றம் ஏற்பட்டதால் நீதிபதிகள் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து உணவுத் துறை அதிகாரிகள் விரைந்து வந்து ஆய்வு செய்தபோது உணவில் சிறுநீர் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே உணவு விடுதியின் ஊழியரை கைது செய்து அதிகாரிகளும், பொலிஸாரும் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். (ந)

# ஈரானில் படகு கவிழ்ந்து 16 பேர் பரிதாபச் சாவு



*தெஹ்ரான்,ஜன.24*

*ஈரான் கடற்பகுதியில் பயணிகள் படகு ஒன்று கவிழ்ந்ததில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*ஹோர்முஸ் தீவிலிருந்து பாரசீக வளைகுடாவில் உள்ள துறைமுக நகரான பந்தர் அப்பாசு நோக்கி 22 பேருடன் பயணிகள் படகு ஒன்று கடந்த சனிக்கிழமை புறப்பட்டது. சிறிது நேரத்தில் காற்றுப் பலமாக வீசியதால் படகு தரைதட்டி கவிழ்ந்தது.*

*இந்த விபத்தில் 16 பேர் பலியாகினர். கப்டன் உட்பட 5 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஒருவரைக் காணவில்லை. வானிலை சரியில்லை என முன்கூட்டியே விடுக்கப்பட்ட எச்சரிக்கையை கப்டன் மீறியதே விபத்துக்குக் காரணம் எனக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். (ந)*


சேவை நலன் பாராட்டு

திரு. மாணிக்கம் பரமானந்தம்

(சிரேஷ்ட முகாமையாளர்)

சேவை விவரம்

01. 08. 1972 - 23.12.1974 தலைமைக் காரியாலயம்
24. 12. 1974 - 15.09.1975 கிளிநொச்சி
16. 09. 1975 - 02.10.1976 தலைமைக் காரியாலயம்
03. 10. 1976 - 04.03.1990 யாழ்ப்பாணம்
05. 03. 1990 - 25.05.2011 பருத்தித்துறை
26. 05. 2011 - 24.01.2012 யாழ்ப்பாணம்




கல்விக்கென்ற ஊரில் பிறந்து பல கற்று
மக்கள் சேவைக்கென்று வளர்ந்து
பதவிகள் பல பெற்று சேமிப்பு வங்கிதனில் உயர்ந்து
எங்களைப் பேரானந்தமாய் வைத்திருந்து
பரமானந்தம் என்னும் பெயரை முன் கூட்டியே அடைந்த உங்களுக்கு
இன்னும் செல்வம் மகிழ்ச்சி, திருப்தி, பிரமாண்டமாய் பொங்கி வந்து....
ஒய்வு காலத்திலும் நீங்கள் தரணியில்
வாழ்வாங்கு வாழ்ந்திட
வாழ்த்தி நிற்கும் உங்கள் உறவுகள்.

முகாமையாளரும், ஊழியர்களும்
தேசிய சேமிப்பு வங்கி,
மேற்தரக் கிளை, யாழ்ப்பாணம்.

(C8079) (6.10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய குடியரசு தினத்தையொட்டி, கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள காந்தி சிலைக்கு வண்ணம் பூசும் பணி நடைபெறுகிறது. (வ)

# இலங்கையின் மோசடிகளுக்கு இந்திய அரசு உடந்தை

## வைகோ குற்றச்சாட்டு



**இலங்கையில் 13 ஆவது அரசியல் சட்டத் திருத்ததை வலியுறுத்தியதாகக் கூறி தமிழக மக்களையும், உலகத்தையும் ஏமாற்றும் வேலைகளில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது**

சென்னை, ஜன.24

இலங்கையில் 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை வலியுறுத்தியதாகக் கூறி தமிழக மக்களையும், உலகத்தை யும் ஏமாற்றும் வேலைகளில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது என்றும், இந்த விவகாரத்தில் இலங்கை அரசின் மோசடி நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு உடந்தையாக இருப்பதாகவும் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

மனிதகுலத்தின் மனசாட்சியை நடுங்கச் செய்யும், கோரமான தமிழ் இனப் படுகொலையை இலங்கை அரசு செய்தது. லட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டனர். 2008 ஆம் ஆண்டிலும், 2009 மே மாதம் 18 திகதி வரையிலும், ஈழத் தமிழ் மக்கள், வயது முதிர்ந்தோர், பெண்கள், குழந்தைகள் என அனைவருமே, சிங்கள விமானப்படை குண்டு வீச்சாலும், பீரங்கி, ஷெல் தாக்குதலாலும் கொல்லப் பட்டனர்.

சிங்கள அரசு செய்த கொலை பாதகக் குற்றத்தை விசாரிக்க வேண்டும் என்றும், மனித உரிமைகள் அழிக்கப்பட்டதற்கு ஐ.நா. மன்றமும், மனித உரிமைக் கவுன்சிலும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஜேர்மனி உள்ளிட்ட சில நாடுகள் ஜெனீவாவின் மனித உரிமைக் குழுவில் எடுத்த முயற்சியை, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தோற்கடித்து, சிங்கள அரசின் இனக் கொலைக் குற்றத்தை மூடி மறைக்க உதவியாகச் செயற்பட்டன.

இந்திய அரசுதான் போரை நடத்த உதவியது என்றும், இயக்கியது என்றும், அதனால்தான் புலிகளைத் தோற்கடித்தோம் என்றும், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவும் அமைச்சர்களும் இலங்கை நாடாளுமன்றத்திலேயே தெரிவித்தனர். ஈழத்தமிழ் இனக்கொலையின் கூட்டுக் குற்றவாளிதான் இந்திய அரசு ஆகும்.

தமிழர் தாயகம் என்பதே கிடையாது என்றும், சிங்கள மொழிதான் ஆட்சி மொழி என்றும், சிங்களவர்களுக்கு அடங்கித் தான் தமிழர்கள் வாழ வேண்டும் என்றும் சொல்லிவிட்ட ராஜபக்ஷ விடம், இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா இப்போது பேசிவிட்டதாகவும், 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை வலியுறுத்தியதாகவும் கூறி இருப்பது, தமிழக மக்களையும், உலகத்தையும் ஏமாற்றுவதற்காக, இந்திய அரசு செய்கின்ற பித்தலாட்ட வேலை.- என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மாவோயிஸ்டுகள் முகாம் அழிப்பு


ஒரிசா மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகளின் முகாம் தகர்த்து அழிக்கப் பட்டது. அங்கிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

ஒரிசா மாநிலம் தெக்குடா காட்டு பகுதியில் மாவோயிஸ்ட்டுகள் முகாமிட்டு, சட்டத்துக்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து மாவோயிஸ்ட்டுகள் ஒழிப்பு படையினரும், பொலிஸாரும் காட்டுப்பகுதிக்கு விரைந்தனர்.

பொலிஸார் வருவதை அறிந்த மாவோயிஸ்ட்டுகள் , முகாமை விட்டு தப்பி ஓடிவிட்டனர். காலிமேலா என்ற இடத்தில் இருந்த முகாமை, பொலிஸார் சோதனையிட்டனர். அப்போது அவற்றில் இருந்து வெடிகுண்டுகள், டெட்டர்னேட்டர்கள், 200 மீற்றர் வயர், நாட்டு துப்பாக்கிகள், துப்பாக்கி குண்டுகள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர். இதுகுறித்து பொலிஸ் அதிகாரி அனிருத் தெரிவித்ததாவது:

''மாவோயிஸ்ட்டுகளின் முகாமில் இருந்து அதிகமான போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள், கமரா என்பன கைப்பற்றப்பட்டன. கடந்த வாரமும் தெக் குடா காட்டு பகுதியில் செயல்பட்ட மாவோயிஸ்ட்டுகளின் முகாமில் இருந்து அதிகமான வெடி பொருள்களைக் கைப்பற்றி இருக்கிறோம்'' - என்றார். (வ)

# சிதம்பரம் தப்பிக்கவே முடியாது சுப்பிரமணிய சுவாமி தெரிவிப்பு





**ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிதம்பரத்துக்கு நேரடித் தொடர்புள்ளதை நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களை சுப்பிரமணியன் சுவாமி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.**

ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிதம்பரத்துக்கு நேரடித் தொடர்புள்ளது என்பதை நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். இதிலிருந்து அவர் தப்பிக்கவே முடியாது என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

2-ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ராஜாவோடு, மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தையும் சேர்க்கக் கோரி சுப்பிரமணியன் சுவாமி கடந்த செப்ரெம்பர் மாதம் டில்லி சி.பி.ஐ நீதிமன்றத்தில் மனு தாக் கல் செய்தார்.

இந்த வழக்கு கடந்த விசாரணைக்கு வந்த போது சிதம்பரத்துக்கு முக்கிய பங்கு உள்ளது, அவர் மீது கூட்டு சதி, மோசடி பிரிவில் வழக்குப் பதிய வேண்டும் என்று வாதிட்டார். வழக்கு அடுத்த மாதம் 4 ஆம் திகதி தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கேரளா வந்த சுப்ரமணிய சுவாமி, ஊழலுக்கு எதிராகக் கேரள ஏ.பி.வி.பி. அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசியபோது, 2-ஜி ஸ்பெக்டரம் வழக்கில் மத்திய அமைச்சருக்கு எதிராக வலுவான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அவர் முன்னாள் அமைச்சர் ராஜாவை போல் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்படவேண்டும்.

கடந்த சனிக்கிழமை நடந்த விசாரணையில் தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளேன். இந்த வழக்கில் அவர் தப்பிக்கவே முடியாது- என்றார். (வ)

# சபாநாயகர் அலுவலகம் முன்பாக குண்டுவெடிப்பு



மணிப்பூர் மாநிலத்தில் சபாநாயகர் வீட்டுக்கு அருகே நேற்றுமுன்தினம் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

மணிப்பூர் மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. அந்த மாநில சபாநாயகர் ஹேம சந்திரசிங் என்பவர் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடுகிறார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மாலை அவரது தேர்தல் அலுவலகம் அருகே திடீரெனக் குண்டு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் காயமடைந்தனர்.

மணிப்பூர் மாநிலத்தில் 20 பயங்கரவாத அமைப்புகள் உள்ளன. இவற்றில் யு.என்.எல்.எப், பி.எல்.ஏ. ஆகிய இரு அமைப்புகளும் தேர்தலை புறக்கணிக்கப் போவதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த அமைப்பு தான் குண்டு வெடிப்புக்கு காரணமாக இருக்கலாம் என்றும் கடந்த இரு வாரங்களில் நடந்த மூன்றாவது தாக்குதல் என்றும் மணிப்பூர் பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## தாக்குதலுக்கு அஞ்சப் போவதில்லை அன்னா குழு

டில்லி,ஜன.24

தம்மீதான தாக்குதலுக்கு ஒரு போதும் அஞ்சப்போவதில்லை என்று அன்னா குழுவினர் தெரிவித்துள்ளனர்.

உத்தரகண்ட்டில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டுள்ள அன்னா குழுவினர் மீது கடந்த சனிக்கிழமை காலணி வீசப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த அன்னா குழுவினர் தெரிவித்ததாவது:

தங்கள் மீதான தாக்குதலுக்கு ஒருபோதும் அஞ்சப் போவதில்லை என்றும், காலணி வீசிய நபர் மீது முறைப்பாடு கொடுக்கப் போவதில்லை .

ஊழலுக்கு எதிரான பிரசாரமும், லோக்பாலை நிறைவேற்றாத காங்கிரஸ் கட்சிக்கு எதிரான பிரசாரமும் தொடரும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.(வ)

# நூலைப் படித்தவர்களுக்கு விழாவில் இடமில்லை

ஜெய்ப்பூர், ஜன.24

எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் 'தி சாத்தானிக் வேர்சஸ்' என்ற நூலிலிருந்து சில பகுதிகளை வாசித்த நான்கு எழுத்தாளர்களை ஜெய்ப்பூர் இலக்கிய விழாவிலிருந்து வெளியேறுமாறு நிகழ்ச்சி அமைப்பாளர்கள் உத்தரவிட்டுள்ளனர். இதனால் சர்ச்சை மேலும் வலுப்பெற்றுள்ளது.

ஜெய்ப்பூரில் நடந்து வரும் இலக்கிய விழாவில் கலந்து கொள்ள ஆர்வமாக இருந்தார் சல்மான் ருஷ்டி. இருப்பினும் அவருக்கு கொலை மிரட்டல் இருப்பதாக ராஜஸ்தான் பொலிஸார் கூறியதைத் தொடர்ந்து அவர் தனது பயணத்தை ரத்துச் செய்தார்.

இந்த நிலையில் தற்போது சல்மான் ருஷ்டி தொடர்பாக இன்னொரு சர்ச்சை வெளியாகியுள்ளது. இலக்கிய விழா வில் கலந்து கொண்ட எழுத்தாளர்கள் ஹரி குன்ஸ்ரு, அமிகுமார், ஜீத் தாயில், ருசிர் ஜோஷி ஆகியோர் வெள்ளிக்கிழமையன்று ருஷ்டியின் புத்தகத்திலிருந்து சில பகுதிகளை விழாவில் வாசித்தனர். இதற்கு சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து இந்த நான்கு பேரையும் விழாவிலிருந்து வெளியேறுமாறு அதிகாரபூர்வமற்ற முறையில் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனராம். அவர்கள் வெளியேற மறுத்தால் கைதுசெய்யப்படலாம் என்றும் பரபரப்பான நிலை ஏற்பட்டுள்ளது. (வ)

## இந்திய–அமெரிக்க போர்ப்பயிற்சி ராஜஸ்தானில்

வருடந்தோறும் நடைபெற்றுவரும் அமெரிக்கா - இந்தியப் படைகளுக்கு இடையிலான இராணுவப் பயிற்சி, இந்த வருடம் ராஜஸ்தான் பாலைவனத்தில் நடைபெற உள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற இருக்கும் இந்த பயிற்சியின்போது அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இராணுவ டாங்கிகளை, பயிற்சிக்காக முதன் முறையாக இந்தியாவுக்குக் கொண்டு வரவுள்ளது அமெரிக்கா.

இந்த போர்ப்பயிற்சியில் அமெரிக்க இராணுவ வீரர்கள் 200 பேரும், இந்திய இராணுவ வீரர்கள் 200 பேரும் கலந்துகொள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# குடியரசு தினத்தன்று கச்சதீவில் தேசியக் கொடி ஏற்ற நடவடிக்கை

கரூர், ஜன. 23

இந்தியக் குடியரசு தினத்தன்று இந்து மக்கள் கட்சி சார்பில், கச்சதீவில் தேசியக் கொடி ஏற்றப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அர்ஜூன் சம்பத் தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தர் பிறந்த நாளான கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் இந்து சமய ஆன்மீக பிரசார யாத்திரை நடைபெற்று வருகிறது. இன்று 3 நாள்கள் பயணமாக இந்தப் பிரசார யாத்திரை கடந்த வெள்ளிக்கிழமை குளித்தலை பகுதிக்கு வந்தது. நேற்று முன் தினம் நெரூரில் வழிபாட்டுடன் யாத்திரை ஆரம்பமாகியது.

கரூருக்கு வந்திருந்த பிரசார யாத்திரை குறித்து கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

108 நாள்கள் நடைபெறும் இந்த யாத்திரை ஏப்ரல் 14 ஆம் திகதி அம்பேத்கர் பிறந்த நாளில் நிறைவடைகிறது.

இந்தியாவின் ஒரு பகுதியான கச்சதீவில் எதிர்வரும் 26 குடியரசு தினத்தன்று மத்திய அரசு சார்பில் தேசியக் கொடியை ஏற்றவேண்டும். கச்சதீவை மீட்டெடுக்க முதல்வர் அறிவித்துள்ள அறிவிப்பின் ஒரு பகுதியாக அந்தத் தீவில் தேசியக் கொடியேற்ற நாம் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம்.- என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செரண்டிப் மா ஆலை நிறுவனம் நுகர்வோர் சந்தைக்குள் பிரவேசம்

செவன் ஸ்ரார் வர்த்தக குறியீட்டைக் கொண்ட மாவின் உற்பத்தியாளர்களான வரையறுக்கப்பட்ட செரண்டிப் மா ஆலை பிரைவேட் (Serendib Flour Mills Pvt.Ltd) நிறுவனமானது, தனது நான்கு வகையான புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இன்று நுகர்வோர் வர்த்தக சந்தைக்குள் பிரவேசித்துள்ளது.

இப்போது முதல் நாட்டிலுள்ள நுகர்வோர் அனைவரும் தமது தேகாரோக்கியத்துக்கு தேவையான ஊட்டச் சத்துக்களைக் கொண்ட உற்பத்திகளான வீட்டுப் பாவனைக்கான கோதுமை மா முழுமையான கோதுமை மா மற்றும் ஆட்டா மா போன்றவற்றை 1 கிலோ கிராம் நிறையுடைய பைக்கெற்றுக்களிலும், ரவையை 500 கிராம் பைக்கெற்றுக்களிலும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

வீடுகளில் பயன்படுத்தப்படும் செரண்டிப் மா ஆலை நிறுவனத்தின் கோதுமை மா ஆனது- பிட்டு, ரொட்டி, இடியப்பம் போன்ற பல உணவுப் பொருள்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

அதேநேரம் முழுமையான கோதுமை மா (Wholemeal Flour) ஆனது - பிறவுன் நிற பாண்கள், ரொட்டிகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு மிகவும் பொருத்தமான தெரிவாகும். ஆட்டா மாவானது ஆட்டா ரொட்டி, சப்பாத்தி, பூரி ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக விஷேடமாக உற்பத்திசெய்யப்பட்டது என்பதுடன் ரவை ஆனது கேக் வகைகள், இனிப்புப் பண்டங்கள், இட்லி, தோசை மற்றும் உப்புமா போன்றவற்றைத் தயாரிக்கும் கலவைகளில் சேர்க்கக்கூடிய மிகச் சிறப்பான உற்பத்தியாகத் திகழ்கின்றது.

செரண்டிப் மா ஆலை பிரைவேட் லிமிட்டெட் (SFML) நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான சதக் அப்துல் காதர் கூறுகையில் 'இலங்கையில் எமது நிறுவனம் செயற்பாடுகளை ஆரம்பித்து மூன்று வருட பூர்த்தியை கடந்த மே மாதத்தில் நாம்கொண்டாடினோம்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாயில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள அல்குராயிர் குழுமக் கம்பனிகளின் ஓர் அங்கத்துவ நிறுவனமான செரண்டிப் மா ஆலை பிரைவேட் லிமிட்டெட் ஆனது, தனது 56 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய அதி நவீனமானதும் ஒரே தடவையில் நாளொன்றுக்கு 1000 தொன் உற்பத்தியை மேற்கொள்ளும் அளவுக்கு கொள்ளளவைக் கொண்டதுமான கோதுமை மா ஆலையின் செயற்பாடுகளைக் கொழும்புத் துறைமுகத்தில் 2008 ஆம் ஆண்டு மே 26 ஆம் திகதி ஆரம்பித்தது.

முழுமையான கோதுமை மா மற்றும் ஆட்டா மா போன்ற பெறுமதி சேர் உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் இலங்கையின் முதலாவது மா நிறுவனமாக திகழ்வதன் மூலம் செரண்டிப் மா ஆலை பிறைவேட் லிமிட்டெட் (SFML) நிறுவனம் சாதனை ஒன்றைப் படைக்கின்றது. தமது தேகாரோக்கியம் தொடர்பில் அதிக அக்கறை கொண்டவர்களான இலங்கையர்கள், மேலும் இயற்கையான மற்றும் ஆரோக்கியமான உணவுப் பொருள்களை நோக்கி மிக வேகமாக முன்னேறிய வண்ணமுள்ளனர். முழுமையான கோதுமை மா மற்றும் ஆட்டாமா போன்றன அதிகரித்து வரும் இவ்வாறான நுகர்வோரின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு மிகப்பொருத்தமான உற்பத்திகளாகும். எமது ஆட்டா மாவானது உயர்ந்தளவான ஊட்டச் சத்துக்களைக் கொண்டுள்ளது மட்டுமன்றி நுகர்வோர் சந்தையில் மிகவும் சிக்கனமாக விலையிடப்பட்ட மாவாகவும் காணப்படுகின்றது. ஆட்டா மாவில் உயர்ந்தளவில் உள்ளடங்கியுள்ள தவிடு ஆனது. அதனை நார்ச்சத்துடைய உணவாக மாற்றுவதுடன் இளைஞர்களாலும் முதியோர்களாலும் இலகுவில் ஜீரணிக்கக் கூடியதாகவும் இவ்வுற்பத்தி காணப்படுகின்றது என்று சதக் மேலும் கூறினார்.

செரண்டிப் மா ஆலை பிரைவேட் லிமிட்டெட் (SFML) நிறுவனத்தின் தாய்க் கம்பனியான ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாயில் உள்ள அல் குராயிர் குழுமக் கம்பனிகள் தனது மா உற்பத்திகளின் தொடரில் 20 இற்கும் மேற்பட்ட மா வகைகளை கொண்டுள்ளன. அவற்றுள் மிகவும் தனிச் சிறப்புமிக்க உற்பத்தியாக நீரிழிவுக்கு பலன் தரக்கூடிய மா (Diabetes Flour) திகழ்கின்றது. இந்தப் பிரிவில் புதிய வகையான மா உற்பத்திகள் சிலவற்றை மிக விரைவில் இலங்கை நுகர்வோருக்கு அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டுள்ளன. (த)

## மாற்று மருத்துவ முறை வைத்திய கலாநிதி நியமனம்

சூரியன் எப்.எம். வானொலியின் சிரேஷ்ட செய்தியாசிரியரும்,இந்திய மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட "நெச்சுரல் ஹீலர்ஸ் அசோசியேஷன்ஸ் இண்ரர்நெஷனல்" மருத்துவ ஸ்தாபனத்தினால் மருத்துவ தொடுகை மாற்றும் சிகிச்சை முறைக்கான மருத்துவ கலாநிதி பட்டம் பெற்றவருமான வி.எஸ். சிகாமணி,மேலும் ஒரு மாற்று மருத்துவ முறையில் வைத்திய கலாநிதியாக நியமனம் பெற்றுள்ளார். இதன்படி, ஜேர்மனியில் பிரபலமான 'டோர்ன்' மருத்துவ அமைப்பைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் திருமதி ரீஇன்ஹில்ட் இசன்சீயின் தலைமையிலான ஏழு பேரைக் கொண்ட ஜேர்மன் குழுவினரால் கோட்பாட்டு பயிற்சி முறைமை மற்றும் செயற்பாட்டு முறைமையில் பயிற்சி பெற்ற வி.எஸ். சிகாமணிக்கு டோர்ன் மாற்று மருத்துவ முறையில் சிகிச்சை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர ஜப்பானிய ரேய்க்கி மற்றும் ஜோரி மாற்று மருத்துவ முறைகளிலும் உரிய மாற்று மருத்துவ நிபுணர்களினால் பயிற்சிகளைப்பெற்றுள்ள வி.எஸ். சிகாமணி அகில இலங்கை சமாதான நீதவானாக சத்திய பிரமாணம் செய்து கொண்ட மொழிபெயர்ப்பாளருமாவார். அவருக்கு மேல் மற்றும் மத்திய மாகாண சபைகளினால் ஊடகத்துறைக்கு அவர் ஆற்றிய பணிகளுக்காக சாஹித்திய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளன. ஜேர்மனியின் டோர்ன் மாற்று மருத்துவ முறைஷய கற்றுக்கொடுத்த மருத்துவ குழுவினருடன் வி.எஸ். சிகாமணி உள்ளார். (த)






2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த முயற்சியாளராக இணுவில் அண்ணா தொழிலகத்தின் அதிபர் எஸ்.பி.நடராசாவுக்கு விருது வழங்கப்பட்டது. (த)

## உயர்தரம் மிக்க டிஜிற்றல் கமராவை அறிமுகம் செய்யும் 'ஏசியா டிஜிற்றல்'

அதிஉயர் தொழில்நுட்பத்தைக்கொண்ட உலகின் மிகச்சிறந்த சலனக் காட்சிகளைப் பதிவுசெய்யும் கமராவை அறிமுகப்படுத்திய தன்மூலம் உள்ளூர் சினிமாவை மேலும் முன்னேற்றுவதற்குத் தனது பங்களிப்பை வழங்குவதற்கு Asia Digital Entertainment நிறுவனம் முன்வந்துள்ளது.

Red என்ற வியாபாரப் பெயரின் கீழ் அமெரிக்காவில் தயாரிக்கப்படும் அதியுயர் தொழில்நுட்பத்தைக் கொண்டது. RED EPIC கமெரா, Red குறியீட்டின் கீழ் தயாரிக்கப்படும் கமராக்களை அறிமுகப்படுத்தியவரான ஜிம் ஜின்னார்ட், உலகின் மிகச்சிறந்த தொழில்நுட்பத்தைக்கொண்ட கெமராவை தயாரிக்கவேண்டும் என்பதை இலக்காகக் கொண்டிருந்தார்.

RED EPIC கெமரா பல புதிய அம்சங்களைக் கொண்டுள்ளது. விசேடமாக இக்கெமராவில் செக்கனுக்கு 120 காட்சிகளைப் படமாக்க முடியும். ஒவ்வொரு காட்சியும் 14MP காட்சித்தெளிவை வழங்குவதுடன் 5K தரத்தில் பதிவுசெய்யப்படுகின்றன.

மேலைத்தேய ஹொலிவுட் திரைப்படங்களான Pirates of the Caribbean, Angels and Demons, The Hobbit, You Don't Get 500 Million Friends without Making a Few Enemies, The Girl with the Dragon Tattoo முதலானவை RED EPIC கமராவினால் ஒளிப்பதிவு செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னணி திரைப்படத் தயாரிப்பு நிறுவனமாக விளங்கும் Asia Digital Entertainment நிறுவனம் இலங்கையின் சினிமாத்துறையில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் தீவிரமாக உள்ளது.

ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற திரைப்படங்களான Flying Fish, Igillena Maluwo ஆகியவற்றைத் தயாரித்த இந்நிறுவனம் எதிர்காலத்தில் முற்றிலும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளது.

Asia Digital Entertainment நிறுவனத்தின் தாய்க் கம்பனியான Asia Capital Group ஒரு முதன்மை நிதிசார் கட்டமைப்பாக விளங்கினாலும், தற்போது தனது வணிக முயற்சிகளை விஸ்தரித்துவருகின்றது.

## சி.டி.பி. தலைவர் பதவி விலகினார்



இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர் ரெங்கநாதன்

மத்திய வங்கியின் நிறுவன முகாமைத்துவ வழிகாட்டியின் தேவைகளுக்கமைய, சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி (CDB) யின் தலைவர் ராஜ்குமார் ரெங்கநாதன் 12 வருடகால சேவையின் பின்னர், தனது தலைவர் பதவியிலிருந்து அண்மையில் பதவி விலகினார்.

தலைவராக இருந்த கால கட்டத்தில், 2001இல் மிகச் சிறிய நிறுவனமாக இருந்த CDB நிறுவனத்தை, நிதி வியாபார சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ள 38 நிதி நிறுவனங்கள் மத்தியில் முதல் பத்து நிதி நிறுவனங்களுக்குள் ஒன்றாக நிலை நிறுத்த இவர் பெரிதும் பாடுபட்டார்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினரான ரெங்கநாதன், 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் CDB பணிப்பாளர் சபையில் உள்ளார். 2008இல் CDB யின்தலைவராக பொறுப்பேற்ற அவர், 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையிலான தசாப்தத்தில் நிறுவனம் தற்போதைய நிலையை அடைய சிறப்பாக வழிநடத்தினார்.

## கொழும்பிலிருந்து பாங்கொக்கிற்கு எயார் ஏஷியாவின் நேரடிப் பயணம்

குறைந்த கட்டணத்தை அறவிடும் உலகின் மிகச் சிறந்த விமான சேவை நிறுவனமான எயார்ஏஷியா (ஸ்கைட்ரக்ஸ் விருது 2009, 2010, 2011) கொழும்பிலிருந்து பாங்கொக்கிற்கான நேரடிப் பயணத்தை ஒரு வழிக் கட்டணமாக ரூபா 5,500 என்ற ஊக்குவிப்புத் தொகையுடன் ஆரம்பித்துள்ளது.

2012 மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து 2012 ஒக்டோபர் 27 ஆம் திகதி வரை இந்தச் சலுகையைப் பயன்படுத்தி பயணம் செய்யமுடியும்.

தாய் எயார் ஏஷியாவின் பிரதம நிறைவேற்று அதிகாரியான தஸ்ஸபொன் பிஜிலெ வெல்ட் கருத்து வெளியிடுகையில், "சிக்கனமான கட்டணத்தில் தாய்லாந்து வழங்கக்கூடிய பொருள் கொள்வனவு, முக்கிய இடங்களைப் பார்வையிடல் மற்றும் தாய்லாந்து வழங்கும் சகல அம்சங்களையும் அனுபவிக்கக் கூடிய இந்தப் புதிய மார்க்கத் தைத் திறப்பதில் நாம் மிகவும மகிழ்ச்சியடைகின்றோம்" என்று கூறினார்.

"குறைந்த கட்டணத்தை அறவிடும் விமான நிறுவனம் என்ற வகையில், எமது கட்டணங்களைக் குறைந்த அளவிலும், மக்கள் செலுத்தக்கூடிய வகையிலும் வைத்திருப்பதனால், மேலதிக பொருள் கொள்வனவு மற்றும் தாய்லாந்தில் மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழித்தல் என்பனவற்றுடன் ஹோட்டல்களில் தங்குவது உட்பட ஏனைய அம்சங்களில் மக்கள் பணத்தைச் செலவிட முடியும். அதேவேளை, இந்தப் புதிய மார்க்கத்தின் மூலம் தாய்லாந்திலிருந்து சுற்றுலாப் பயணிகளும், வர்த்தகப் பிரமுகர்களும் இங்கு வருவார்கள் என்பதையிட்டும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இதனடிப்படையில் இலங்கையின் சுற்றுலாத் தொழிலும் அபிவிருத்தியடையும். கொழும்பிலிருந்து பாங்கொக்கிற்கான எமது முதலாவது பயணம் 2012 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

பாங்கொக்கில் உள்ள ஆலயங்கள், வர்ண ஜாலம் மிக்க இரவு வாழ்க்கை, நாவிற்கினிய உணவு வகைகள் என்பன தற்சமயம் ஒவ்வொருவரது வருமானத்திற்கும் பொருத்தமாகவுள்ளன. பாங்கொக் நகருக்கு மேலதிகமாக, அங்கிருந்து ஒரு மணித்தியாலப் பயணத்தில் உள்ள கடற்கரையும் அடங்கும். கவர்ச்சிகரமான இரவு வாழ்க்கை, உன்னத விளையாட் டுக்கள், நீர் விளையாட்டுக்கள் என்பனவற்றை பாங்கொக் நகரம் வழங்குகிறது. புதுமை விரும்பும் இளம் சந்ததியினர், ஓய்வுக்கா லத்தை நாடும் குடும்பத்தினர் ஆகியோருக்கு இது மிகவும் பொருத்தமான இடமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகள் பிறரின் உணர்வை மதிப்பவர்கள்!

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் ஆய்வாளர்கள் பணத்துக்கும் மனித மனத்தின் மகிழ்ச்சிக்கும் இடையிலான உறவு குறித்து ஏற்கனவே ஓர் ஆய்வு செய்தனர். அதில், பணம் அதிகம் வைத்துள்ளவர்களை விட சாதாரண மக்களே சந்தோஷமாக இருக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

சமீபத்தில் ஒரு ஆய்வு 'பணக்காரர்களை விட ஏழைகளே பிறரின் உணர்ச்சிகளை அறிந்து கனிவுடன் அவர்களைப் பெருந்தன்மையாக நடத்துகின்றனர்'' என்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் பணத்துக்கும் மனித மனத்தின் மகிழ்ச்சிக்கும் இடையிலான உறவு குறித்து ஏற்கனவே ஓர் ஆய்வு செய்தனர். அதில், பணம் அதிகம் வைத்துள்ளவர்களை விட சாதாரண மக்களே சந்தோஷமாக இருக்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

இப்போது பல்கலையின் ஆய்வாளர்கள் இருதரப்பினரின் குணங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் சுவாரஸ்யமான தகவல்கள் கிடைத்துள்ளன.

முதலில் சமூகப் பொருளாதாரத்தில் கல்வியின் நிலை குறித்த ஆய்வில் ஒரு பல்கலையின் அடிமட்ட ஊழியரில் இருந்து உயர் அதிகாரிகள் வரை 200 பேரைத் தேர்ந்தெடுத்தனர். பின் அவர்களுடனான கலந்துரையாடலின் போது, ஒவ்வொருவரின் முகபாவனைகளும் புகைப்படமாக எடுக்கப்பட்டன. அதில் சாதாரணமான உயர்நிலைக் கல்வி மட்டும் முடித்தவர்கள் கல்லூரிக் கல்வி முடித்தவர்களை விட ஏழு சதவீதம் அதிக மதிப்பெண் பெற்றிருந்தனர்.

இரண்டாவதாக 106 மாணவர்களை வைத்து ஒரு வேலைக்கான நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றினை நடத்தினர். அதில் ஒவ்வொருவரும் மற்றவருடன் கலந்துரையாட வேண்டும். அப்போது ஒருவரின் உணர்ச்சிகள் அவர்களுடன் வந்திருந்த பெற்றோரின் உணர்ச்சிகள் ஆகியவை பதிவுசெய்யப்பட்டன. இதிலும் உயர்மட்ட மாணவர்களை விட அடிமட்ட மாணவர்



கள், ஆறு சதவீதம் அதிக மதிப்பெண் பெற்றிருந்தனர். இது குறித்து ஆய்வு நடத்திய மிக்கேல் க்ரவுஸ் கூறியதாவது:

சக மனிதரை மதிக்கும் பழக்கம் சமூகத்தில் நிலவும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள எப்படி உதவுகிறது என்பது இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. சமூகத்தில் நிலவும் வாய்ப்புகளை மதிக்கவும் இந்த ஆய்வு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. சமூகப் பொருளாதாரத்தில் உயர் மட்டத்தில் இருப்பவர்களை விட சாதாரணமானவர்கள் பிற மக்களின் தேவைகளை உணர்ந்து கொள்வதில் அதிக கவனமாக உள்ளனர். பிறரை நன்கு மதிக்கின்றனர். இப்படிப் பிறரை மதிக்கும் குணத்தால்தான் அந்தச் சாதாரணமானவர்கள் பிறரின் உணர்ச்சிகளையும் நன்கு அறிந்து கொள்கின்றனர். இந்த குணம் உலகின் அனைத்து இனங்களிலும் ஆண் பெண்ணிலும் இருக்கிறது'' என்றார்.

ஈழத்தில் 3 தசாப்த காலம் நடந்த போரில் ஏராளமான மக்கள் தமது சொத்துக்களை இழந்து மீண்டெழ முடியாமல் அவதிப்படுவதை நாளாந்தம் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த மக்களை போர் அனர்த்தம் பெரும் பாதிப்புக்குள்ளாக்கி வறிய சமூகமாக மாற்றியுள்ளது. எதிர்காலத்தில் இவர்கள் பொருளாதார மட்டத்தில் உயர்வடையாத பட்சத்தில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பர்.

வளர்ந்துவரும் இளம் சமுதாயம் கல்வியை இழந்து, தமது எதிர்கால வாழ்வைச் சிறந்ததாக மாற்றியமைக்கமுடியாத சூழலுக்குள் அகப்பட்டுள்ளது. இதனால் போதிய வருமானம் இல்லாத தொழிலில் ஈடுபட்டு தமது வாழ்வில் பின்தங்கிய நிலையிலேயே இருக்கப்போகின்றது.

சிங்களவர் விடயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ளும் அரசு தமிழர் விடயத்தில் கண்டும் காணாமல் இருப்பது தமிழ் சமூகத்தினரை அழிப்பதற்கான ஓர் ஏற்பாடாகவே கருத முடிகிறது.

ஆகவே சம்பந்தப்பட்ட தரப்பினர் போரில் பாதிக்கப்பட்டு நலிவடைந்துள்ள மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்தில் அக்கறை எடுத்து வாழ்வுக்கு வழி சமைப்பார்களா என்ற கேள்வியுடன் தமிழ் மக்கள் உள்ளனர்.

ஏழைகள் பிறரின் உணர்வை மதிப்பவர்கள். பணக்காரர்கள் இவர்களின் வாழ்வை வளம்படுத்துவார்களா?

பாலா

# வாழ்வாதார மேம்பாட்டுக்கு இலங்கை வங்கி உதவும்

## முகாமையாளர் புவனேந்திரன்

அச்சுவேலி,ஜன.24

மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு அனைத்து மட்டத்திலும் இலங்கை வங்கி உறுதுணையாக நின்று நிதி வளத்தை உதவி வருவதோடு நிபுணத்துவ வழிப்படுத்தலையும் மேற்கொண்டு வருகின்றது. இதனை பயனாளிகள் உரியமுறையில் நம்பிக்கை நாணயத்துடன் பயன்படுத்தி தமது வாழ்க்கைத் தரத்தை மேல்நிலைப் படுத்திக் கொள்ளவேண்டும் என அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் தெரிவித்தார்.

இலங்கைவங்கி அச்சுவேலிக் கிளையின் நான்காவது அபிவிருத்திக் கிராமமான ''புத்தூர் கிழக்கு மகாத்மாஜி இலங்கைவங்கி அபிவிருத்திக் கிராமத்தின்'' தொடக்க விழா அபிவிருத்திக் கிராம செயற்பாட்டுக்குழுவின் தலைவர் வை.சசிக்குமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

கல்வி வளர்ச்சியோடு கூடிய பொருளாதார மேம்பாடே அமைதியான, மகிழ்ச்சியான வாழ்வுக்கும் சமுதாய மேம்பாட்டுக்கும் வழிவகுக்கும். எனவே பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள் கல்வியோடு கலை வளத்திலும் தேர்ச்சி பெற வேண்டும்.

மகாத்மாஜி இலங்கைவங்கி அபிவிருத்திக் கிராமத்தின் செயற்பாடுகளை செயற்பாட்டுக் குழுவினர் திட்டமிட்ட முறையில் செயற்படுத்தி வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. அந்த வகையில் இந்தக் கிராமத்துக்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது என்பது உறுதியாகி உள்ளது. (எ-11)

# வர்த்தக நோக்கத்துக்காக தனியார் பல்கலைக்கழகங்கள்

## சட்டத்துறை விரிவுரையாளர் குருபரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

தனியார் வர்த்தக நோக்கத்திற்காகவும் அரசியல் நோக்கத்திற்காகவுமே தனியார் பல்கலைக் கழகங்கள் நிறுவப்படவுள்ளன. இதனால் பொதுப் பல்கலைக்கழகத்தினதும், தனியார் பல்கலைக் கழகத்தினதும் தரத்தினை சமநிலைப்படுத்த முடியாது என யாழ். பல்கலைக்கழக சட்டத் துறை விரிவுரையாளர் எஸ்.குருபரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும், இணைந்து நடத்திய ''உயர் கல்வியில் எதிர்நோக்கும் சமகால நெருக்கடிகளும், பல்கலைக்கழக புதுமுக மாணவர்களும்'' எனும் தலைப்பிலான பகிரங்க கலந்துரையாடல் ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விரிவுரையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்

பல்கலைக்கழகத்திற்கு இசற் புள்ளி விவர அடிப்படையிலேயே தான் மாணவர்களைத் தெரிவு செய்கின்றனர். திறமையானவர்களில் 46 வீதமும் மாவட்ட சனத்தொகையில் 55 வீதமும், கஷ்டப் பிரதேசத்தில் உள்ளவர்களில் 5 வீதமுமாக தெரிவு செய்யப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் 2 லட்சத்து 94 ஆயிரம் மாணவர்கள் தோற்றியுள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் 3 பாடத்திலும் சித்திய டைந்தவர்களாக உள்ளனர்.

சித்தியடைந்தவர்களில் 20 ஆயிரம் மாணவர்களுக்கு மட்டுமே பல்கலை அனுமதி, ஏனைய மாணவர்களுக்கு கிடையாது. இவ்வாறானவர்கள் தனியார் பல்கலைக் கழகங்களை நாட வேண்டியுள்ளது.

மறுக்கப்பட்ட வறிய மாணவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வியை கற்க முடியாது. இம் மாணவர்களுக்கு பொது பல்கலைக்கழகங்களே ஏற்ற வசதியை கொடுக்கிறது.

தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டங்களை எவ்வாறு ஏற்றுக் கொள்வது, தராதரத்தை எவ்வாறு அங்கீகரிப்பது போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றார். (எ-311-ரி)

# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.24

அவை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் ஜீவநதி கலை இலக்கிய சஞ்சிகையின் அனுசரணையில் கலாபூஷணம் விருது பெற்ற எழுத்தாளர் டேவிட்டின் கௌரவிப்பு நிகழ்வு அல்வாய் கலை அகத்தில் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நேற்று முன்தினம் மாலை 3.30மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்துகொண்டு விழா நாயகனை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் உதயகுமார், எழுத்தாளர் அனாதரட்சகன் உட்படப் பலர் கருத்துரைகளை வழங்கினர். (எ-319)

# கம்பராமாயண சொற்பொழிவு

வடமராட்சி, ஜன.24

அல்வாய் குமுலடி அதிசய விநாயகர் கோயில் திருவிழா கடந்த 20ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆரம்பித்து தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறுகின்றன.

திருவிழாவில் ஆலயமண்டபத்தில் தினமும் மாலை 7 மணியளவில் சைவப் புலவர் பொன் சுகந்தனின் ''கம்பராமாயணம்'' தொடர் சொற்பொழிவு இடம்பெறவிருக்கிறது. (எ)

# இசற் புள்ளியிடலில் மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள்

## பொருளியல்துறை பேராசிரியர்

யாழ்ப்பாணம், ஜன.24

தட்டிக் கழிக்கின்ற சமூகம் இருக்கும் வரை கல்வியில் முன்னேற்றம் அடைய முடியாது என பொருளியல் துறைப் பேராசிரியர் வி.பி சிவநாதன் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இசற் புள்ளியிடலில் ஏற்பட்ட பிரச்சினை சம்பந்தமாகவும், தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவது தொடர்பான சட்ட முறை விளக்கம் பற்றியும் தெளிவுபடுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தியது இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்

**இசற் புள்ளி தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு இது சம்பந்தமாக தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.**

'இசற்' புள்ளியிடலின் மூலம் இம் முறை மாணவர்கள் பெரும் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள். இப்போதும் இசற் புள்ளி சர்ச்சைகள் அடங்கவில்லை. ஊடகங்களில் நாளுக்கு நாள் இது சம்பந்தமாக ஒவ்வொருவரது கருத்துக்களும் வந்த வண்ணமே இருக்கின்றன.

இவ்வாண்டு ரஷ்ய மொழியில் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பெறுபேறுகள் இப்போது தான் வெளிவந்திருக்கின்றது. ஆனால் இசற் புள்ளிகள் முதலே வெளியிடப்பட்டுவிட்டன.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு இது சம்பந்தமாக தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள், உயர்கல்வி கற்கும் மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டு இது சம்பந்தமான விளக்கங்களை பெற்றிருக்க வேண்டும். ஆனால் இங்கு மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினரே கலந்து கொண்டிருக்கிறார்கள் தட்டிக் கழிக்கின்ற சமூகம் இருக்கும் வரை கல்வியில் முன்னேற்றம் அடைய முடியாது என்றார். (எ-ரி, 311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023222331

## சடுகுடு ஆட்டம்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு மேலாகச் சென்று அதிகாரங்களைக் கையளிக்கும் தனது உறுதிப்பாட்டை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருவதற்குத் தனது பாராட்டுக்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கொழும்பில் தெரிவித்திருந்தார்.

"அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகச் செயற்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வொன்றை நோக்கி நகர்வதற்கான அர்ப்பணிப்பை இலங்கை அரசு பல தடவைகளிலும் எமக்கு வெளிப்படுத்தி இருக்கிறது. மேலும் உண்மையான - அர்த்தமுள்ள - அதிகாரக் கையளிப்பை மேற்கொள்ளவதாகவும் உறுதி அளித்திருக்கிறது" என்று கொழும்பில் தான் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்திருந்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா தொடர்ச்சியாக இரு சொற்பதங்களை விடாப்பிடியாகத் தனது அறிக்கைகளிலும் அமைச்சர்களின் கருத்திலும் தெரிவித்து வருகின்றது. 13ஆவது திருத்தத்தை "முழுமையாக" நடைமுறைப்படுத்துவது, "உண்மையான" தீர்வைக் காண்பது என்பனவே அந்தப் பதங்கள்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது காணி, பொலிஸ் அதிகாரங்களையும் உள்ளடக்கியது. அந்த அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்காமல் 13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் முழுமை பெறாது. எனவேதான் இந்த விடயத்தில் "முழுமையான" என்ற பதத்தை இந்தியா தொடர்ந்து பயன்படுத்துகிறது.

அதனை நடைமுறைப்படுத்தியதன் பின்னர், அதற்கும் மேலாகச் சென்று அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதையே [இதனை நாம் வேண்டுமானால் உள்ளக சுயாட்சி என்று வைத்துக்கொள்ளலாம்] "உண்மையான அதிகாரப் பகிர்வு" என்ற பதத்தினால் இந்தியா குறிக்கிறது என்று கொள்ளலாம்.

அதனால்தான், பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில்தான் ஆராயப்படவேண்டும் என்று மஹிந்த தெரிவித்த பின்னரும், "13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வைக் காண்பதற்கான தனது அர்ப்பணிப்பைப் இலங்கை அரசு பல தடவைகள் எமக்கு வெளிப்படுத்தி இருக்கிறது" என்று கொழும்பில் வைத்தே அழுத்திக் கூறிவிட்டுச் சென்றார் கிருஷ்ணா.

இவ்வாறு ராஜதந்திரமாக இந்தியா காய் நகர்த்தினால் அதை அப்படியே விட்டுவிட மஹிந்த என்ன கொக்கா?

கிருஷ்ணா விமானம் ஏறிய மறுகணமே, 13 பிளஸ் என்று தான் சொன்னது செனட் சபையைத்தானே தவிர காணி, பொலிஸ் அதிகாரங்களை அல்லவென கரு ஜயசூரிய மூலமாக நாட்டு மக்களுக்குத் தெரிவித்துவிட்டார் மஹிந்த ராஜபக்ஷ. உத்தியோகபூர்வமாக அரசின் நிலைப்பாடாக அவர் அதனைத் தெரிவிக்காவிட்டாலும், ஊடகங்கள் வாயிலாக விடயத்தைக் கசியவிட்டு சிங்கள மக்களை சமாதானப்படுத்தியுள்ளார் மஹிந்த. "ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். இந்தியா வந்து மிரட்டிச் சென்றாலும் நான் ஒன்றையும் கொடுத்துவிடமாட்டேன்" என்று அவர் சிங்கள மக்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

**இந்தியாவுக்கு ஒன்றைச் சொல்லிக் கொண்டாலும் நடைமுறையில் வேறொன்றையே நாம் செய்வோம் என்பதுதான் சிங்களத் தலைமைகள் காலா காலமாக கையாண்டுவரும் அரசியல் இராஜதந்திரம். மஹிந்தவும் அதிலிருந்து விடுபட்ட ஒரு மனிதர் அல்லர்.**

**இந்தியா "முழுமையாக" என்று அழுத்துவதும், மஹிந்த "பிளஸ் என்பது மைனஸை உள்ளடக்கியதே" என்று வியாக்கியானிப்பதுமாக இந்தச் சடுகுடு ஆட்டம் நீடிக்கிறது. கடைசியில் இந்த ஆட்டத்தில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதில்தான் தமிழர்களுக்கான தீர்வின் தலைவிதியும் அடங்கியுள்ளது.**

# மஹிந்த அரசின் இயலாத்தனம்

*தமிழில்: விஸ்ரி*

"தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் போனாலென்ன முழம் போனாலென்ன" என்றொரு முதுமொழி வழக்கில் உண்டு. பிரச்சினைகள் ஒன்று மாறி மற்றொன்று எனத் தொடரும்போது, அவற்றுக்குத் தீர்வு காண இயலாது தவிக்கும் போது, புதிதாக தலைதூக்கும் மற்றொரு பிரச்சினையை கணக்கில் எடுக்காது புறம் தள்ளி விடுவது மனித இயல்பு. தலைக்கு மேல் வெள்ளம் போன பின் என்ன ஆனால் தான் என்ன என்ற வைராக்கியத்தில் அது பற்றி மனது அலட்டிக் கொள்ளாது. அந்த நிலையே இன்று ஜனாதிபதி மஹிந்தவின் தலைமையிலான அரசுக்கு ஏற்பட்டுள்ளது. கூட்டிக் கழித்துக் கணக்கிடும் என் கணிதக் கணக்கீட்டில் எந்த இடத்தில் நின்றாலும் இன்று அரசுக்குத் தலைக்கு மேல் வெள்ளம் உயர்ந்து விட்ட நிலை தான்.

உண்மையில் இன்று வெளிப் பார்வைக்குத் தெரிவது போன்று அரசுக்குள் உள்ளக நிலைப்பாடு சுமுகமானதாக இல்லை. சாதுரியமாக நாடாளுமன்ற பலத்தை ஸ்திரமாக்கி வைத்துக் கொண்டிருப்பினும், மூச்சு முட்டும் அளவுக்கு அரசு பிரச்சினைக்கு மேல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. எழும் பிரச்சினையொன்றுக்குத் தீர்வு காண்பதற்கு முன்னரே, மற்றொரு பிரச்சினை தலையெடுத்து பொது மக்களின் ஆத்திரத்தையும் எதிர்ப்பையும் தலை தூக்க வைப்பதால் அரசு தடுமாற வேண்டி நேர்ந்து விடுகிறது. தனியார்துறை ஓய்வூதிய திட்டம், கிறீஸ்பூத விவகாரம், பாரதலக்ஸ்மன் - துமிந்த மோதல், பிளாஸ்ரிக் கூடை விவகாரம் என்பவற்றுக்கெல்லாம் மேலாக, உயர்தரப்பரீட்சை பெறுபேற்று விவகாரத்தாலும் ஜனாதிபதியின் மூளை சூடேறும் அளவுக்கு பிரச்சினைகளால் அரசு நிலைகுலைய நேர்ந்துள்ளது.

முற்று முழுதாக இப் பிரச்சினைகள் யாவும் நாட்டின் தேசிய பிரச்சினைகள் என்ற வகைக்குள் அடங்குவனவல்ல. உண்மையில் அரச இயந்திரத்தில் உருவாகும் நிர்வாக நடைமுறைச் சிக்கல்களே இவை. ஆயினும் இத்தகைய பிரச்சினைகள் தலையெடுத்து 24 மணிநேரம் தாண்டுவதற்குள் அவை தேசியப் பிரச்சினைகளாக உருமாற்றப்பட்டு விடுகின்றன என்பதே கசப்பான உண்மை. எழும் பிரச்சினையொன்றுக்கு தீர்வு காண அரசு முயல்வதற்கு முன்னால், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க பொதுமக்கள் வீதியில் இறங்குவது இன்று வழக்கமாக ஆகிவிட்டுள்ளது. எந்தவொரு பிரச்சனைக்கான தீர்வையும் இன்றைய அரசால் ஓரிரு நாள்களில் முடிவெடுத்து முன் வைக்க இயலாது போயுள்ளது. பிரச்சினையுடன் சம்பந்தப்படும் அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் குறிப்பிட்டதொரு எல்லைக்கு மேலாகச் சென்று செயற்பட இயலாததால் கடைசியில் சகல பிரச்சினைகளுக்குமான முடிவு மேற்கொள்ளும் சுமை ஜனாதிபதியின் தலையில் சுமத்தப்படுகிறது.

எழும் எந்தவொரு பிரச்சினைக்கும் பொறுப்பேற்க வேண்டியவர் என ஒருவர் இல்லாமையே இதற்கான காரணமாகும். குறிப்பிட்டதொரு துறையின் பொறுப்புக்கள் பல அமைச்சர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமையே சிக்கலுக்குக் காரணம். பிரச்சினையொன்று தலைதூக்கும்போது அதற்கான பொறுப்பு தமக்குரியதல்ல என இவ் அமைச்சர்கள் ஒவ்வொருவரும் அதனைக் கைகழுவி விட்டு விடுகின்றனர். இதன் காரணமாக குறிப்பிட்ட அந்தப் பிரச்சினைக்காக முடிவெடுக்கும் பொறுப்பு ஜனாதிபதியின் தலையில் வீழ்கிறது.

> "பரீட்சை முடிவுகள் வெளியீட்டப்படுவதில் நிலவிய தாமதப் போக்கு முடிவுகள் வெளியாவதற்கு முன்னரிலிருந்தே பரீட்சார்த்திகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்தக் காரணமாகியது. வெட்டுப்புள்ளி குறித்துத் தீர்மானிக்கும் விடயத்தில் இழுபறி நிலை நிலவியது.

கடந்து சென்ற ஆண்டின் கடைசி நாள்களும், பிறந்துள்ள ஆண்டின் ஆரம்பமும் அரசுக்கு நன்மை தரும் அறிகுறியாக அமையவில்லை. வெளியிடப்பட்ட உயர்தரப் பரீட்சை முடிவுகள், நாட்டின் எதிர்கால பரம்பரைக்குச் சவாலாகி, நாட்டு மக்களின் அரசு மீதான நம்பிக்கையைச் சிதறடித்துள்ளன.

பரீட்சை முடிவுகள் வெளியிடப்படுவதில் நிலவிய தாமதப் போக்கு முடிவுகள் வெளியாவதற்கு முன்னரிலிருந்தே பரீட்சார்த்திகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்தக் காரணமாகியது. வெட்டுப்புள்ளி குறித்துத் தீர்மானிக்கும் விடயத்தில் இழுபறி நிலை நிலவியது. கடைசியில் வெளியிடப்பட்ட பரீட்சை முடிவுகள் மாவட்ட ரீதியில் வெட்டுப்புள்ளி மட்டம் தீர்மானிக்கப்பட்டதில் சீர்கேடு இடம்பெற்றதான குற்றச்சாட்டுக்கு உள்ளானது. பொறுப்பான தரப்புகள் அதற்கான பல்வேறு விளக்கங்கள், வியாக்கியானங்களை முன்வைத்த போதிலும், அவற்றால் மக்கள் மத்தியில் பரீட்சைப் பெறுபேறு குறித்தெழுந்த அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் போக்கிவிட இயலவில்லை. இந்தச் சிக்கல் தொடர்பாக பொறுப்பான தரப்புகள் விடயத்தைக் கையாண்ட விதம் நகைப்புக்கு இடமானது.

பரீட்சை முடிவுகள் வெளிவர வேண்டியிருந்த கடந்த டிசெம்பர் மாதத்திலேயே கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, வெட்டுப்புள்ளி தீர்மானிக்கும் நடைமுறையைத் தம்மால் விளங்கிக் கொள்ள இயலாதிருப்பதாக நாடாளுமன்றத்தில் வைத்தே தமது இயலாமையை வெளிப்படுத்தியிருந்தார். அதேபோன்று பரீட்சை முடிவுகளின் தவறுநேர்ந்தமை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவின் கருத்துப்படி பாரதூரமற்ற ஒரு சிறிய விடயம். "இதுவொரு சின்னப் பிரச்சினை; அதனை நாம் நேர் சீர் செய்துள்ளோம்'', என்பது அவரது நிலைப்பாடு. ஆனால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அக்கறை கொண்டுள்ள பெற்றோரும், தமது கடும் முயற்சிக்கு கிட்டிய பலன் தவறற்றதொன்றுதானா எனச் சந்தேகப்படும் மாணவர்களும் இதனால் எவ்வளவு தூரம் அதிருப்தியும் ஆத்திரமும் உறுவர் என்பது குறித்து இத்தரப்பினர் சிந்தித்தார்களா?

உயர்தரப் பரீட்சைக்குப் பொறுப்பான அமைச்சர்களும் அதிகாரிகளும் வெளியிடப்பட்ட முடிவுகள் மெத்தச்சரியானவையே எனத் தற்போதும் தர்க்கித்து வருகின்றனர். தமது பொறுப்புக்களிலிருந்து விடுபடும் நோக்கில் கருத்து வெளியிடும் இவர்கள் சிந்தித்துத்தான் கருத்து வெளியிடுகிறார்களா? பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ள இயலாதநிலையில் அரசின் அரசியல் ஆலோசகர் டலஸ் அழகப்பெருமவோ வெளியிடப்பட்ட பரீட்சை முடிவுகளில் தவறு இடம் பெற்றுள்ளதென ஒப்புக் கொள்கிறார்.

சீட்டுக்கட்டுக் கூட்டத்தில் குறிப்பிட்ட அளவிலான 'ஜோக்கர்' சீட்டுக்களே இருக்கும். அளவுக்கு அதிகமாக அச்சீட்டுக்கட்டுக் கூட்டத்தில் ஜோக்கர் சீட்டுக்கள் தேவைப்படா. இன்று அரசில் அத்தகைய ஜோக்கர்கள் பலர் முன்னிலை வகிக்கின்றனர். ஆனால் அவர்களை ஒரே வரிசையில் உட்கார வைக்கச் செய்ய எஸ்.பி திஸாநாயக்கா, பந்துல குணவர்த்தன, நந்திமித்திர, மற்றும் அண்மையில் அரசில் இணைந்து கொண்ட மொஹான்லால் கிரேருவால் கூட இயலாது.

ஜனாதிபதி தமது அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களை இரு விதத்தில் கணிப்பிட்டு வைத்துள்ளார். இதனாலேயே அவர் எனது அரசில் பொறுப்புடன் செயற்படும் அமைச்சர்கள் எனக் கூறுவதானால் அவர்கள் ஐ.தே.கட்சியிலிருந்து அரசில் இணைந்து செயற்படும் அமைச்சர்களே எனப் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளார். ஆதலால் ஐ.தே. கட்சியிலிருந்து விலகி அரசில் இணைந்த கொண்ட தரப்பினருக்கு அவர் தங்கக் கரண்டியாலேயே பரிமாறுகிறார். இரகசியமாக அல்லது பகிரங்கமாகவே அவர்களுக்குத் தனி மரியாதை வழங்கி வருகிறார். இதனாலேயே சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட மஹிந்தவின் அரசில் மதிப்பு ஈட்ட வேண்டுமானால் ஐ.தே.கட்சியில் இணைந்து மீண்டும் அதிலிருந்து விலகி சுதந்திரக் கட்சியில் இணைய வேண்டும் எனக் கூறுகின்றனர். நாட்டின் முக்கியமானதொரு துறையான கல்வித்துறைக்குப் பொறுப்பான அமைச்சர்களாகப் பதவி வகிக்க எஸ்.பி. திஸாநாயக்காவுக்கும், பந்துல குணவர்தனவுக்கும் வாய்ப்பமைந்தது. இத்தகைய பின்னணியின் அடிப்படையிலேயே. ஆனால் அண்மைய உயர்தரப் பரீட்சை முடிவுகள் தொடர்பான சிக்கலின் பின்னர் இவ்விருவரும் காமினி லொக்குகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, துமிந்த சில்வா போன்று ஜீ.எல் பீரிஸ், மிலிந்த மொரகொட ஆகியோரின் வரிசைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் அரசின் திட்டம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு திட்டத்தின் மூலமான நன்மைகள் குறித்துத் தெளிவுபடுத்தப்படாமையால், சட்ட மூலம் கொண்டு வரப்பட்டதையடுத்து முதல் தடவையாக ஊழியர்கள்

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிரகடனப்படுத்தப்படாத யுத்தம்

■ தானா

ஈரானின் அணு ஆயுத உற்பத்தித் திட்ட செயற்பாடுகளை தடுத்து விடும் நோக்கில் அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக நாடுகள், அந்நாட்டின் எண்ணெய் ஏற்றுமதிக்குதடைவிதிக்கும்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதனால் மத்திய கிழக்கில் மீண்டுமொரு யுத்தம் உருவாகும்சூழ்நிலைஅதிகரித்து வருகிறது. அத்தகைய் சூழ்நிலை தற்போது யதார்த்தமாகி வருவதை நிரூபிப்பது போன்றுஇவ்வாரம் அங்கு சில சம்பவங்கள்இடம்பெற்றுள்ளன.

ஈரானின் அணு ஆயுத உற்பத்தி நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிப்பவராகக் கருதப்பட்ட ஈரானிய அணு விஞ்ஞானி முஸ்தாபா அஹமட் ரொஷான், தெஹ்ரான் நகரில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் இவற்றுள் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. காந்தம் பொருத்தப்பட்ட வெடிகுண்டொன்றை அவரது காரில் ஒட்ட வைத்துப் பொருத்தியதன் மூலம், அவ்வெடி குண்டு வெடித்ததில் அந்த அணு விஞ்ஞானியும் அவரது கார்ச் சாரதியும் உயிரிழக்க நேர்ந்தது. இத்தாக்குதலுக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்காத போதிலும், இது ஈரானின் அணு ஆயுத உற்பத்தி நடவடிக்கைகளுக்கு சவால் விடுப்பதற்கானதொரு முயற்சி எனக் கருதப்படுகிறது. சம்பவம் தொடர்பாக ஈரானிய அரசு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்ட தாக்குதல் அமெரிக்காவின் சீ.ஐ.ஏ. உளவு நிறுவனம் மற்றும் இஸ்ரேலின் மொசாட் உளவு நிறுவனம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்டதொன்றே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருட கால இடைவெளியில் ஈரானின் அணு ஆயுத உற்பத்தி நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் அணு விஞ்ஞானிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இது நான்காவது தாக்குதலாகும். குறிப்பிட்ட துறைசார் நிபுணர்களை இலக்கு வைத்துத் தாக்கும் முயற்சிகளும் மேலதிகமாக ஈரானின் நடான்ஸ் பிரதேசத்திலுள்ளஅணுஉற்பத்திநிலையமொன்றில் தீ விபத்தொன்று ஏற்பட்டதன் காரணமாக ஈரானின் ஏவுகணைத் தயாரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான நிபுணரொருவர் உயிரிழக்க நேர்ந்ததாகவும் தெரிய வந்துள்ளது. இவற்றுக்கும் மேலாக, ஈரானின் ஏவுகணை தயாரிப்பு நிலையங்களிலுள்ள கணினித் தொழில்நுட்ப இயந்திரங்களுள் செலுத்தப்பட்டுள்ள 'ஸ்டக்ஸ்நெற்' என்ற பெயர் கொண்ட வைரஸ்கள் காரணமாக ஏற்பட்டுள்ள கோளாறுகளை நேர்சீர்செய்ய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டு வரும் இத்தகைய தடைகள் இயற்கையானவை அல்ல எனச் சந்தேகிக்க முடிகிறது. அதாவது இராணுவத்தாக்குதல், விமானத்தாக்குதல் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளும்தாக்குதல்களை விட, அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிபுணர்களை இலக்கு வைத்துப் படுகொலை செய்தல், மற்றும் அடையாளம் காணப்பட்ட நிலையங்களைச் சேதப்படுத்தல் என்பவற்றின் மூலம் ஈரானின் அணு ஆயுத உற்பத்தி முயற்சிகளை முறியடிக்கும் உத்தியை அமெரிக்காவும் இஸ்ரேலும் மேற்



கொள்ள முனைவதாகக் கருத முடிகிறது. இத்தகைய தாக்குதல்களைக் குறைந்த செலவீனத்துடன் மேற்கொள்ள இயலுவதோடு, தாக்குதல்களில் தமது தரப்புக்கு ஏற்படக்கூடிய உயிரிழப்புக்களையும் குறைத்துக் கொள்ள இயலுமென இத்தரப்புக்கள் நம்புவதாகத் தெரிகிறது.

மற்றொரு புறம் இத்தகைய தாக்குதல்கள் தொடர்பான பொறுப்பை எந்தவொரு நாட்டின் மீதோ, அல்லது அமைப்பின் மீதோ உறுதியாக சுமத்த இயலாது போகுமென்பதும் இத்தகைய செயற்பாடுகளில் உள்ள சாதக நிலையாகும். கடந்த காலங்களில் இடம் பெற்றமை போன்று அணு உற்பத்திச் செயற்பாடுகளில் தொடர்புபடும் நிபுணர்களைப் படுகொலை செய்யும் சம்பவங்கள் இந்த ஆண்டில் அதிகரிக்க இடமுண்டு என இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இவ்வாண்டின் ஆரம்பத்தில் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டுள்ளமை மட்டுமே, குறிப்பிட்ட அண்மைய தாக்குதலில் சூத்திரதாரி இஸ்ரேலாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்த ஒரு காரணமாக அமையக்கூடும். அமெரிக்க அரசோ குறிப்பிட்ட இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை கருத்து எதனையும்வெளியிடவில்லை. ஆயினும் அமெரிக்க சீ.ஐ.ஏ. உளவாளிகள் பலர் ஈரானுக்குள் செயற்பட்டு வருகின்றனர் என்பதில் எத்தகைய சந்தேகமும் கிடையாது. ஈரானிய அரசால் கைது செய்யப்பட்ட அத்தகையதொரு உளவாளிக்குஅண்மையில் ஈரானிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இத்தகைய பயங்கரவாதத் தாக்குதல்களை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பதே தற்போது எழுந்துள்ள வினாவாகும். இத்தகையதொரு படுகொலை அல்லது தாக்குதல் அமெரிக்காவினதோ, இஸ்ரேலினதோ முக்கிய பிரமுகரையோ நிலையமொன்றையோ இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுமானால், அதனைப் பயங்கரவாதி செயற்பாடென அடையாளப்படுத்துவதுடன், அதற்கு உதவியதாகச் சந்தேகப்படும் நாடுகள் மீது தாக்குதல் மேற்கொள்ள நிச்சயமாக அமெரிக்காவும் இஸ்ரேலும் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை. ஆப்கானிஸ்தான் அரசு, பயங்கரவாதிகளுக்கு ஆதரவு அளிப்பதாகக் குற்றம் சாட்டியே அமெரிக்கா ஆப்கானிஸ்தானின் தலிபான் நிர்வாகத்தின் மீது இராணுவத் தாக்குதல் மேற்கொண்டு நிர்வாகத்தை வீழ்த்தியது. இத்தகைய தாக்கத்தின் அடிப்படையில் இஸ்ரேலின் மொசாட் உளவுச் சேவையின் தலைமையகத்தின் மீதோ, அல்லது அணு ஆயுதம் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள நிலையத்தின் மீதோ ஈரான் தாக்குதலொன்றை மேற்கொள்ளுமானால், அதன் விளைவு என்னவாகும்? உண்மையில் கடந்த வாரம் இடம்பெற்றமை போன்றதொரு தாக்குதல் மீண்டும் ஒரு முறை இடம் பெறுமானால் அத்தகையதொரு எதிர் நடவடிக்கையை மேற்கொள்ளப் பின் நிற்கப் போவதில்லை என்று ஈரான் கோடி காட்டியுள்ளது. அவ்விதம் இடம்பெறுமானால், பெரும் போரொன்றால் ஏற்படத்தக்க உயிரிழப்புக்களும் சொத்திழப்புக்களும் ஏற் படும் என்பது திண்ணம்.

இதனிடையே எதிர் வரும் அண்மைய நாள்களில் அமெரிக்காவின் 6ஆயிரம் இராணுவ வீரர்களுடன் இணைந்து இஸ்ரேல் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இராணுவப் பயிற்சித் திட்டத்தை இஸ்ரேல் கைவிட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இஸ்ரேலின் இராணுவச் செலவினத்தைக் குறைப்பதே இதற்கான காரணமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தாம் அண்மையில் மேற்கொண்டமை போன்ற இலக்கைத் தாக்கியழிக்கும் நடைமுறையைத் தொடர்ந்தும் மேற்கொள்ள அமெரிக்காவும் இஸ்ரேலும் விரும்புவதாகவும் கொள்ள முடியும். அது இலகுவான, செலவு குறைந்த விதத்திலான உத்தியான போதிலும், அது சகல வழியிலும் பயங்கரவாத நடவடிக்கையாகக் கருதப்பட இயலும். இதனால் அத்தகைய நடவடிக்கைகள் மேன்மேலும் அதிகரிக்குமானால் கட்டுப்படுத்த இயலாத மோதல்கள் உலகளாவிய ரீதியில் உருவாகி பெரும் அழிவுகளை ஏற்படுத்தக் காரணமாகுமென்பதைப் புறம் தள்ளி விட இயலாது. ✱

# யாழ்.மாநகர சபையில் அன்று நடந்ததும் இன்று நடப்பதும்

■ அருளப்பு கொர்னேலியஸ்
(மாநகர சபை உறுப்பினர்- த.தே.கூ)

யாழ் மாநகர சபை உருவாக்கப்பட்டு 63 வருடங்கள் கழிந்தன. 1949 ஆம் ஆண்டு முதல் மேயராக சாம்சபாபதியின் தலைமையில் செயற்பட ஆரம்பித்தது.

அவருக்குப் பின் அனேகமான முதல்வர்கள் பொன்னம்பலம், காசிப்பிள்ளை, சுல்தான், துரைராசா, அல்பிறேற் துரையப்பா, மகாதேவா, நாகராசா, விசுவநாதன் என்போர் 30 ஆண்டுக்குட்பட்ட காலத்தில் முதல்வர்களாகச் செயற்பட்டுள்ளனர்.

யாழ். மாநகர சபையின் முன்னைய மாநகர சபைக் கட்டடம் திராவிடக் கலை வடிவத்தில் சகல வசதியுடன் 1936 ஆம் ஆண்டு நகர சபைத் தலைவராக இருந்த ஆர்.ஆர்.நல்லையா தலைமையில் கட்டி முடித்து பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தேசாதிபதியாக இருந்த சேர்.எட்வேட் ஸ்ரப்ஸ் என்பவரால் ஜூன் மாதம் 9ஆம் நாள் திறந்து வைக்கப்பட்டது. 1949 ஆம் ஆண்டு 15 வட்டாரமாகவும், பின் 17 வட்டாரமாகவும், 1968 ஆம் ஆண்டில் 23 வட்டாரமாகவும் பிரிக்கப்பட்டது.

1949 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டுவரை மாநகரம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. யாழ். நகர அபிவிருத்தி வடிகால்கள், நூல் நிலையம், திறந்தவெளியரங்கு, விளையாட்டரங்கு, சுப்பிரமணியம் பூங்கா, குடிதண்ணீர் விநியோகம், நடைபாதை அமைப்பு, நவீன சந்தைக் கட்டடம், பொதுமராமத்துப் பிரிவு, மின்சாரம், சுகாதாரப் பிரிவு என்பன முன்னோக்கிச் சென்றமை அந்த நேரத்தில் இருந்த மாநகர முதல்வர்கள், அங்கத்தவர்களின் சிறந்த நிர்வாகத் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளது. 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடந்த கொடிய யுத்தத்தால் வன்முறைகளும் குண்டுத் தாக்குதலும் நடைபெறத்தொடங்கி 30 வரு டம் அழிவைச் சந்தித்தது.

யாழ். நகரில் தமிழர் வாழ்விடம் வடக்கு, கிழக்கு, தமிழர், முஸ்லிம்கள் அதிகமாக வாழும் தாயகம். தமிழரின் தலையை நசுக்கவே சில பேரினவாதிகள் நூல் நிலையத்தையும் எரித்தார்கள்.

இது தென் கிழக்காசியாவில் வரலாற்று நூல்களை உள்வாங்கிய தலை சிறந்த நூலகமாக விளங்கியது.

சிறந்த கல்விமான்களால், மதத் தலைவர்களால் உருவாக்கப்பட்ட நூலகம் எரியூட்டப்பட்டது. தமிழனுக்கு இது ஓர் பேர் அழிவாய் இருந்தும் "வெட்ட வெட்ட தழைப்பவன் தமிழன்" என்ற கூற்றுக்கு அமைய நூல் நிலையம் மீண்டும் புனரமைக்கப்பட்டு மெருகூட்டப் பெற்று தலை நிமிர்ந்து செயற்படுகிறது. எரியுண்ட நூல்கள் திரும்பப் பெற முடியுமா? என்ற நிலை.

மாநகர சபைக் கட்டடம் இருந்த இடம் தெரியாமல் அழிவுற்றது. சுப்பிரமணியம் பூங்கா அழிக்கப்பட்டு சந்தைக் கட்டடமும் எரியூட்டப்பட்டது. இன்னும் எத்தனையோ எத்தனையோ....

30 வருடங்களின் பின் ஓர் சமாதானக் காற்று வீசத் தொடங்கி யாழ். மாநகர சபைக்கும் தேர்தல் வந்தது. அரசு சார்ந்த கட்சி மாநகர சபை தலைமை பீடத்தைப் பிடித்தது. மாநகர கட்டடத்தை இருந்த இடத்தில் திரும்பக் கட்ட வேண்டுமென்று சபை ஏகமனதாகத் தீர்மானித்தது. ஒரு வருடத்துக்குள் அத்திபாரம் இடப்பட்டது. 30.12.2011 இல் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் முதல்வர் "இந்த ஆண்டு முற்பகுதியில் மாநகர சபை கட்டட வேலை தொடங்க இருப்பதாகவும், மற்றும் திறந்த வெளியரங்கில் இந்திய அரசின் உதவியால் வசதி கொண்ட கலை கலாசார மண்டபமும் கட்ட இருப்பதாகவும் கூறியுள்ளார்.

அதற்குச் சபை உறுப்பினர்கள் ஏக மனதுடன் அனுசரணை வழங்கியுள்ளனர்.

ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட யாழ். கோட்டையும், கோட்டைக்குள் இருந்த அரச மாளிகையும் அழிக்கப்பட்ட நிலையில் அரசு கோட்டையைமுந்தியநிலைக்கு புனரமைக்க அதே நாட்டிடம் உதவி கோரியது.

அந்த நாடும் முன்வந்து கோட்டை வேலை நடை பெற்று வருகிறது.

யாழ்.மாநகரம் புதுப் பொலிவிடமாக வர யாழ். பொலிஸ் தலைமையிடம் முன்பிருந்த இடத்திலேயே கட்டுவது சாலச்சிறந்ததாக இருக்குமென்பது பொதுவான கருத்து.

நீதிமன்றம் உரிய இடத்தில் புதுப் பொலிவுடன் இருப்பது யாழ். நகரை அழகு பெறச் செய்கிறது. மேலும் யாழ் மாநகரத்தில் யுத்தத்தால் அழிவுற்றவை எவ்வளவோ உள்ளன. இவற்றை நாம் ஒத்துழைத்து கட்டியெழுப்புவதை தவிர எதிர்க் கட்சியினரை விமர்சிப்பதில் பயன் ஏதும் இல்லை. எதிர் அணியினர் சில தவறுகளைக் குறிப்பிட்டுத் தட்டிக் கேட்டால் அதற்குரிய பதில் வருவதில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தான் ஆளும் அணியிலும் எதிர் அணியிலும் இருப்பவர்கள். ஆனால் ஜனநாயக உரிமை எவருக்கும் உண்டு. கூச்சல் குழப்பம் சபையில் வரும்போது அதற்கு பதில் கூறி ஆளும் கட்சிக்குள் பிளவுபடுவோரையும் எதிர் அணியினரையும் திருப்திப்படுத்த வேண்டிய சகல அதிகாரமும் முதல்வருக்குத்தான் உண்டு.

சபையில் வீண் விதண்டாவாதம் பேசுகின்ற உறுப்பினர்கள் சிலர் சொல்லுவது "மத்தியிலும் எங்கள் ஆட்சி, மாநகர சபையிலும் எங்கள் ஆட்சி, நாம் எதையும் செய்வோம்" என்பதுதான். கடந்த காலங்களில் இருந்த முதல்வர்களுடன் அப்போதைய மாநகர சபை அங்கத்தவர்கள் எவ்வாறு வேறுபாடுகள் அற்று ஒத்துழைப்பு வழங்கினார்களோ அதேபோன்று ஒத்துழைப்பை இப்போதைய முதல்வருக்கும் சகல அங்கத்தவர்களும் வழங்கினால் போருக்கு முந்திய நிலையில் பொற்காலமாக விளங்கிய மாநகர சபை போன்று தற்போதைய மாநகர சபை யும் மாறும் என்பதில் ஐயமில்லை. இதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பும் புத்தியும்

ஒரு மாணவனைப் பார்த்து,

''என்ன தம்பி! படிப்பு எல்லாம் எப்படி இருக்கிறது?'' என்று ஒருவர் விசாரித்தார்.

அவன் மிகவும் அலுத்துக் கொண்டு '' நான் நன்றாகத்தான் படிக்கிறேன்... இருந்தாலும் புத்தியில் சரியாய் ஏறுதில்லை '' என்றான்.

கல்வி கற்கக் கூடிய ஒரு மாணவன் சம்பந்தப்பட்ட புத்திகள் பலவகை. அவற்றைப் பற்றி ஒரு பெரியவர் (வாரியார் சுவாமிகள்) விளக்கியிருக்கிறார்.

மிருத்து புத்தி- என்று ஒன்று. 'மிருத்து' என்றால் மண்.

மண் சுவரில் ஆணி அடிக்கிறதும் சுலபம்- அதைப் பிடுங்கி எடுக்கிறதும் சுலபம். அது மாதிரி சிலபேர் குரு சொல்லிக் கொடுப்பதை சுலபமாய் கேட்டு தெரிந்து கொள்வார்கள். கொஞ்ச நேரத்தில் சுலபமாய் மறந்தும் விடுவார்கள். இது மிருத்து புத்தி.

தாரு புத்தி- என்று ஒன்று உண்டு. தாரு என்றால் மரம்.

அதாவது பச்சை மரத்திலே ஆணி அடிக்கிறது சுலபம். ஆனால் அதை எடுப்பது கஷ்ரம். அதுமாதிரி ஆசிரியரிடம் கேட்டதைக் கவனமாக மனதிலே பதியவைத்து அதை மறக்காமல் இருக்கிறது தாரு புத்தி.

பட்டமரமாக இருந்தால் அதில் ஆணி அடிக்கிறதும் சிரமம். அடிக்கிற ஆணியும் விரைவில் நழுவிடும். அது மாதிரி கேட்கிற விடயம் மனதிலே பதிவதிலும் சிரமம்.

அப்படியே பதிந்தாலும் அது நீடித்து இருக்கிறதும் சிரமம்.

கொஞ்சக் காலத்தில் மறந்துவிடும்.

இன்னொரு வகை புத்தி ஒன்று உண்டு.

அதனுடைய பெயர் 'சிலா புத்தி!'

சிலா- என்றால் கல். ஒரு கருங்கல்லிலே நான்கு துளையைப் போட்டு ஒரு துளையில் உளியை வைத்து அடித்தால், மற்றத் துளைவழியாகப் பிளந்து கல்- இரண்டாகிவிடும். அது மாதிரி சந்தியான இடங்களிலே குறிப்பான ஒரு பொருளைச் சொன்னால் அதைக்கொண்டு மற்றதையும் தெரிந்து கொள்வது மாதிரி. அது சிலா புத்தி.

வேணு புத்தி - என்றால் என்ன தெரியுமா?

வேணு- என்றால் மூங்கில். மூங்கில் கணுவிலே ஒரு பக்கம் உளி வைத்து அடித்தால் இரண்டு பக்கமும் பிளந்துவிடும். அது மாதிரி ஒரு செய்தியைக் கேட்டுக்கொண்டு இருக்கிற போதே அதனுடைய முன் - பின் தொடர்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது வேணு புத்தி.

தைல புத்தி- என்று ஒன்று உண்டு. தைலம் என்கிறது எண்ணெய். தண்ணீரில் ஒரு துளி எண்ணெயை விட்டால் அது தண்ணீர் முழுவதும் பரவுவது மாதிரி, ஆசிரியர் சுருக்கமாக ஒரு கருத்தைச் சொன்னால் அதை வைத்துக் கொண்டே முழு விடயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது தைல புத்தி.

கற்பூர புத்தி- தெரியுமா? கற்பூரம் தீப்பட்டவுடனே பிடித்துக்கொள்கிறது. ஆசிரியர் சொன்னவுடனே நுண்ணறிவுடன் பாடங்களைப் புரிந்து கொள்வது இந்த வகைப் புத்தி.

கரிப்புத்தி- என்ற ஒன்று! அது எப்படியென்றால் கரியிலே நெருப்பை வைத்து விசிறிய பிறகு கரி நெருப்பாகும். அது மாதிரி காலை, மாலை வேளைகளில் ஆசிரியர் வந்து பாடம் சொல்லிக் கொடுப்பார். அதைக்கொண்டு புரிந்து கொள்வது இந்த வகை.

கதலித் தண்டுப் புத்தி- என்று கூட ஒரு வகை உண்டு. கதலி என்பது வாழை மரம். வாழைத் தண்டிலே தீ வைக்கிறது எவ்வளவு சிரமமோ அவ்வளவு சிரமம் கல்வியை கற்பது. இது கதலித் தண்டுப் புத்தி.

இதைத் தவிர இன்னும் சில வகைகளாகவும் கூட மாணவர்களை இனம் பிரிக்கலாம் ஆசிரியர் சொன்னவற்றிலே நல்லதை மட்டும் எடுத்துக் கொள்பவன் அன்னம்.

ஆசிரியர் கற்பித்த இடத்திலே பாடத்தைக் கேட்டுக் கொண்டு பிறகு தனியாய் உட்கார்ந்து சிந்தித்துப் புரிந்துகொள்பவன் பசு. பசுமாடு அப்படித்தானே. புல் கண்ட இடத்திலே மேயும்; அதன்பிறகு நிதானமாக அசைபோடும்.

ஆசிரியர் சொன்னதைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியாதவன் கிளி! பல இடங்களில் பாடங்கேட்டுக் கடைசியில் ஒன்றும் புரியாமல் நிற்பவன் ஆடு. ஆடு ஒரு செடியிலே வயிராற மேயாது. இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்று அங்கேயும் இங்கேயும் அலையும்.

சில பேருக்கு எருமை என்று பெயர். எருமை குளத்து நீரைக் கலக்கித்தான் குடிக்கும். அது மாதிரி ஆசிரியர் மனத்தை நோகச் செய்து பயில்கிற மாணவர்களெல்லாம் இந்த ரகம். இவ்வளவு எல்லாம் இருந்தாலும் இந்தக் காலத்து மாணவர்கள் எல்லாம் தனி ரகம்.

ஒரு ஆசிரியர் வகுப்பிலே பாடம் நடத்திக் கொண்டிருந்தார். இலக்கண வகுப்பு. இறந்தகாலம்- நிகழ்காலம்- எதிர்காலம் இதைப் பற்றிய பாடம். எல்லாம் சொல்லிக்கொடுத்துவிட்டு, ''இப்போது நான் ஒரு வாக்கியம் சொல்லுவேன். அது என்ன காலம் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும்.'' என்றார் ஆசிரியர். ''சரி'' என்றார்கள் மாணவர்கள்.




''நான் நாளைக்கும் பாடம் நடத்தப் போகிறேன்.. இது என்ன காலம்?'' என்று கேட்டார் ஆசிரியர். ஒரு பையன் மெதுவாக எழுந்து நின்றான்.

''இது எங்கள் போதாத காலம் சேர்!'' என்று சொல்லிவிட்டு இருந்தான்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# நவக்கிரக வழிபாடு இடம்பெறும் புலோலி மனோன்மணி அம்பாள்

**(கடந்தவாரத் தொடர்ச்சி)**



பல நூற்றாண்டு கால சிறப்புடைய புலோலி மனோன்மணி அம்பாள் ஆலயத்திலே நிகழ்ந்த அற்புதங்கள் புதுமைகள் எண்ணிலடங்காதவை. இந்துமத வரலாற்றில் தெய்வங்கள் பல அற்புதங்களையும் அதிசயங்களையும் நிகழ்த்தி தம் அடியார்களை ஆட்கொள்வதுண்டு. அற்புதங்களும் அதிசயங்களும் கற்பனையல்ல. ஊனினை உருக்கி உள்ளொளி பரப்ப பக்தி அவசியமாகின்றது. பக்தியைத் தூண்டுவதற்கு அற்புதங்களும் அதிசயச்செயல்களும் அடிகோலுகின்றன. முதலி அம்பாள் என்று அழைக்கப்படும் புலோலி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அதிசயமிக்க பல அற்புதங்களினை நிகழ்த்தியுள்ளார்.

1987ஆம் ஆண்டு ஆலயத்திலே அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, கும்பாபிஷேகத்தின பிரதம குருக்கள் ஐயாவான குமார சாமிக் குருக்கள் "எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் சிறப்பாய் அமைந்து வருகின்றது. ஆனாலும் அம்பாளுக்கு திருவூஞ்சற்பா இல்லாது ஒரு பெருங்குறையே என வருந்தினார். இவ்வாறு இவர் மனவருத்தமானது புலோலி மனோன்மணி அம்பாளின் மகாகும்பாபிஷேகத்தை கண்டுகளித்துய்ய ஆலயத்துக்கு வந்திருந்த வதிரி சைவப்பெரியார் கா.சூரன்களின் புதல்வியான சிவபாக்கியம் (கவிக்குயில் சிவா) ஆசிரியையின் காதிற்கெட்டியது.

குருக்கள் ஐயாவின் மனவருத்தத்தைத் தீர்க்க முன்வந்த கவிக்குயில் சிவா அவர்கள் அம்பாளின் ஆலய சந்நிதானத்திலிருந்தே ஒரு சில மணிநேரத்துக்குள் அம்பாளின் திருவூஞ்சற்பாவை அழகு தமிழில் யாங்கு ஆக்கித் தந்தமை அம்பாளின் அற்புதமான அதிசயமின்றி வேறில்லை.

> கடந்த பலநூற்றாண்டுகளாக மக்களின் அயராத முயற்சியால் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று வடமராட்சிப் பிரதேசத்திலே காணப்படும் அன்னை ஆலயங்களில் முக்கியமானதாக புலோலி அம்பாள் மிளிர்கின்றாள்

புலோலி தன்னில் வீற்றிருந்து புதுமைகள் புரியும் அன்னை மனோன்மணிக்கு விகிர்த்தி வருடம் மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. ஆலய பிரதமகுரு சைவசித்தாந்த பண்டிதர்,அருட்பிரபாகர சீலர், அருட்பிரபாக வித்திசாகரம் சிவஸ்ரீ தியாக .சோமஸ்கந்தராஜக் குருக்கள் தலைமையிலே மகா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நடைபெற்றது. இந்த மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு அன்னையின் வரலாறு, அற்புதங்கள், திருத்தொண்டுகள் புரிந்த அன்பர்களின் விவரங்களை உள்ளடக்கிய கும்பாபிஷேக மலரொன்றும் வெளியிடப்பட்டது. பன்னெடுங்கால பக்திப் பாரம்பரியம்கொண்ட இந்த ஆலயத்திலே திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. திருவிழாக் காலங்களிலே அன்னை மனோன்மணி இந்த வாகனத்திலே பவனி வந்து அருள் சுரக்கும் காட்சி காண்பதற்குரியது. இந்த ஆலயத்திலே தற்போது நவக்கிரகங்கள் வழிபாடும் இடம்பெற்று வருகின்றது. இந்த நவக்கிரக திருவுருவங்களை இதுவரை காலமும் நிலமரபுரிமைப்படி நிர்வாகம் செய்யப்பட்டு வந்த இந்த ஆலயத்துக்கு 1995 ஆம் ஆண்டுமுதல் ஆலய அடியார்களைக் கொண்ட நிர்வாக சபை அமைக்கப்பட்டது.

அதன்படி 1995 ஆம் ஆண்டு தலைவராக து.மார்க்கண்டு , செயலாளராக சி. கிருபாகரசூரியன் பொருளாளராக செ.ஜெயவீரசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு ஆலய கும்பாபிஷேக நிர்வாகத்திலே தலைவராக சி.ராஜலிங்கம், செயலாளராக சி.கிருபாகரசூரியன், பொருளாளராக க.புஸ்பராணி ஆகியோர் இருந்து சிறப்பாகப் பணியாற்றினர். இதிலே சி.கிருபாகரசூரியன் தொடர்ச்சியாக 12 வருடங்கள் செயலாளராக இருந்து சிறந்த சமயப் பணி ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஆலயத்தின் நிகழ் கால நிர்வாகத்திலே தலைவராக வ.ரவிதாசன் பொருளாளராக வே.சாந்தகுமார் ஆகியோர் பணியில் உள்ளனர்.

ஆலயத்திலே கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்துக்கு முன்னின்று நிதிசேகரித்து உழைத்த பெருமை பொருளாளரைச் சாரும் சீர் சிறப்பு மிக்க இந்த ஆலயம் கடந்த பல நூற்றாண்டுகளாக மக்களின் அயராத முயற்சியால் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று வடமராட்சிப் பிரதேசத்திலே காணப்படும் அன்னை ஆலயங்களில் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. இந்த ஆலயம் புலம்பெயர்ந்து உலகில் பல திசைகளிலும், பரந்திருக்கும் பக்த அடியார்களின் பங்களிப்பால் இன்று சிறந்த நிலையை அடைந்துள்ளது. அதேபோல ஊர் இளைஞர்கள், யுவதிகள், பெரியோர்களின் கூட்டுப் பங்களிப்பால் இந்த ஆலயம் அழகிய சிறிய சித்திரவேலைப்பாடுகளுடன் கூடிய ஆலயமாக மிளிர்கின்றது.

புலோலி மனோன்மணி தேவஸ்தானத்தின் வளர்ச்சிப் பாதையிலே பக்தர்களின் பங்களிப்பு பிரதானமானது. தொழில் தேடி தூரதேசம் சென்றாலும் புலம்பெயர்ந்து புவியின் எத்திசையில் வாழ்ந்தாலும் அவர்கள் ஆலயத்தை அங்கு அருள் புரியும் அன்னையையும் மறக்கமாட்டார்கள். அன்னையின் திருத்தல திருப்பணிக்கு திருத்தொண்டுக்கு மனமுவந்து உதவிகள் பல புரிந்த வருகின்றனர். அந்த வகையிலே ஆலய வசந்த மண்டபத்தை இருபாலையைச் சேர்ந்த மாணிக்கம் முருகநாயகராசா அமைத்துக் கொடுத்துள்ளார். தெட்சணாமூர்த்தி திருவுருவத்தை இத்தான கு.ஜெயக்குமாரி ஈந்துள்ளார். ஆலய கொடிக்கம்பத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.இராசசிங்கம் அமைத்துள்ளார். துவாலபாலகியினை யாழ்ப்பாணம் குணசிங்கம் குடும்பம் அமைத்துள்ளனர்.

ஆலயத்துக்கான மின் இணைப்பை வ.நவீந்திரராசா (கனடா) செய்துள்ளார். ஆலய மணிக் கோபுரத்தை யாழ்ப்பாணம் சின்னத்தம்பி அமைப்பித்துள்ளார். ஆலய ஒலிபெருக்கியை இராஜரட்ணம் குடும்பம் அன்பளிப்புச் செய்துள்ளனர். ஆலய 1008 சங்காபிஷேகத்தை நாகர் செல்லையா செய்கிறார். அதேபோல ஆலய பிள்ளையார் மண்டபத்தை க.வேலுப்பிள்ளை குடும்பம் அமைத்துள்ளனர். இவ்வாறு இன்று ஆலயம் அமைப்பு முறையிலும் ஆகம வழிபாட்டு முறையிலும் சிறப்பானதொரு ஆலயமாக வடமராட்சிப் பகுதியிலே பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

**சரவணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிகொத்தா தாக்குதல் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.24

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை அலுவலகமான சிறிகொத்தா மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மேல் மாகாண சபை உறுப்பினர் ஷிரால் லக்திலக மற்றும் ஹொரண தொகுதி அமைப்பாளர் ரவி ஜயவர்த்தன உள்ளிட்ட 16 பேர் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கங்கொடவில நீதிவான் வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேக நபர்கள் வாரத்துக்கு ஒரு முறை மிரிஹாண பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற முன்னைய உத்தரவு திருத்தப்பட்டு மாதத்திற்கு ஒரு முறை கையொப்பம் இட வேண்டும் என்று நேற்று திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் வெளிப்படுத்தப்பட வேண்டும்

வடக்குப் பிரச்சினைக்கு நம்பகரமான தீர்வுத்திட்டமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதே ஐக்கியதேசியக் கட்சியின் நிலைப்பாடாகும் என்கிறார் திஸ்ஸஅத்தநாயக்க.



கொழும்பு,ஜன.24

இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத்திட்டம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரியுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அளித்த வாக்குறுதி இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 13 ஆம் திருத்தச் சட்டத்தைத் தாண்டிய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வடக்குப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது தொடர்பில் அரசு காலம் தாழ்த்துவதனை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது என்று அவர் தெரிவித்தார்.

வடக்குப் பிரச்சினைக்கு நம்பகரமான தீர்வுத் திட்டமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதே ஐக்கியதேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். எனினும், இந்தத் தீர்வுத்திட்டம் நாட்டின் அரசியல் யாப்புக்கு அமைவானதாக இருக்க வேண்டும். அனைத்து இன மக்களினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் அமைய வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அரசு சர்வதேசத்தில் ஒரு நிலைப்பாட்டையும் உள்நாட்டில் மற்றோர் நிலைப்பாட்டையும் வெளியிட்டு வருகின்றமை ஆபத்தானது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பாதாள உலகக் குழுக்களை இல்லாதொழிக்க நடவடிக்கை

கொழும்பு,ஜன.24


பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் அடிப்படையில் நாடு முழுவதிலும் பதுங்கியிருக்கும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களை கைது செய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பைப் பேணும் நபர்களுக்கு எதிராக தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுக்கப்படும். பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதனை தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக கடல் வழியாக செல்லக்கூடிய வாய்ப்புக்களை முடக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதாள உலகக் குழுக்களை இல்லாதொழிக்க விசேட அதிரடிப்படை, பொலிஸ், முப்படையினர், புலனாய்வுப்பிரிவினர் உள்ளிட்ட நாட்டின் சகல பாதுகாப்புத் தரப்பினரினதும் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.

அரசியல்வாதிகளோ அல்லது ஏனைய தரப்பினரோ பாதாள உலகக் குழுக்களுக்கு ஆதரவளித்தால், அவர்களுக்கும் தண்டனை விதிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)



கா்லி இலக்கிய விழாவின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பல எழுத்தாளர்கள் கலந்து கொண்டு புத்தகங்களைக் கொள்வனவு செய்தனர்.

## பொன்சேகா மீதான வழக்கு விசாரணை 21இல் ஆரம்பம்

கொழும்பு,ஜன.24

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது தப்பியோடிய படையினர் 10 பேரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்டு அவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து கொடுத்து அவர்களை அரசுக்கு எதிராக செயற்பட வைத்தமை தொடர்பில் சரத் பொன்சேகா மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் நாளாந்தம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கை சரத் பொன்சேகா மற்றும் அவருடைய செயலாளர் சேனக டி சில்வா ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அதன் மீதான விசாரணை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கில் சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் 41 குற்றச்சாட்டுக்களை சுமத்தி தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகை நேற்று திங்கட்கிழமை பிரதிவாதிகள் முன் பகிரங்கமாக வாசிக்கப்பட்டுள்ளது. இந்த 41 குற்றச்சாட்டுக்களையும் பிரதிவாதிகள் மறுத்துள்ளனர்.

இதனையடுத்து வழக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நாளாந்தம் விசாரணை செய்ய தீர்மானிக்கப்பட்டதோடு பிரதிவாதிகள் மற்றும் சாட்சியாளர்களை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கைதிகள் தப்பியோட முயற்சி; 5 பேர் படுகாயம்

கொழும்பு,ஜன.24

காலி சிறைச்சாலையில் இருந்து சிறைக் கைதிகள் சிலர் தப்பிச் செல்ல முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் இரு கைதிகளும் மூன்று சிறை அதிகாரிகளும் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு காலி சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகள் தப்பிச் செல்ல முற்பட்டவேளை சிறை அதிகாரிகள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது கைதிகள் மற்றும் சிறை அதிகாரிகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஐவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் காலி கராபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நியமனம்

கொழும்பு,ஜன.24

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக கலாநிதி நெவில் குருகே நியமிக்கப்பட்டுள்ளார்.

சுங்கத் திணைக்களப் பணிப்பாளராகக் கடமையாற்றிய சுதர்ம கருணாரத்ன பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. நெவில் குருகேயை சுங்கத் திணைக்கள பணிப்பாளராக நியமிக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## குரோத உணர்வுகளை பேணும் கூட்டமைப்பினர்

கொழும்பு,ஜன.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சிலர் இனங்களுக்கு இடையிலான குரோத உணர்வுகளை தொடர்ந்தும் பேணுவதற்கு முயற்சி செய்கின்றனர் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

லுனுகம்வெஹர பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனங்களுக்கு இடையிலான குரோத உணர்வுகளை தொடர்ந்தும் பேணுவதற்கு முயற்சிக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கினால் முஸ்லிம் மக்கள் கோபமடைவார்கள். இதனால் தமிழ் - முஸ்லிம் பிரச்சினை உருவாகும்.

தீர்வுத் திட்டத்தில் யாருக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படபோவதில்லை. அவ்வாறு வழங்கினால் சிங்களவர்கள் தமிழரை எதிரியாகப் பார்ப்பார்கள். அவ்வாறான நிலைமைகள் உருவாகாமல் அனைவரும் சமாதானமாக வாழக் கூடிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார். (ச)

தீர்வுத் திட்டத்தில் யாருக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட போவதில்லை. அவ்வாறு வழங்கினால் சிங்களவர்கள் தமிழரை எதிரியாகப் பார்ப்பார்கள் என்று இடர்முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## குறுகியகால அபிவிருத்திக்கு நாட்டை ஒப்படையுங்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் நாட்டைத்த தந்து பாருங்கள். மிகக் குறுகிய காலத்தில் நாடு எவ்வாறு முன்னேற்றம் அடையும் என்பதை அறிவீர்கள் என்று அரியநேத்திரன் எம்.பி.குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு,ஜன.24

தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் நாட்டைத் தந்து பாருங்கள். மிகக் குறுகிய காலத்தில் நாடு எவ்வாறு முன்னேற்றம் அடையும் என்பதை அறிவீர்கள் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, பழுகாமத்தில் இடம்பெற்ற பொங்கல் தினவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 வருடகால போரின் பின்னர் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதாக அரசு கூறிவருகின்றநிலையில், இதுவரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை. தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் 18 சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ள போதிலும் நிலையான தீர்வுகள் எதுவும் கிட்டவில்லை.

இந்த ஆண்டில் தமிழ் மக்களுக்கு வேண்டிய அதிகாரங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. நிரந்தர அரசியல் தீர்வுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது.

எமது பகுதியில் மிஞ்சியது கல்வி மட்டுமே. இதனை உரிய முறையில் பயன்படுத்தியதனால்தான் நமது சமூகம் இன்று வளர்ந்து வருகின்றது. இதற்கு கல்வி கற்கும் மாணவர்களின் சிந்தனை ஒன்றாக இருக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கிலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் மாத்திரம் தான் அக்கறை செலுத்துகின்றார்கள். இதைவிட வடக்கு, கிழக்கில் அதிகம் வேலையில்லாப் பட்டதாரிகள் உள்ளனர். எனினும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அதிகம் கலைத்துறைக்குத்தான் திணிக்கின்றார்கள். கடந்த 2010 ஆண்டு மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு 94 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 22 பேர் மாத்திரம்தான் நமது மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நிலை மாற்றம் அடையவேண்டும்.

30வருட கால ஆயுதப் போராட்டம் பல அழிவுகளைத் தந்திருந்தாலும் எமது மக்களின் ஒழுக்கம் விடுபடவில்லை. இதுபோன்று எமது எதிர்கால சந்ததியினரையும் ஒழுக்கத்துடன்வளர்க்க வேண்டும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுளம்பு பெருகும் வகையில் சூழல் பேணியோர் மீது வழக்கு

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது நுளம்புப் பெருகும் வகையில் சுற்றாடலை வைத்திருந்த குற்றத்துக்காக 237 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ்.பிராந்திய சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கடந்த வாரம் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டது. கடந்த 16ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரையான இந்தக் காலப்பகுதியில் யாழ். மாவட்டத்திலுள்ள 12 சுகாதார வைத்தியப் பிரிவுகளிலும் அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள், வீடுகள், வியாபார நிலையங்கள்,தொழில் கூடங்கள் , பொது இடங்கள், பராமரிப்பற்ற காணிகள் என்பவற்றில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டன.

இதன்போது டெங்கு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 237 பேர் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது தவிர 948 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் இருந்தமை கண்டறியப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

13 ஆயிரத்து 10 இடங்களில் நுளம்பு பெருகும் வகையில் அமைந்திருந்தன. உடனடியாக அந்த இடங்களுக்குப்பொறுப்பானவர்களுக்கு அவை பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டு உரிமையாளர்கள் மூலமாகத் துப்புரவு செய்யப்பட்டன.

48 ஆயிரத்து 929 இடங்கள் மேற்படி நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கை அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், பொலிஸார், படையினர் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16.07.1931 (திதி: பிரதமை) மறைவு 26.01.2009

### அமரர் முருகேசு சங்கரப்பிள்ளை



(முன்னாள் உரிமையாளர் ''முருகன் ஸ்ரோஸ்'' மாவத்தகம - குருநாகல்/சுன்னாகம்)

அன்பின் ஊற்றாய்
எம்மை அரவணைத்து
ஆளாக்கிய அப்பாவே
உங்கள் இன்பத் திருமுகம்
என்றும் எம் இதயத்தில்
நிழலாடும்!
ஆண்டுகள் மூன்று
நகர்ந்து மறைந்தாலும்
அன்பு அப்பாவே
உங்கள் அழியாத
நினைவுகள் அன்றாடம்
எம்மனதில் நின்றாடும்.

''மலரகம்'' பலாலி வீதி,
கொட்டக்காடு லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(13424)

## முதலாம் வருட நினைவஞ்சலி

அன்னை மடியில் 02 - 06 - 1985



ஆண்டவர் அடியில் 24 - 01 - 2011

### அல்பிறட் நொயல் மரீன்ஸ்

''உயிரும் உயிர்ப்பும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்'' [அரு 11:25]

எமது அன்புச் செல்வன் அல்பிறட் நொயல் மரீன்ஸ் அவர்களுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு, உயரப்புலம் ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒப்புகொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கேற்று அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி அன்புடன் அழைக் கின்றோம். திருப்பலியைத் தொடர்ந்து எமது வீட்டில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் பங்கேற்றுக் கொள்ளுமாறு பரிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

GONE FROM OUR HOME
BUT NOT FROM OUR HEARTS

''ஆவே மரியா''
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(C\8071) (6,7,10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவத்திரு செல்லத்துரை சிவராசா

*(சாவகச்சேரி மக்கள்கடை ஓய்வூதியர்)*



சரசாலையைப் பிறப்பிடமாகவும் இலுப்பையடி வீதி, மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவராசா நேற்று (23.01.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் மதனராணியின் அன்புக் கணவரும் சிவரஞ்சினி, மகிந்தன், சிவபாலன், சிவநேசன், சிவரூபன், (ரூபன் ரெஜிலறிங், நுணாவில்) காலஞ்சென்ற சிவகாந்தன் மற்றும் சிவதர்சன் (அம்பிகை களஞ்சியம், யாழ்ப்பாணம்), சிவதர்சினி, சிவநிரோஜன் (பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவன் (2012 BA), கிருஷாந்தன் (பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவன் (2013 BA) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமலிங்கம் (உரும்பிராய்), கஜனி (நவக்கிரி), சுமதி (கைதடி, நுணாவில்) ஆகியோரின் மாமனாரும் சிவகாந்தன், சஜித்தா,மதுஷா, குஷந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நேரியது இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலுப்பையடி வீதி,
மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி.

(13442)(2-6-7)

தகவல்: குடும்பத்தினர்.

## விபத்தில் காயம்

வலி. வடக்கு, ஜன. 24

கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை வவுனியா புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற பிக்கப் லொறி வாகன விபத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த சாரதி படுகாயங்களுக்கு உள்ளகி ஆபத்தான நிலையில் வவுனியா கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அதிகாலை ஒரு மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. புளியங்குளம் பகுதியில் ஏ 9 பாதையில் முன்னாள் சென்று கொண்டு இருந்த லொறியின் மீது பின்புறமாகச் சென்ற கொண்டு இருந்த பிக்கப் வாகனம் திடீரென பக்கம் மாறிச் சென்று மோதியுள்ளது.

இதனால் பிக்கப் வாகனத்தின் சாரதி படுகாயமுற்று ஆபத்தான நிலையில் அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

புளியங்குளம் பொலிஸார் குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்து காயப்பட்டவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-86)

## பொதுக் கூட்டம்

தென்மராட்சி, ஜன. 24

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் சி.பூபாலசிங்கம் தலைமையில்நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதனும் சிறப்பு விருந்தினராக மாவட்ட கூட்டுறவு விரிவாக்க உத்தியோகத்தர் (பனை தென்னைவளம்) இ.பாலச்சந்திரனும்கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவ் த.சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் பல்கலைக்கழக அனுமதி மற்றும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமைக்காக ஊக்குவிப்பு பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ம-207)

## மாநகரசபை யாழ்ப்பாணம் பொது அறிவித்தல் - 2012

1. 2012 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திர உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிறுவனங்களும் 2012 ஆம் ஆண்டிற்கான வியா பார உரிமக் கட்டணங் களை 31.03.2012 இற்கு முன்னர் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல் எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும், காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியைப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/ வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் சபையினால் அகற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

3. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2012
*2012 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.*

திருமதி யோ. பற்குணராஜா
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி/8067) (45-7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் - 15.05.1929
மறைவு - 26.12.2011



### அமரர் சண்முகம் கந்தசாமி

*அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே பார் புகழ எம்மை எல்லாம் வாழவைத்து
இன்பமுடன் இருக்கையில் எம்மை விட்டு சென்றனையோ!
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்*

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்து ஆறுதல் கூறி அனுதாபம் தெரி வித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை கீரிமலையில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், நாளை புதன்கிழமை (25.01.2012) எமது இல்லத்தில் நடை பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி.

(C\8069)(6,7,10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### இராசதுரை இராசாத்தி (ஆத்தைப்பிள்ளை)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமாகிய இராசதுரை இராசாத்தி (22.01.2012) ஞாயிற்றுக் கிழமை காமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, இராசதுரை, சின்னத்தம்பு, சின்னமணி மற்றும் கண்மணி, செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசலட்சுமி, இராசேஸ்வரன், இராசகுமார், காந்தராசா ஆகியோரின் பாசமிகு தாயும், யோகேஸ்வரன், லோகேஸ்வரி (நிகழ்ச்சித்திட்ட, உதவியாளர், கால்நடை வைத்தியசாலை- கோப்பாய்), ஜீவநந்தினி (முன்பள்ளி ஆசிரியர் - புத்தூர் கிழக்கு) ஆகியோரின் மாமியாரும், மதிவதனி, குபேந்தினி, சுதர்சன், சுதர்சினி, ஜீவிதன், தாருஜன், நிலக்ஷனா, மகிஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உளவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொட்டக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்

(13372) (45-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். வவுனியா மாவட்டங்களில் பெரும்பாலும் மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும். ஏனைய 3 மாவட்டங்களிலும் ஓரளவு மேகக்கூட்டத்துடன் காலநிலை இருக்கும்.

# படை அதிகாரி அடாவடி; மாநாட்டில் பிரஸ்தாபம்

**பெற்றோலிய எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மிகவும் உன்னிப்பாகக் கவனித்துள்ளார். அத்துடன் அமர்ந்திருந்த ஏனைய தென். பிரதேச சபைகளின் தவிசாளர்கள் உட்பட அனைவரும் செவிமடுத்தனர்**

யாழ்ப்பாணம், ஜன.21

வலி.வடக்குப் பிரதேச சபையின் தலைவர் கடந்த வாரம் கடற்படையினரால் தாக்கப்பட்ட விவகாரம் கொழும்பில் இடம்பெற்ற தலைவர் மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கொழும்பு பியகமவில் 40 வயதுக்கு உட்பட்ட இளம் தலைவர்களின் சம்மேளனம் அமைக்கும் கூட்டம் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் ஜெபநேசன் வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவரான சோ. சுகிர்தன், எஸ். ஹரிகரன் ஆகியோர் கடற்படையினரால் தாக்கப்பட்டவிடயத்தை எடுத்துக் கூறியதுடன் வடக்கு, கிழக்கில் உள்ள பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமையே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப் பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து சபையில் இருந்த பெற்றோலிய எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மிகவும் உன்னிப்பாகக் கவனித்துள்ளார். அத்துடன் அமர்ந்திருந்த ஏனைய தென். பிரதேச சபைகளின் தலைவர்கள் உட்பட அனைவரும் செவிமடுத்துக் கேட்டுள்ளனர். (ந-86)

# கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை

**வடதாரகை மற்றும் குமுதினிபோன்ற படகுகளை இறங்கு துறைக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை**

யாழ்ப்பாணம்,ஜன.24

நெடுந்தீவு, இறங்கு துறையின் கட்டுமானப் பணிகள் இந்தவாரம் மேலும் துரிதப்படவுள்ளன.

இந்தக் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தி இறங்குதுறைப் பகுதிச் சேவையை துரிதமாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இறங்குதுறைக் கட்டுமானப் பணிகளை சபையின் அதிகாரிகளின் குழு கடந்த வாரங்களில் சென்று பார்வையிட்டுத் திரும்பியுள்ளது.

இதனையடுத்து இந்த இறங்குதுறையை விரைவாகப் புனரமைத்து வடதாரகை மற்றும் குமுதினி போன்ற படகுகளை இறங்கு துறைக்குள் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுமானப் பணிகளைத் துரிதப்படுத்தி நிர்மானப் பணிகளை மேற்கொள்ளுமாறு இறங்கு துறைக் கட்டுமானப்பணியில் ஈடுபடும், ஒப்பந்தகாரர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ந-17)

# தலைவர் சம்மேளனம் அமைக்கும் கூட்டம்

வலி-வடக்கு,ஜன.24

உள்ளூராட்சி மன்றங்களின் இளைய தலைவர்களுக்கான சம்மேளனம் அமைக்கும் கூட்டம் கொழும்பு பியகமவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கடந்த வருடம் இடம்பெற்ற இலங்கை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்ற 40 வயதுக்கு உட்பட்ட தலைவர்களுக்கான சம்மேளனமே தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடகால இடைவெளியின் பின்னர் வடக்கு கிழக்கில் இருந்து சென்ற உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

குறிப்பாக இந்தச் சம்மேளனம் அமைக்கும் பணியில் குறிப்பிட்டளவு தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கலந்து கொண்டனர். நிர்வாகத்திலும் கூட இவர்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-86)

## வைத்திய அதிகாரி நியமனம்

குருநகர் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக பதிவு வைத்திய அதிகாரி எஸ்.சீவரட்ணம் கடந்த 14 ஆம் திகதி மீண்டும் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றிய வைத்திய அதிகாரிகள் பலர் தமது 70 வயது கடந்த நிலையில் வடமாகாண ஆளுநரால் சேவையில் இருந்து கடந்த வருடம் இடைநிறுத்தப்பட்டபோது இவரும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# பத்திரிகையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.24

பலவருடங்களாக நடைபெறாது இருந்த வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்.ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் தலைவர் செ.கதிர்காமத்தம்பி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம் பெற்றது. இதில் தலைவராக செ.கதிர்காமத் தம்பி, உபதலைவராக கே.வி.கே.திருலோக மூர்த்தி, செயலாளராக ஐயா.சச்சிதானந்தன், உப செயலாளராக சு.கணேசராசா,பொருளாளராகஸ்திருச் செல்வம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதனைத்தொடர்ந்து செயலாளர் அறிக்கை, பொருளாளர் அறிக்கை வாசிக்கப்பட்டு ஏற்றுகொள்ளப்பட்டன. (ந-86)

# புதிய சேவை

இலங்கை மத்திய கல்வி அமைச்சால் 1977.04.01 இல் நியமனம் பெற்று பணியாற்றிவரும் முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர்கள் 260 பேரை இலங்கை முறைசாராக் கல்விச் செயற்றிட்ட அலுவலர் சேவையில் உள்வாங்குமாறு உயர் நீதி மன்ற நீதியரசர் கடந்த 12 ஆம் திகதி கல்வி அமைச்சுச் செயலாளரிடம் கூறியுள்ளார்.(ந)

யாழ்ப்பாணத்தின் முதலாவது இணைய வியாபார விபரக்கொத்து தொலைபேசி இலக்கங்களுடனும் தேடுதல் வசதியுடனும்.

www.jaffnaonline.info

Find a hotel
Transport/Hospital

அவசர பொலீஸ். வைத்தியசாலை உணவகங்கள்,வங்கிகள், முன்னணி தனியார் நிறுவனங்கள், வாகன ஆசன பதிவிடங்கள். தங்குமிடங்கள் கல்வி நிறுவனங்கள்.பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்கள், அழகு மாடங்கள்,கணினி இலத்திரனியல் விற்பனை நிறுவனங்கள்,அச்சகங்கள் இன்னும் பல...

Find a service/business..within a click !

Jaffna's First Online Directory

A project by **K.U Education** (Working for e-governance in Sri Lanka)

# கிரஹாம் பெல்லின் கடிதத்துக்கு 92 ஆயிரம் டொலர்!

அலெக்சாண்டர் கிரஹாம் பெல் தனது பெற்றோருக்கு தொலைபேசியைக் கண்டுபிடித்தது தொடர்பாக எழுதிய கடிதம் 92 ஆயிரம் டொலருக்கு ஏலம் போனது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கிய இந்த ஏலம் கடந்த வாரம் முடிவடைந்தது.

தொலைபேசியைக் கண்டுபிடித்த கிரஹாம் பெல் அது குறித்து தனது பெற்றோருக்கு சில விவரங்களைத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கடிதம் தொலைபேசி கண்டுபிடிப்பதற்கான காப்புரிமையைப் பெற்றுக் கொண்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது பெற்றோருக்கு எழுதப்பட்டதாகும். (ந)

# ஒலிம்பிக் போட்டி ஜூலை 27 இல் லண்டனில் ஆரம்பம்

லண்டன், ஜன.24

ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 27ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 12ஆம் திகதி வரை லண்டனில் இடம்பெறவுள்ளது.

இந்திய டென்னிஸ் வீரர்களுக்கு 7 பேருக்கு பயிற்சி மற்றும் பயிற்சியாளர்களுக்கான கட்டணம், போட்டியில் பங்கேற்பது ஆகிய செலவுகளுக்காக இந்திய மத்திய விளையாட்டு அமைச்சகம் மொத்தம் ரூ. 1 கோடியே 50 லட்சத்துக்கு அனுமதி அளித்துள்ளது.

இதன் மூலம் சோம்தேவ் வர்மன், லியாண்டர் பயஸ், மகேஷ்பூபதி, ரோகன் போபண்ணா, ஆகிய முன்னணி வீரர்கள் பயன்பெறுவார்கள்.

ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட மாத காலத்துக்குரிய செலவுகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## கிளிநொச்சியில் பணி வெற்றிடம்

கணினிப் பயிற்சியும் கணினியில் தமிழ், ஆங்கில தட்டெழுத்துத் திறமையும் உடைய ஆண்/ பெண் உத்தியோகத்தர் தேவை. க.பொ.த (உ/த) சித்தி விரும்பத்தக்கது. சம்பளம், திறமை/ அனுபவத்திற்கு ஏற்ப பேசித் தீர்மானிக்கப்படும். கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிவரக்கோவையுடனும் கிராம அலுவலரின் சான்றிதழுடனும் 27.01.2012 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.9 மணிக்கு நேரில் வரவும்.

**எஸ்.வி.ஆர்.என்ரபிறைசஸ் & சட்டவள நிலையம்**

கந்தசாமி கோவில் முன்பாக கண்டி வீதி, கிளிநொச்சி

## கிளிநொச்சியில்

**இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்**

**பொறியியல் தொழில்நுட்ப பீடம்**

கல்வி ஆண்டு 2012/2013 இல் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்காக நடத்தப்படும்

**அறிமுகக் கருத்தரங்கு**

இடம் : இலங்கைத் திறந்த பல்கலைக்கழக கிளிநொச்சி கற்கை நிலையம் கிளி/புனித திரேசா மகளிர் கல்லூரி, கிளிநொச்சி.

காலம் : 28.01.2012 சனிக்கிழமை மு.ப. 10.00 மணி

மேற்படி பீடத்தினால் பின்வரும் துறைகளில் டிப்ளோமா மற்றும் இளமாணி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

- குடிசார் எந்திரவியல்
- கணினி எந்திரவியல்
- மின் எந்திரவியல்
- இலத்திரனியல், தொடர்பாடல் எந்திரவியல்
- பொறிமுறை எந்திரவியல்
- பொறி இலத்திரனியல் எந்திரவியல்
- புடைவை எந்திரவியல்

விண்ணப்பதாரிகள் 18வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞானத் துறைகளில் கல்வி கற்றவர்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது. ஏனைய துறைசார்ந்தவர்களும் ஆகக்குறைந்த பெறுபேறுகளுடன் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவங்களை தற்போது கிளிநொச்சி கற்கை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி:**
07.02.2012 (க.பொ.த.(உ/த)இல் ஆங்கிலம் சித்தியடையாதவர்களுக்கு)
31.03.2012 (க.பொ.த.(உ/த)இல் ஆங்கிலம் சித்தியடைந்தவர்களுக்கு)

மேலதிக விவரங்களுக்கு
இணைப்பாளர்,
கிளிநொச்சி கற்கை நிலையம்
தொ.பே:0777705963

(C\8074)(6,7,10)

பதிவாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**பரிமளம் குமாரசேகரம்**

(உடையார் வளவு, உரும்பிராய்)

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா - என்று
அழைக்க அம்மா நீங்கள் இல்லையே!

நின் தன் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் நேரில் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

83, 2/4 Hampden Lane,
Colombo - 06
2366970 (சி/7966)(45-7-6)

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய வாய்ப்புகள் தேடி வரும் நாள். சக ஊழியர்கள் உங்களின் யோசனைகளுக்கு ஆதரவு தெரிவிப்பர். கடனாக வாங்கிய பணம் ஒன்றைத் திருப்பிக் கொடுப்பீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு, கௌரவம் அதிகரிக்கும். புதிய பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். தம்பதியர் பாசம் மேலிடும்.

**இடபம்:** குடும்பச் செலவுகள் அதிகரிக்கலாம். நண்பர்கள் சிலர் உங்களுக்காக சில உதவிகளைச் செய்ய முன்வரலாம். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். புதிய வேலை பெற முற்படுவோர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். வியாபாரிகள் வேலையாள்களால் அனுகூலம் பெறுவர். பதற்றம், படபடப்புடன் செயற்பட நேரிடலாம்.

**மிதுனம்:** வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். புத்திசாலித்தனமாகச் செயற்பட்டாலும், சில விடயங்களில் சறுக்கல்களைச் சந்திக்கலாம். குறைந்த செலவில் முடிக்க வேண்டிய வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். பாராட்டிய சிலரே இன்று உங்களை விமர்சிக்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம்.

**கடகம்:** வெளியிடங்களுக்குச் செல்லும் போது, உறவினர்கள் சிலரை எதிர்பாராமல் பார்க்க நேரிடலாம். முன்யோசனையுடன் செயற்படுவதன் மூலம் சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். உறவினர்களிடம் உங்களின் பெருமைகளைப் பற்றி பேசுவீர்கள். புத்துணர்ச்சியுடன் செயற்படும் நாள்.

**சிங்கம்:** போட்டிகள், எதிர்ப்புகள் விலகி புத்துணர்ச்சி பெறும் நாள். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். தடை, தாமதங்கள் இல்லாமல் வழக்கமான பணிகள் சரியான நேரத்துக்கு முடிவுக்கு வரும் நாள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம்.

**கன்னி:** மற்றவர்களை குஷி ஏற்றி விட்டு, அவர்களின் ரகசியங்களை அறிந்து கொள்வீர்கள். நண்பர்களால் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். குறைந்த செலவில் முடிக்க நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகி விடலாம். வீண் பயம் ஆள்கொள்ளும்.

**துலாம்:** பெரிய மனிதர்கள் சிலரின் நட்புக் கிடைக்கலாம். மாணவர்கள் ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, உடனுக்குடன் வாகன வசதி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். புதியவர்கள் சிலரிடம் உதவிகளைப் பெறலாம்.

**விருச்சிகம்:** வெறுப்பு, விருப்பு இல்லாமல் அனைவரிடமும் அன்பாக நடந்து கொள்ளும் நாள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். பெற்றோருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டுக்களைப் பெறலாம். நிம்மதி பெறும் நாள்.

**தனுசு:** குதர்க்கமான பேச்சுக்களால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படலாம். குழந்தைகள் கேட்ட பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கிக் கொடுப்பீர்கள். நேற்று அரைகுறையாக விட்ட சில பணிகளை இன்று வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை செய்ய முடியாமல் இன்று தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்.

**மகரம்:** எதிர்பார்த்தது எல்லாம் இனிதே நடக்கும் நாள். பணிபுரிவோர் கடும் வேலைப்பளுவை எதிர் கொள்ளலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். தொட்ட காரியங்கள் தங்கு தடையின்றி, துளிர் விட்டு வளரும் நாள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கலாம்.

**கும்பம்:** குடும்ப உறுப்பினர்கள் இடையே சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். உங்களின் சொந்த விடயங் களை மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு பின்னர் பின்வாங்குவீர்கள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். தெய்வ வழிபாடு மூலம் அமைதி பெறுவீர்கள்.

**மீனம்:** நண்பர்கள் வழியில் பெருமைப் படும் வகையிலான உதவி கிடைக்கும். பணிபுரிவோர் வேலைப்பளு குறைவால் மகிழ்ச்சி அடைவர். பணவரவுகளைப் பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். உடன்பிறப்புகள் மீதான பாசம் அதிகரிக்கும். சிலருடன் ஆரோக்கியமான வாக்கு, வாதங்களில் ஈடுபடலாம். கனவுகள் பலிக்கும்.

**நாளை**

தை 11 புதன்கிழமை 25.01.2012
திதி: துதியை பி.ப. 01.29 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப. 05.16 வரை
சுபநேரம்: 05.06 - 06.36 வரை,
ராகு காலம்: 12.36- 02 .06 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 7 | | 1 | 2 | 9 | | |
| | | | | 3 | | | 8 | 4 |
| | 9 | 4 | | 5 | 8 | 1 | | |
| | 7 | | | 4 | 9 | | | |
| | 6 | 8 | | | | 2 | 9 | |
| | | | 2 | 6 | | | 4 | |
| | | 6 | 1 | 8 | | 3 | 2 | |
| 1 | 5 | | | 2 | | | | |
| | | 2 | 6 | 9 | | 4 | 5 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## மரண அறிவித்தல்



திருமதி
தனபாக்கியலக்சுமி பரராசசிங்கம் (பேபி அன்ரி)
(இளைப்பாறிய ஆசிரியை, யா/இந்து மகளிர் கல்லூரி)

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியலக்சுமி பரராச சிங்கம் (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்
மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (13439) (45-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 ★ 02 ★ 1924
மறைவு 25 ★ 12 ★ 2011

திருமதி
கதிர்காமு பாலாம்பிகை

இவ்வுலகில் சிறப்பாய் வாழ்ந்து
எம் இமைபோல் எம்மிடம் இருந்து
மண்விட்டு சென்று சிவன்பாதம் கண்டு
நம்வீட்டு தெய்வமாகி எம்மோடு உள்ளீர்கள்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்
233/3, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(13440) (45,6,7)


## பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணக் கல்வி வலயம் முறைசாராக் கல்விப் பிரிவால் பாடசாலைகளில் இலவச தொழில்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. வண. நாவலர் மகா வித்தியாலயம் கோண்டா வில் இந்து மகா வித்தியாலயம், வைத்தீஸ்வரக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பயிற்சிகள் இடம்பெறும். 25 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கு விண்ணப்பிக்கலாம். (ம)


### கடை விற்பனைக்கு

யாழ். மணிக்கூட்டு கோபுரம் வீதி, விக்டோரியா வீதிச் சந்திக்கு எதிராக புதிதாக கட்டப்பட்டுள்ள கடை 15'x 60'(900 Sq) விற்பனைக்குண்டு. மேல் மாடி கட்டக் கூடிய அனுமதியும் உண்டு
தொடர்பு: 0770 575454 - 077 7749174 (A/7965)

### தவறிவிட்டது

இலங்கை நாயகி அம்மன் கோயிலடி கல்வியங்காடு, பரராஜசிங்கம் சர்மிளா (747522235 V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கல்வியங்காட்டுக்கும் சுப்பர் சோவிற்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 271 8862 (13438) (45-7)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம் அழையுங்கள்
077 9086737 (13369) (45-7)

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயதுடைய உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை. ஜாதகக் குறிப்பு, தொலைபேசி இலக்கத்துடன் விவரத்தை அனுப்பவும். விளம்பர இல. 4215 மே/பா.உதயன் பணிமனை.
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு

நாச்சிமார் கோயிலுக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் 4 அறைகளும் 2 கோல் சகல வசதிகளுடனும் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0772247747

### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் (26.01.2012) விநியோகிக்கப்படும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944
சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085
(13302) (45,6,7)

## முதலாம் ஆண்டு நினைவில்



தாயின் அன்பில் 14 ★ 07 ★ 1939
தாயுமானவர் அன்பில் 24 ★ 01 ★ 2011

அளவெட்டியில் பலனாக பிறந்து
செட்டிகுளத்தில் ரூபியராக வாழ்ந்த

நாகலிங்கம் யுவராஜா

உங்களைப் பிரிந்து ஆண்டொன்று சென்றதாம்
எங்களால் நம்பமுடியவில்லை - ஏனென்றால்
நீங்கள் என்றும் எங்களுடன்
வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்கள்
எங்களுக்குள் நற்பேச்சாக, நற்பண்பாக, நற்சிந்தனையாக,
நற்செயலாக, நற்குணமாக என்றென்றும்
வாழ்ந்துகொண்டே இருப்பீர்கள்
அன்று பாதம்தொட்டு பாதபூசை செய்தோம்
இன்று எங்கள் மனக்கோயிலில் மூலவராக்கி
நினைவுகளால் பாதம்தொட்டு மாலையிட்டு ஒற்றுமை
என்னும் தீபம் ஏற்றி வணங்குகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்
(13425) (45-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையரின் நாவலுக்கு இந்தியாவில் விருது



சிங்கப்பூரில் வசிக்கும் இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலக்கவின் சைனா மேன் என்ற நாவலுக்கு இந்தியாவில் விருது கிடைத்துள்ளது.

இந்த வருடத்துக்கான இலக்கியவிழா இந்தியாவின் ஜெய்ப்பூரில் நடைபெற்றது. தெற்காசிய இலக்கியத்துக்கான 50 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான பணப் பரிசிலை வென்றுள்ளது.

கிரிக்கெட்டில் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் ஒருவரை, குறிப்பாக சைனாமேன் என்று விழிக்கப்படுகின்ற வித்தியாசமான திறமை கொண்ட கிரிக்கெட் வீரரை மையப்படுத்தி ஷெஹான் கருணாதிலக்க இந்த நாவலை எழுதியிருந்தார்.

பிரதீப் சிவநாதன் மெத்தீவ் என்ற வீரரின் கிரிக்கெட் வாழ்க்கையை விளையாட்டுச் செய்தியாளர் ஒருவர் எப்படி தேடி ஆராய்கிறார் என்று கதை நகர்ந்து செல்கின்றது.

கடந்த 50 ஆண்டு காலத்தில் சிவில் யுத்தத்தாலும் வேறுபல பிரச்சினைகளாலும் இலங்கையின் வளங்கள் வீணடிக்கப்பட்டு விட்டன என்ற தொனி வெளிப்பட, குறித்த கிரிக்கெட் வீரர் மற்றும் அவர் பற்றி தேடும் விளையாட்டுச் செய்தியாளர் போன்ற விசேட திறமையாளிகளையும் நாடு மறந்து விட்டது என்ற கவலையை வெளிப்படுத்தும் விதமாக ஷெஹான் கருணாதிலக்க தனது நாவலைப் படைத்திருக்கிறார்.

இந்த நாவல் கொழும்பைத் தாண்டி இந்தியாவரை பயணிக்கும் என்று தான் எதிர்பார்த்திருக்கவில்லை என்று பி.பி.சிக்குத் தெரிவித்த எழுத்தாளர், இவ்வறானவிருதுகளால் இலங்கை எழுத்தாளர்கள் ஊக்கமடைந்திருப்பதாகவும் சுட்டிக் காட்டினார். (வ)



கொழும்புத்துறை, ஜன.24

அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் அரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கனடாவில் வசிக்கும் கந்தையா கனகலிங்கம் தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாக 12 லட்சம் ரூபா செலவில் நிர்மாணித்த அரங்கை அவரது சகோதரர் கந்தையா விஜயரட்ணம் திறந்து வைத்தார். (வ-135)

## வேண்டுமா விநாயகர் சிலை?

யாழ்ப்பாணம், ஜன.24

இலங்கை இந்துமா மன்றம் விநாயகப் பெருமானின் விக்கிரகங்களை பாடசாலைகள், இந்து மன்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

முகப்பு வாயிலில் வைக்கக்கூடிய வகையில் சிமெந்துக் கலவையால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தச் சிலைகளை பெற்றுக் கொள்ள விரும்பும் இந்து மன்றங்கள், பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள், மன்றங்கள் இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற இந்து மாமன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-319)

## 8 வைத்திய அதிகாரிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் தமது 70 வயதின் பின்னரும் மீள் நியமனத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிந்த எட்டு வைத்திய அதிகாரிகள் வடமாகாண ஆளுநரால் கடந்த வருடம் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டனர். இவர்கள் தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கு வடமாகாண ஆளுநரின் அனுமதி கிடைத்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

யாழ்.மலேரியாத்தடை இயக்கப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் க.த. சிவபாதம், வல்வெட்டித்துறைப் பிரதேச வைத்திய சாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். மயிலேறும்பெருமாள், குருநகர் பிரதேச வைத்திய சாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சீவரட்ணம், நயினாதீவு பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சண்முகரட்ணம், டாக்டர் சிவராசா, டாக்டர் மகேந்திரன் ஆகியோருக்கே மேற்படி அனுமதியை வட மாகாண ஆளுநர் வழங்கியுள்ளார். இவர்கள் விரைவில் தமது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-300)

## மணற் குவியலில் கைக்குண்டு!

வலி வடக்கு, ஜன.24

கோண்டாவில் நந்தாவில் பகுதியில் மணற் குவியலில் இருந்து கைக் குண்டொன்று மீட்கப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கட்டட வேலைக்காக வீட்டு உரிமையாளர் பறித்திருந்த மணலில் கைக் குண்டு காணப்பட்டதை அடுத்து அதுகுறித்து இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் வந்த 513 ஆவது படைப்பிரிவினர் கைக் குண்டை மீட்டு நந்தாவில் வெளியில் வைத்துவெடிக்க வைத்தனர். (வ)

## பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.24

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

அடுத்தமாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-7)

## கச்சதீவு உடன்படிக்கையை மீண்டும் நடைமுறைப்படுத்துக

### கம்யூ. கோரிக்கை

கடந்த 1974 ஆம் ஆண்டில் கைச்சாதான கச்சதீவு உடன்படிக்கையை மீண்டும் நடைமுறைப் படுத்தி தமிழக மீனவர்கள் நடுக்கடலில் தாக்கப்படும் சம்பவங்களுக்கு இறுதி முடிவைகாண வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை தமிழக மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபட்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் தாக்குதலுக்கு உள்ளானதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கம்யூனிஸ்க் கட்சியின் தலைவர் டி. ராஜா தெரிவித்ததாவது:

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இலங்கைக்குச் சென்று திரும்பியுள்ள நிலையில் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது கண்டனத்துக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் இந் திய அரசு இதற்கு உரிய நடவடிக்கை மேற் கொள்ளவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்

# ராஜதந்திர வியூகங்களும் அரசியல் தகிடுதத்தங்களும்

இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கை வந்தார் அல்லவா! அவர் வருவதற்கு முன்னதாகவே முதலில் கிருஷ்ணா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனேயே ஆலோசனை நடத்தவிருந்ததாக செய்திகள் வெளிப்பட்டிருந்தன.

ஆனால் அவ்வாறு கூட்டமைப்பினருடன் கிருஷ்ணா பேச்சு நடத்துவதற்கு அவகாசம் இல்லாமல் செய்யும் வகையிலேயே அவரை தாம் நடத்திய பொங்கல் நிகழ்வுக்கு அழைப்பு விடுத்து ஒரு ராஜதந்திர வெற்றியை ஜனாதிபதி சாதித்துக்கொண்டதாக இப்பொழுது பேசிக்கொள்ளப்படுகிறது.

தம்முடன் பேசுவதற்கு முன் கிருஷ்ணா கூட்டமைப்புடன் பேசக்கூடாது என்று ஜனாதிபதி விரும்பியிருந்தார். அதற்கான காரணம் என்னவாக இருந்திருக்கும்?

முதலில் இந்திய தலையீட்டையும் இந்திய முயற்சியால் அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தத்தையும் முழுவீச்சில் எதிர்த்து நிற்கும் ஜாதிக ஹெல உறுமய ஜே.வி.பியில் இருந்து பிரிந்து வந்த வீரவன்ஸ குழு போன்றவைகளை ஜனாதிபதி திருப்திப்படுத்தவேண்டியவராக இருக்கின்றார். கூட்டமைப்பை முதலில் கிருஷ்ணா சந்திக்காமல் செய்தமையானது ஜனாதிபதியின் திறமை என்பதாக அக் கட்சியினர் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். மேலும் கூட்டமைப்பினருடன் அரசினர் நடத்திவரும் பேச்சுக்களில் இதுவரை காலமும் நடைபெற்றுள்ள இழுத்தடிப்புகள், ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமை போன்ற விடயங்கள் கூட்டமைப்பின் மூலம் முன்கூட்டியே தெரியவந்திருந்தால் கிருஷ்ணா அவைபற்றி ஜனாதிபதியுடனும் வெளியுறவு அமைச்சருடனும் நடத்திய பேச்சுக்களின் போது கேள்வி எழும்பியிருக்கக் கூடும். அக்கேள்விகளுக்கு அரசு தரப்பில் பதில் கூறுவதில் தர்ம சங்கடம் ஏற்பட்டிருக்கும். அதற்கும் மேலாக 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்குக் கையளிக்கப்படுவதை முழுமூச்சாக எதிர்க்கும் கட்சிகளை உள்ளடக்கியுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இடம்பெறுவதிலுள்ள பாதகமான நிலைமைகளை கூட்டமைப்பினர் கிருஷ்ணாவுக்கு எடுத்துக்கூறி விடாமல் தவிர்ப்பதும் இதில் உள்ளடங்கிய தந்திரமாக இருந்திருக்கலாம்.

கூட்டமைப்பை கிருஷ்ணா சந்திப்பதற்கு முன்னர் அவரை அரச தரப்பினர் சந்தித்துத் தமது தரப்புக்கான நியாயங்களை எடுத்துக்கூறி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பினரைக் கலந்துகொள்ளச் செய்வதற்கு அவர் மூலமே ஆலோசனை வழங்கச் செய்வதற்கான முயற்சியாகவும் இருந்திருக்கலாம்.

ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைக் கலந்து கொள்ளுமாறு கிருஷ்ணா ஆலோசனை வழங்கினாரா என்பது வெளிப்படையாகத் தெரியவரவில்லை.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரைவில் இந்தியா செல்லவிருப்பதால் இந்த விடயங்கள் சாங்கோபாங்கமாக அங்கே தெரிவிக்கப்படும் [illegible] எதிர்பார்க்கலாம். அதற்கு [illegible] நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்வது குறித்தோ அதற்கான பிரதிநிதிகளின் பெயர்களை அறிவிப்பதற்கோ கூட்டமைப்பினர் முன்வருவார்கள் என்று எப்படிக் கருத முடியும்?

எதுவானாலும் ஜனாதிபதியை மீண்டும் 13ஆவது திருத்தம் பிளஸ் வாக்குறுதியை வெளிப்படுத்தச் செய்து அதனை இலங்கை மண்ணில் வைத்தே வெளிப்படையாக உறுதிப்படுத்தி விட்டுச் சென்றுள்ளார் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா. தன் தரப்பில் ஒரு ராஜதந்திர வெற்றியை நிலைநாட்டிவிட்டே சென்றுள்ளார் என்று சில ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் எவ்வாறேனும் இடம்செய்து விடுவதற்கு அரச தரப்பினர் பெரும் பாடுபட்டு வருகின்றனர். பெரும்பான்மை சிங்களக் கட்சிகளின் பேராளர்களைக்கொண்டிருக்கக்கூடிய தெரிவுக்குழுவில் கூட்டமைப்பினர் ஒரு சிறு குழுவாகவே செயற்படுவார்கள். சிங்களப் பிரதிநிதிகள் பெருந்தன்மையுடன் தமிழர் தரப்புக் கோரிக்கைகளுக்கு இணங்குவார்கள் என்று எதிர்பார்ப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதாகவே இருக்கும். ஆகவேதான் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள அரச தரப்பினருடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு - ஓர் உடன்பாட்டுக்கு வருவதற்கு தமிழர் கூட்டமைப்பு விரும்புகிறது என்று கருதலாம். இந்த விடயத்தில் [illegible] லாக இருக்கும்.

-ரம்யன்-

# மஹிந்த...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெருவில் இறங்கி மஹிந்தவின் உருவப் பொம் மையைத் தீயிட்டுக் கொளுத்தி எதிர்ப்பை வெளிப்படுத்தும் நிலை உருவானது. குறிப்பிட்ட சட்ட மூலம் கொண்டுவரப்பட்டபோது அத்துறைக்குப் பொறுப் பான அமைச்சராகவிருந்த ஐ.தே.கட்சியிலிருந்து அரசில் இணைந்து கொண்டிருந்த காமினி லொக்குகே அது குறித்து எதுவும் அறிந்திருக்கவில்லை.

ஐ.தே.கட்சியிலிருந்து அரசில் இணைந்து செயற்பட்ட ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோவின் பொறுப்பிலிருந்து அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட பிளாஸ்ரிக் கூடை விவகாரமும் அமைச்சரால் உரிய வகையில் கையாளப்படபடாமையாலேயே மக்களின் எதிர்ப்புக்கு ஆளாக நேர்ந்தது. அதேபோன்றே ஐ.தே. கட்சியிலிருந்து அரசில் இணைந்து கொண்ட மிலிந்த மொரகொடவின் செயற்றிறனற்ற தன்மையே அரசு கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்ற இயலாத நிலையைத் தோற்றுவித்தது. அதே போன்று ஐ.தே. கட்சியிலிருந்து வந்த ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ரோஹித போகொல் லாகம ஆகியோருக்கு வெளியுறவுத்துறை அமைச்சை வழங்கியதன் மூலம் வெளியுறவுத்துறைச் செயற்பாடுகள் பின்னடைவு காண நேர்ந்ததாக ஜனாதிபதி மீது குறைபட்டுக் கொள்வோரும் அரச தரப்பில் உள்ளனர்.

மஹிந்த அரசில் இணைந்து கொண்ட போது அவர்கள் உயர்ந்த இடத்தில் வைத் துக் கணிக்கப்பட்டனர். ஆயினும் மனித உரிமை மீறல் தொடர்பான சர்வதேச குற்றச்சாட்டிலிருந்து அரசைக் காப்பாற்ற மஹிந்த சமரசிங்கவின் முயற்சிகள் போதுமானவையாக அமையவில்லை எனப் பல தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் வெளிவந்தன. பொது நலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை இலங் கையில் நடத்த வழி வகை செய்யவென அனுப்பப்பட்ட அஜித் நிவாட் கப்ரால் தோல்வியுடன் நாடு திரும்ப நேர்ந்தது. இவை யாவும் இவ்விதம் அமைந்த காரணத்தால் ஐ.தே. கட்சியிலிருந்து அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை வகித்து, தற்போது அரசுக்குத் தலைக் குனிவை ஏற்படுத்தக் காரணமாகியுள்ள பந்துல குணவர்த்தன குறித்தும் எஸ்.பி.திஸாநாயக்கா குறித்தும் ஜனாதிபதி தாம் கொண்டிருந்த கணிப்புக் குறித்து தற்போது சிந்தித்துப் பார்க்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை முடிவுகள் குறித்த சிக்கல் அரசின் நிலைப்பாட்டை மீறிச் சென்றுள்ளது. அதற்கான பொறுப்புக் குறித்து எவருமே அலட்டிக் கொள்வதாகத் தோன்றவில்லை. அதற்குப் பொறுப் பேற்க வேண்டியவர்கள் குறித்து ஜனாதிபதி கொண்டிருந்த கணிப்பு, ஆழ்ந்து அலசி மேற்கொண்ட கணிப்பீடாக அமை யாததால் கணிப்பீடு தவறாக ஆகியுள்ளது. எஸ்.பி.திஸாநாயக்க, மொஹான்லால் கிரேரு, நந்திமித்திர போன்றோர் ஒன்றைக் கூற, டலஸ் அழகப்பெரும அதற்கு எதிர்மாறான கருத்தை வெளியிடுவதற்குக் காரணம் ஜனாதிபதியின் தவறாகிப் போன கணிப்பீட்டை நேர்சீர் செய்து சமாளிக்கும் நோக்கி லானதாகும்.

எது எப்படியோ உயர்தரப் பரீட்சைச் சிக்கல் மூலம் எவராலும் புரிந்து கொள்ளப்படாத ஓர் உண்மையை நாட்டு மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் அது இன்றைய அரசின் இயலாத் தனமே ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறைக்குள் சுள்ளான்

யாழ்ப்பாணம், ஜன.24

நீண்டகாலமாக பல திருட்டுக்களில் ஈடு பட்டுவரும் 'சுள்ளான்' என்று அழைக்கப்படும் திருட்டுச் சந்தேகநபரை பிணை எடுக்க எவரும் முன்வராததால் அவர் சிறைக்குள் தள்ளப்பட்டார். பழைய வழக்குகளில் சந் தேகநபருக்காகப் பிணை நின்றவரும் பிணை முறித்துக் கொண்டு வெளியேறினார்.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே விளக்கமறியலில் அவரை வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீண்டகாலமாக பல திருட்டுக்களில் ஈடு பட்ட குற்றச் சாட்டில் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்ட போது சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட் டது. விளக்கமறியலில் இருக்கும் போதே சிறையிலிருந்து தப்பியோடி தலைமறைவாகி இருந்தான்.

இந்தப் பேர்வழி மீண்டும் திருட்டில் ஈடுபட்ட மூன்று மாதங்களின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்றின் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவன் பிணை அடிப்படையில் விடுவிக்கப்பட்டான்.

எனினும் அடுத்தடுத்து தவணை யிடப்பட்ட மூன்று வழக்குகளுக்கு அவன் மன்றுக்கு வரவில்லை. இதனால் அவனுக் காகப் பிணை நின்றவரே நீதிமன்றுக்குச் சென்று வரவேண்டிய நிலை ஏற்பட்டி ருந்தது.

இந்த நிலையில் 'சுள்ளான் ' மீண்டும் நகர்ப்பகுதியில் வைத்து சைக்கிள் ஒன்றைத் திருடிச் சென்று விட்டான். பொலிஸார் அவனைப் பிடித்து மன்றில் நேற்று முன் னிலைப்படுத்தினர். அது தொடர்பான விசா ரணை நடைபெற்றுக்கொண்டிருந்தது. வேளை சந்தேக நபருக்குப் பிணை நின்ற நபர், தான் இனிமேல் பிணை நிற்கப் போவதில்லை என்றும் ஏற்க னவேயுள்ள வழக்குகளுக்காக இவனுக்கு பிணை நிற்கவும் விரும்பவில்லை என்று கூறி பிணைமுறிப்புச் செய்து வெளியேறினார்.

தொடர்ச்சியான விசாரணையின் போது சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தீர்ப்பு அடுத்த மாதம் 3ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

(ஒ-4)

# 'ஹெல்மட்' திருடியோருக்கு அபராதம் ஒருவருக்கு 6 மாத சிறைவாசமும்

யாழ். நகர்ப்பகுதியில் தலைக்கவசம் (ஹெல்மட்) திருடியவருக்கு யாழ். நீதி மன்றம் ஆயிரம் ரூபா அபராதமும் 6 மாதகால சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப் பளித்தது. இதனுடன் தொடர்புபட்ட மேலும் இருவருக்கு தலா ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடங்க ளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துள்ளது.

விசாரணையில் இருந்து இந்த வழக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது.

2011ஆம் ஆண்டு பெப்ரவரியில் யாழ். நகர்ப்பகுதியில் வைத்து தலைக்கவசத்தை பிரஸ்தாப மூவரும் திருடினர் என்ற குற்றச் சாட்டில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப் பட்டு பிணை அடிப்படையில் விடுவிக்கப் பட்டிருந்தனர்.

இந்த வழக்கு மீண்டும் நேற்று விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மூவரில் பிரதான சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்தே அவருக்கு ஆயிரம் ரூபா அபராதமும் அதனைச் செலுத்தத் தவறின் ஒருமாத கால சாதாரண சிறைத் தண்ட னையும் அத்தடன் ஒத்தி வைக்கப்பட்ட 6மாதகால சாதாரண சிறைத் தண்ட னையும் வழங்கினார். ஏனைய இரு வருக்கும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப் பட்ட 6மாத கடூழியச் சிறைத் தண்டனையும் தலா ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (ஒ-4)

# உயர் தொழில்நுட்ப நிறுவன விரிவுரை

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2012 ஆம் கல்வி ஆண்டுக் கான முழுநேர மாணவர்களுக்கான விரிவுரை கள் எதிர்வரும் 8 ஆம் திகதியும் பகுதிநேர மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 11 ஆம் திகதியும் ஆரம்பமாக உள்ளன என்று பணிப்பாளர் விஜயநாதன் அறிவித்துள்ளார்.

# தமிழக மீனவர்களை நோக்கி கற்களை வீசும் கடற்படையினர்

## பலர் காயம்; 8 பேர் சிறைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தியதில் மீனவர்கள் பலர் காயமடைந்துள்ளனர். மேலும், 200 இற்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந் தன. அத்துடன், 8 மீனவர்களை இலங்கைக் கடற் படை யினர் சிறைப் பிடித்துச்சென்றுள்ளனர் எனத் தமிழக நளேடுகள் செய்தி வெளியிட் டுள்ளன.

இச்சம்பவம் இராமேஸ்வரம் மீனவர்களைப் பெரும் அதிர்ச்சியிலும், கொந்தளிப்பிலும் ஆழ்த்தியுள்ளது.

600 இற்கும் மேற்பட்ட படகுகளில் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். சர்வதேச எல்லைப் பகுதியில் அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, திடீரென அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை சூழ்ந்து கொண்டனர். பின்னர் மீனவர்கள் மீது கற்களை வீசித் தாக்கினர். இதில் மீனவர்கள் பலருக்கு காயம் ஏற்பட்டது. மேலும், 200 இற்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன.

அத்தடன், மீனவர்கள் கரைக்குத் திரும்பிய பின் னர் பார்த்தபோது பாக்கியம் ஜோசப், ராஜமாணிக்கம், மாரியப் பன், விஜயகுமார், சின்னையா, செல்வராஜ், தமிழ்ச்செல் வம், மலைச்சாமி ஆகிய 8 மீனவர்களைகாண வில்லை என்று தெரியவந்தது. அவர்களை இலங்கைப் படை பிடித்துச் சென்று விட்டனர் எனக் கூறப்படுகிறது.

அண்மையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு எல்லாம் திருப்தியாக இருக்கிறது என்று கூறினார். தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து அவர் பேசியதாகவும் கூறப்பட்டது. இந்நிலையில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

தாக்குதலிலிருந்து தப்பி வந்த மீனவர்களில் ஒருவரான ஜஸ்டின் கூறுகையில், கற்களை தாறுமாறாக எங்கள் மீது எறிந்து இலங்கைப் படையினர் தாக்கினர். பெரிய பெரிய கற்களை அவர்கள் எடுத்து வந்து வீசினர். மேலும் மீன்பிடி வலைகளையும் அவர்கள் அறுத்துக் கடலில் போட்டனர் - என்றார்.

தாக்குதலில் ஜெகதீசன் என்ற மீனவரின் காலில் படுகாயம் ஏற்பட்டுள்ளது. அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

இதேவேளை, படகு பழுதடைந்த நிலையில் கடலில் தத்தளித்த 8 மீனவர்களை மீட்டுள்ளனர் என்றும் அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கைக் கடற்படையினர் அறிவித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. (ஒ-சி)

# போதையுடன் வாகனம் செலுத்தியவருக்கு ரூ.5, 500 தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.24

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 5 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததோடு வாகனத்தை ஒருகிழமைக்கு மன்றில் தடுத்து வைக்குமாறும் யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.

தென்பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப வாக னச் சாரதி யாழ். நகரப்பகுதியில் மதுபோதை யில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக பொலிஸார் அவரை மன்றில் முன்னிலைப் படுத்தினர்.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு நீதிவான் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

(ஒ-4)


## கண்ணீர் அஞ்சலி



யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான

திருமதி புஷ்பா கணேசலிங்கம்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத் தினருக்குப் பாடசாலைச் சமூகத்தினர் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேம்படி விநாயகரின் பாதம் பணிகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள். (11568)(2-6-7)
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி



வலி. கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப பணிமனையின் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருஞானசம் பந்த குருக்கள் மாணிக்கவாசகர் அவர்களின் பாசமிகு தாய்

திருமதி திருஞான சம்பந்த குருக்கள் மாணிக்கம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின் றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
வலி. கிழக்கு, பிரதேச சபை, புத்தூர்

## மரண அறிவித்தல்

### திருமதி யசோதாதேவி மகாதேவன்



இளவாலை, முள்ளானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு Rosmead Place, Cinnamon Gardens தற்போது London, Kingston ஐ வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி யசோதாதேவி மகாதேவன் (இளைப்பாறிய ஆசிரியை - இளவாலை Convent, D.S. Senanayake, Colombo-7) (21.01.2012) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விதானையார் ஆறுமுகம் - செல்லம்மா (முள்ளானை, இளவாலை) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சீமான் வேலுப்பிள்ளை - தங்கம்மா (சண்டிலிப்பாய்) தம்பதிகளின் அன்பு மருமகளும், மகாதேவன் (Indian Overseas Bank (Rtd) அவர்களின் அன்பு மனைவியும், Dr. கிரிஜா, கிருபா, தேவமுரளி (Canada) ஆகியோரின் அன்புத் தாயும், நேய்ரா, சாய்ரா, இரஜீவ், இரனேஷ், இராதா, நவீன்தேவன், சரண்யாதேவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். காலஞ்சென்ற தேவரட்ணம் (யாழ்ப்பாணம்), செல் வரட்ணம் (Canada), Dr. சிவபாலசுந்தரம் (London), செந்தில்வேல்ராஜா (Germany), குகலிங்கம் (London), குமாரவேல் (London), காலஞ்சென்ற விமலதேவன் (London), விஜயநாதன் (London) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: + 442089426295 (London)

தகவல்:
(13373)(2-6-7) குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

இரவல் வாங்கப்பட்ட பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி ஒன்று சரசாலைக்கும் சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கருணையுள்ளம் கொண்டு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தகவல்
S.T.விமல் T.P:0772247902

## தேவை

பகல் நேரக் காவலாளி,
சிற்றூழியர்கள் ஆண்/ பெண்
[தற்காலிகம்] கிளிநொச்சி,
யாழ்ப்பாணத்துக்குத் தேவை.



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்.
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரி மைதானம் அருகில்)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி புஷ்பா கணேசலிங்கம்
(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
எமது தென்மராட்சி கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் சரியாக வழிநடத்தி, கல்வி மேம்பாட்டுக்கு உழைத்த உத்தமி

திருமதி புஷ்பா கணேசலிங்கம்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.
கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.
(13446)(2-6-7)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி மாணிக்கவாசகர்



பொன்னாவளை, களபூமி, காரைநக ரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மாணிக்கவாசகர் நேற்று (23.01.2012) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின் னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவ மணியின் அன்புக் கணவரும் கிருஸ்ணாம் பிகை (கனடா), கிருஸ்ணதேவி (லண்டன்), மஞ்சுளா (லண்டன்), தயாபரன் (கனடா), கலாபரன் (கனடா), நேசராணி (கனடா), நெரஞ்ஜனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை கள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாவளை,
களபூமி, காரைநகர்.

தகவல்:
(13374)(2-6-7) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட உதைபந்து செயலக அணி சம்பியனானது



யாழ்ப்பாணம், ஜன.24
கிளிநொச்சி மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையிலான ஆண்களுக்கிடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டன.

இதில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி 2:1 என்ற கோல் கணக்கில் பூநகரி பிரதேச செயலக அணியை வெற்றிகொண்டது. பிரதம விருந்தினராக பூநகரிபிரதேசசெயலாளர் வசந்த குமார் கலந்து கொண்டார். (ம-23)

# அம்மன் வி.க. அணி அரையிறுதிக்குத் தகுதி


யாழ்ப்பாணம், ஜன.24
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான சாந்தன், யூட்சன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன.

அதில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் அம்மன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

காலிறுதியாட்டத்தில் அம்மன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இதில் அம்மன் விளையாட்டுக்கழக அணியினர் 3:1 என்ற கோல் கணக்கில் ஈகிள் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டு அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## ஆண்களுக்கான பூப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம், ஜன.24
கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரி சங்கம் நடத்தும் மாவட்ட செயலகம், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையேயான ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டி நாளை புதன்கிழமை பால் சபை உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் இன்று இடம்பெற்ற ஆட்டத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட செயலக அணி மோதவுள்ளது. (ம-23)

## விளையாட்டு அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.24
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

விளையாட்டுக் கழகங்களின் தலைவர் செயலாளர்களை இதில் கலந்து கொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். குமார் கேட்டுள்ளார். (ம-23)

## குழுநிலைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.24
நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான குழுநிலைப் போட்டிகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டிகளில் வெற்றிபெற்ற விளையாட்டுக் கழகங்களின் பெயர் விவரம் வருமாறு:


**ஆண்கள் பிரிவு**

சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், சென்.அன்ரனிஸ் யுத் விளையாட்டுக் கழகம்.

**பெண்கள் பிரிவு**

சென். அன்ரனிஸ் யுத் விளையாட்டுக்கழகம், ஐக்கிய தீபம் விளையாட்டுக்கழகம். (ம-23)

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் சென்.ஜோன்ஸ் வி.க. சம்பியன்



யாழ்ப்பாணம், ஜன.24
நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான குழு நிலைப் போட்டிகளில் பெண்களுக்கான வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஐக்கிய தீபம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக அணி 11.06 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## நிரல் ஒழுங்கு தயாரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒழுங்கு நிரல் தயாரித்தல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விளையாட்டுக்கழகங்களின் தலைவர்கள், செயலாளர்களை சமுகம் தருமாறு விளையாட்டு உத்தியோகத்தர் நித்திலநாயகம் கேட்டுள்ளார். (ம-23)



# பயத்தில் விலகினார் வீரர்

தீவிரவாதிகளின் தாக்குதலுக்குள்ளான டோகா உதை பந்தாட்ட அணியின் தலைவர் இம்மானுவேல் அடபாயர் சர்வதேச உதைபந்தாட்டத்தில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்தவரான இருந்து வந்த இம்மானுவேல் அடபாயர் அண்மையில் தீவிரவாதிகளின் தாக்குதலுக்குஆளாகியதால் அவர் உதைபந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் நடந்தது போன்ற ஒரு மோசமான அனுபவத்தை மீண்டும் பெறவிரும்பவில்லை என்று அவர் தனது முடிவுக்கான காரணத்தை விளக்கியுள்ளார்.

தற்போது மான்செஸ்டர் சிட்டி அணிக்காக விளையாடி வரும் இம்மானுவேல் அடபாயர் 26 வயதே நிரம்பியவர். ஜனவரி மாதம் ஆபிரிக்க கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ள சென்று கொண்டிருந்த டோகா அணி வீரர்கள் மீது கபிண்டா என்ற இடத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததோடு 8 பேர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



கதிரமலை நாகராசா
(சமூக முன்னோடி சீர்நெறியாளர்)
22.01.2012 அன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சமூக முன்னேற்றக் கழகத்தின் சமாசத்தால் நடத்தப்பட்ட முப்பெரும் ஆண்டு விழாவில் சமூக முன்னோடி சீர்நெறியாளர் விருது பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
நெல்லியடி வர்த்தக சமூகம்

Vacancies

புதிதாக நல்லூரில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கணனி மற்றும் ஆங்கில கல்வி நிலையத்திற்கு கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Course Counselor - Female
Customer Relation Officer - Female
Computer Instuctor - Male / Female
English Language Lecturer - Male / Female
Multimedia & Tally Lecturer - Male / Female
Accounts Assistant - Male / Female

நேரடியாக, தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

ASIAN COMPUTER EDUCATION
#2G, Stanley Road, Jaffna.
e-mail : asianedu@dialogsl.net

GATEWAY CICT
IT ISLAND GATEWAY CENTRE
நெல்லியடி, சாவகச்சேரி
கிளைகளில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன



சர்வதேசக் கற்கை நெறிகள்
ICDL
(INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE)
e-Citizen

அனைவரினதும் வேண்டுகோளுக்கிணங்க விசேட சலுகைகளுடன்
Dip. in Microsoft Office 3 Months 3000/
Dip. in Desktop Publishing 3 Months 3500/
Dip. in Java 3 Months 4500/-
Dip. in Visual Basic 3 Months 4500/-

Certificate Courses
Access
Page Maker
Photoshop
Java
Visual Basic
C#

Luxmi Theatre Lane, Nellivady
Phone - 021 226 2395 / 021 567 7606.

New Market Building, Chavakachcheri.
T.P: 021 227 0323
021 567 0266


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடிய ஆட்டம் என்ன...!

## மாற்றம் தருவாரா மஹெல?


டில்ஷான்

சீ...சீ.. இந்தப் பழம் புளிக்கும்..! தலைமைப் பதவியை உதறிய (!) டில்ஷான்

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் திலகரட்ன டில்ஷான் அணித்தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதற்கான கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேவேளை இலங்கை அணியின் புதிய தலைவராக மீண்டும் மஹெல ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் குமார் சங்ககார ராஜினாமா செய்ததையடுத்து திலகரட்ன டில்ஷான் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார். எனினும் இலங்கை அணி அண்மைக்காலத்தில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளுடன் தோல்விகளைத் தழுவியதையடுத்து இலங்கை கிரிக்கெட் துறை முற்றாக மறுசீரமைக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அத்துடன் டில்ஷான் தனக்கு இறுதி சந்தர்ப்பமாக தென்னாபிரிக்கத் தொடர் வரை அணித்தலைவராக தொடர அனுமதி கேட்டிருந்தார். இதற்கமைய கிரிக்கெட் சபையும் டில்ஷானை தென்னாபிரிக்க தொடருக்கு அணித்தலைவராக நியமித்தது. இருப்பினும் தென்னாபிரிக்க தொடரையும் இலங்கை அணி இழந்தமையினாலும், மற்றும் இலங்கை கிரிக்கெட் அணி மீதான அழுத்தமும் அதிகரித்திருப்பதாலேயே டில்ஷான் தனது பதவியை ராஜினாமா செய்ததாக கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.


மஹெல

மேலும் மூன்று வகையான ஆட்டங்களுக்கும் இனி மஹெல ஜெயவர்த்தனவே தலைமைப் பதவியை ஏற்கவுள்ளார். 34 வயதான மஹெல ஜெயவர்த்தன, ஏற்கனவே 2006 முதல் 2009ஆம் ஆண்டுவரை இலங்கை அணிக்குத் தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது. (15)

## பதிலடி கொடுப்போம்

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் தமது அணி வழமையான திறமையை வெளிப்படுத்தி பாகிஸ்தான் அணிக்கு உரிய பதிலடி கொடுக்கும் என்று இங்கிலாந்து அணி வீரர் ஜொனதன் ரொரட் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

டுபாயில் நடைபெற்ற தொடரின் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 10 இலக்குகளால் வெற்றிபெற்றிருந்தது. கடந்த 2008 ஆம் ஜூலை மாதத்தின் பன்னர் தொடர்ச்சியாக இரண்டு டெஸ்ட் ஆட்டங்களில் இங்கிலாந்து அணி தோல்வியடையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது டெஸ்ட் கிரிக்கெட் நிரல்படுத்தலில் முதலாம் இடத்திலுள்ள இங்கிலாந்து இவ்வாறு பாரிய தோல்வியை சந்தித்துள்ளதை அடுத்து அந்த அணி மீது பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

## சச்சின் கடவுள் தான்

**கடந்த 10 டெஸ்ட் ஆட்டங்களின், 19 இன்னிங்ஸ்களாக இந்திய மாஸ்டர் சச்சின் தனது, 100 ஆவது சதத்தை அடிக்க முடியாமல் திணறி வருகிறார்.**

தற்போதைய தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் கிரிக்கெட் கடவுள் சச்சின், 100 ஆவது சதம் அடிப்பது தவிர்க்க முடியாதது, என்கிறார் ஆஸ்திரேலிய வீரர் மைக் ஹசி.

கடந்த 10 டெஸ்ட் ஆட்டங்களின், 19 இன்னிங்ஸ்களாக இந்திய மாஸ்டர் சச்சின் தனது, 100 ஆவது சதத்தை அடிக்க முடியாமல் திணறி வருகிறார். இதுகுறித்து மைக் ஹசி கூறியதாவது:

சச்சின் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துகிறார். சரியான 'புட் வோர்க்கில்', பந்தை நோக்கி துடுப்பினை கொண்டு செல்லும் திறன் ஆகியவற்றை, அருகில் இருந்து பார்க்கும் போது வியப்பாக இருக்கும். நன்றாக துடுப்பெடுத்தாட வேண்டும் என்று அவரது மனது நினைப்பதற்கு ஏற்பட, துடுப்பும் நன்கு ஒத்துழைக்கிறது.


மற்றபடி, பல நேரங்களில் நன்கு விளையாடினாலும், ஏதாவது ஒரு பந்தில், ஒரு தவறு செய்து விட்டால், அதன் பின்னர் பவிலியன் திரும்ப வேண்டியது தான். தனது 100 ஆவது சதத்தை, இவர் இன்னும் அடிக்கவில்லை என்றாலும், கிரிக்கெட்டின் 'கடவுள்' சச்சின் தான்.

கிரிக்கெட் ரசிகர்கள் நிறைந்த இந்தியாவில், இவர் தெருவில் இறங்கி நடந்து சென்றால், பல ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவர். இவை அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, பல்வேறு வகையான நெருக்கடிகளை சமாளித்து, தனது கிரிக்கெட் வாழ்க்கை முழுவதும், தொடர்ந்து சிறப்பான முறையில் ஓட்டங்கள் குவித்து, 20 ஆண்டுகளுக்கும் மேலாக, சர்வதேச கிரிக்கெட்டில் ஜொலித்து வருவது வியப்பாக உள்ளது.

இவர், மனதளவில் மிகவும் வலிமையானவர். சச்சின் தொடர்ந்து சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில், 100 ஆவது சதம் தவிர்க்க முடியாதது ஆகும். ஆனால், இது வேறு தொடரில் நடக்கட்டும். இந்த டெஸ்டில் வேண்டாம் - என்றார். (15)

# நடால், பெடரர் காலிறுதியில்


வோஸ்னியாக்கி


நடால்

ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு, ஸ்பெயினின் ரபெல் நடால், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறி உள்ளனர்.

மெல்போர்ன் நகரில், 100 ஆவது ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் தொடர் நடக்கின்றது. நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில், உலகின் இரண்டாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால், சகநாட்டைச் சேர்ந்த பெலிசியானோ லோபசை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய நடால் 6-4, 6-4, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு நான்காவது சுற்றுப் போட்டியில், உலகின் மூன்றாம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் பெடரர், ஆஸ்திரேலியாவின் பெர்னார்டு டாமிக்கை எதிர்கொண்டார். இதில் அசத்தலாக ஆடிய பெடரர் 6-4, 6-2, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில், நடப்பு சம்பியன் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ், சீனாவின் நா லியை சந்தித்தார். முதல் செட்டை 4-6 எனக் கோட்டைவிட்ட கிளைஸ்டர்ஸ், 'டை-பிரேக்கர்' வரை நீடித்த இரண்டாவது செட்டை 7-6 எனக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் மீண்டும் அசத்திய கிளைஸ்டர்ஸ் 6-4 என்று தன்வசப்படுத்தினார். இறுதியில் கிளைஸ்டர்ஸ் 4-6, 7-6, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.


மற்றொரு போட்டியில் உலகின் முதல்தர வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, செர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச்சை எதிர்கொண்டார். இதில் அபாரமாக ஆடிய வோஸ்னியாக்கி 6-0, 7-5 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு தகுதி பெற்றார்.


### பூபதி-போபண்ணா 'அவுட்'

நேற்றுமுன்தினம் நடந்த ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு மூன்றாவது சுற்றில், இந்தியாவின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஜோடி, அமெரிக்காவின் ஸ்காட் லிப்ஸ்கி, ராஜீவ் ராம் ஜோடியை சந்தித்தது. இதில் பூபதி-போபண்ணா ஜோடி 6-7, 2-6 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்து வெளியேறியது.

### பயஸ் ஜோடி முன்னேற்றம்

ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு மூன்றாவது சுற்றில், இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக்குடியரசின் ரதக் ஸ்டீபனக் ஜோடி, பரான்சின் மைக்கேல் லாட்ரா, செர்பயாவின் நினாடு ஜிமான்ஜிக் ஜோடியை சந்தித்தது. இதில் அபாரமாக ஆடிய பயஸ்-ஸ்டீபனக் ஜோடி 7-5, 7-6 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.


பெடரர்


சிடில்

## சிடில் சிக்கல்தான்

ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பீட்டர் சிடிலின் பந்து வீச்சை எதிர்கொள்வது கடினமானது, என்று உண்மையை ஒத்துக்கொள்கிறார் இந்திய அணியின் இளம் வீரர் விராத் ஹோக்லி.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய டெஸ்ட் அணியில் இடம் பெற்றிருப்பவர் விராத் ஹோக்லி. இதுவரை அங்கு பங்கேற்ற 3 டெஸ்டில் 162 ஓட்டங்கள் தான் எடுத்துள்ளார். இதனிடையே பேர்த் ஆட்டத்தில் இந்திய அணி அஷ்வினுக்குப் பதில், வினய் குமாரையும் சேர்த்து நான்கு வேகப்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கியது. இதில் வினய் குமார் இரு இன்னிங்சிலும் வேகமாக வெளியேறினார். இதுகுறித்து விராத் ஹோக்லி கூறியது:

பேர்த் டெஸ்டில் பின்வரிசை வீரர்களை வைத்து எப்படியும் சதம் அடித்து விடலாம் என்றிருந்தேன். ஆனால் சகிர்கான், வினய் குமார், இஷாந்த் சர்மா ஆகிய மூவரும் 5 பந்துகளில் ஆட்டமிழந்ததை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. இதனால் 75 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க முடியாமல் போனது துரதிஷ்டவசமானது.

மற்றப்படி அனைத்து ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களும், சரியான அளவில், துல்லியமாக பந்து வீசுகின்றனர். இதில் ஹரிஸை எளிதாக சமாளித்தேன். சிடிலின் பந்தில் விளையாடுவது மிகவும் கடினமாக இருந்தது. மற்ற பந்து வீச்சாளர்களை விட வேகமாக வீசுகிறார். இவரது பந்துவீச்சை சந்திக்கும் போது, கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் - என்றார். (15)

## முயற்சித்துத்தான் பார்ப்போமே....!

மூன்று ஆட்டங்களில் தோல்வியடைந்து தொடரை இழந்து விட்டாலும், வீரர்களின் மன உறுதி குறையவில்லை. இன்று தொடங்கும் நான்காவது டெஸ்டில் வெற்றி பெற முயற்சிப்போம், என்றார் இந்திய அணியின் தொடக்க வீரர் கம்பீர்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட 'பார்டர்-கவாஸ்கர்' கிண்ணத்துக்கான டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் மூன்று ஆட்டங்களில் தோல்வியடைந்த இந்திய அணி, தொடரை 0-3 என்று இழந்தது. இரு அணிகள் மோதும் நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் ஆட்டம், இன்று அடிலெய்டில் துவங்குகிறது.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

[illegible] கிரிக்கெட் விளையாட ஆர்வம் இல்லையென்றால், விளையாடக் கூடாது. ஏற்கனவே மூன்று ஆட்டங்களை இழந்து விட்டோம் என்பதற்காக, எங்கள் நம்பிக்கை குறைந்து விடவில்லை. ஏனெனில் ஒவ்வொரு டெஸ்டும் விசேடமானதுதான்.

ஒரு சில தொடர்களை வைத்துக் கொண்டு, அணி மோசம் என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. இரண்டு தொடர்களுக்கு முன் பார்த்தால், நாங்கள் தான் உலகின் சிறந்த அணியாக இருந்தோம். அணி தோல்வியடையும் போது ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருக்க வேண்டும். அப்படி இருக்கும்பட்சத்தில் அது மீண்டும் வெற்றிப் பாதைக்கு திரும்ப உதவும்.

நான்காவது டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்றால், அது மிகவும் திருப்தியாக இருக்கும். ஏனெனில், தேசத்துக்காக ஆட்டங்களில் விளையாடும் போது, தனிப்பட்ட வீரரின் சாதனையை விட, அணியின் வெற்றி தான் முக்கியம். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதுரங்கப் போட்டி மத்தியஸ்தருக்கு பயிற்சிப் பட்டறை



யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனம் சதுரங்கப் போட்டி மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளன அலுவலகத்தில் பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளது.

இந்த சதுரங்கப் போட்டி மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் பங்குகொள்ள விரும்புவோர் யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் செயலாளர் கே.ஆதவனுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-23)

## விக்டோறியாவுக்கு வெற்றிக் கிண்ணம்

யாழ்ப்பாணம்,ஜன.24

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை யொட்டி சங்கானை கல்விக் கோட்டப் பாட சாலை அணிகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்டோறியா கல்லூரி நூற்றாண்டு விழா வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

சரஸ்வதி மகா வித்தியாலயம் போட்டியின் ஆரம்பத்தில் காட்டிய வேகத்தைத் தொடர்ந்து காட்டத் தவறிய நிலை யில் மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை விக்டோறியாக் கல்லூரி 25:20, 25:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் சரஸ்வதி மகா வித்தியா லயத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

(ம-86)

## யாழ். நீச்சல் தடாகத்தின் கட்டுமானப் பணி நிறைவு



யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ளன.

இந்த நீச்சல் தடாகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றதை அடுத்து அதனை விரைவில் திறந்து வைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நீச்சல் தடாகத்தைத் திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் வரவுள்ளார் எனத் தெரிய வருகிறது.

ஜனாதிபதியின் வருகைக்காக யாழ். மத்திய கல்லூரிச் சுற்றாடலை அழகுபடுத்தும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

நீச்சல் தடாகம் அமைந்துள்ள பகுதி எங்கும் மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

புதிய நீச்சல் தடாகத்துக்கு நிலாவரையில் இருந்து பவுசர்மூலம் தண்ணீர் எடுத்துவரப்பட்டுத் தடாகம் நிரப்பப்பட்டுள்ளது.

(த-17)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.24



வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான சாதன், யூட்சன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 11 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று இடம்பெறும்.

காலிறுதி ஆட்டங்களில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-23)

* * *



கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்றுவருகின்றது.

அதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

இரவு 7 மணி- விபுலானந்தர் விளையாட்டுக் கழகம் எதிர் கிருஷ்ணபாரதி விளையாட்டுக் கழகம்.

இரவு 8 மணி- இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழகம் எதிர் புதிய பாரதி விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு.

(ம-23)

## அரியாலை அணி சம்பியன்



கொழும்புத்துறை, ஜன.24

அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் கோவிந்தபிள்ளை கந்தையா பார்வையாளர் அரங்கத் திறப்புவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரியாலை சனசமூக நிலைய அணி சம்பியனானது.

ஆனைக்கோட்டை லெவன்ஸ்ரார் அணிக்கும் அரியாலை சனசமூக நிலைய அணிக்கும் இடையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அரியாலை சனசமூக நிலைய அணி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.


முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சனசமூக நிலைய அணி 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 131 ஓட்டங்களைப் பெற்றது.

கோபிராம் 79 ஓட்டங்களையும் நிரோஜ் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். லெவன்ஸ்ரார் அணி வீரர்களான ஏகாந்தன் 3 விக்கெட்டுக்களையும் சதீஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய லெவன்ஸ்ரார் அணியினர் அனைத்து இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றனர். சுகுமார் 11 ஓட்டங்களையும், சாருபன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து இடம்பெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்தாடிய குருநகர் பாடுமீன் அணி 2:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-135)



## கலக்ஸியில் கலக்குவேன்

### டேவிட் பெக்காம் உறுதி

கலக்ஸி அணி டேவிட் பெக்காமை மீண்டும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் டேவிட் பெக்காமை கடந்த 2007ம் ஆண்டு மேஜர் சாக்கர் லீக் அணியான லொஸ்ஏஞ்சல்ஸ் கலக்ஸி ஒப்பந்தம் செய்தது.இந்த ஒப்பந்தம் 2011 டிசம்பர் 31ந் திகதியுடன் முடிவுக்கு வந்தது. இதையடுத்து டேவிட் பெக்காம் மீண்டும் ஏதாவது ஒரு ஐரோப்பிய அணியில் இணைவார் என்றுஎதிர்பார்க்கப்பட்டது.அதற்கேற்றாற்போல் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி பெக்காமை ஒப்பந்தம் செய்ய முயற்சி செய்து வந்தது.ஆனால் இந்த அணியு டனான ஒப்பந்தம் முடிவுக்கு வரவில்லை.

இந்த நிலையில் அவரை மீண்டும் லொஸ்ஏஞ்சல்ஸ் கலக்ஸி அணியே மேலும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.இது குறித்து 36 வயது பெக்காம் கூறுகையில்,அமெரிக்காவில் கால்பந்து விளையாட்டை பிரபலப்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதால் மீண்டும் லொஸ் ஏஞ்சல்ஸ் கேலக்சியில் இணைந்து, கலக்கலான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன்- என்று தெரிவித்துள்ளார்.

(ங)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 15ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.F.A) பட்டம் பெற்ற

குலத்துங்கசேகரம் சுவானியா

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் முனீஸ்வரர் துணையோடு மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டுகாலம் சீருடனும் சிறப்புடனும் வாழ நாம் உளமார வாழ்த்துகின்றோம்.

குமரகோட்டம்
கோண்டாவில்

தவநீதன் (அத்தான்)
வித்யா (அக்கா)
விதுலாஸ் (மருமகன்)

## நாய் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் ஆண்-1, பெண்-2
அல்சேசன் நாய்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு 0779574558

## விற்பனைக்கு

அரியாலை நடுத்தெரு வீதியில் இருக்கும் 9½ பரப்பு தென்னங் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு
021 222 3393

## வான் விற்பனைக்கு

58-xxxx இலக்க நல்ல நிலையிலுள்ள
டொல்பின் வான் லீசிங்குடன்
[illegible]
Alloywheel White Adjustable Seat A/C 4 Door
தொடர்பு 0778918765 0774306997

## வீட்டுக்கிருத்திய சபிண்டீகர அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
24.09.1930

தாயேயாகி வளர்த்தனை போற்றி



அன்னையின் அடியில்
31.12.2011

திருவாட்டி
சிவகாமிப்பிள்ளை
விசுவலிங்கம்
(பகீரதி)

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் இரங்கல் செய்திகளை அறிவித்தவர்களுக்கும் பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



மயில்வானம் குமாரசாமி

நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும், முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் குமாரசாமி நேற்று (23.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு- லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், புவனேஸ்வரி மற்றும் இரத்தினமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைவாணி (நோர்வே), யசோதா (இலங்கை வங்கி, முல்லைத்தீவு), மனோகரன் (சம்பத் வங்கி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவி (நோர்வே), யுசேப்பியஸ், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனும், கபிலன், அகிலன் (நோர்வே), டிலக்ஸ்சி, தர்சிகா, வினுஷன், தமிழினி, டேனுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளியவளை கற்பூரப் புல்வெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம், முள்ளியவளை.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம் மாணவர்களிடத்தே மலர வேண்டும்

### - இந்துக் கல்லூரியில் கலாம் உரை-

ஒரு அடிப்படை மாற்றத்தை - மனமாற்றம் மட்டும் அல்ல குணமாற்றத்தை- மாணவர்கள் மத்தியில் கொண்டுவரவேண்டும்.

யாழ். இந்துக் கல்லூரி 121 வருடங்களாக கல்விப் பணியாற்றி வருகிறது. பூமி தன்னைத் தானே சுற்ற 24 மணிநேரம் ஆகும். இரவும் பகலும் நிகழ்கின்றன. அதே பூமி சூரியனைச் சுற்றுகின்றது. ஒரு சுற்றுச் சுற்றுவதற்கு ஒரு வருடமாகிறது. அதாவது இந்துக் கல்லூரியும் பூமியில் இருப்பதால் இது வரை 121முறை சூரியனைச் சுற்றிச் சுழன்று பல மாணவ நட்சத்திரங்களை உருவாக்கியுள்ளது - இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரிக்கு புகழ் மாலை சூட்டினார் இந்திய முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல்கலாம்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அப்துல் கலாம் யாழ். இந்துக் கல்லூரிக்குச் சென்றார். அங்கு கூடியிருந்த மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ். இந்துக் கல்லூரியில் அவர் ஆற்றிய உரை வருமாறு:-

நண்பர்களே, யாழ். இந்துக் கல்லூரியில் வந்து நூற்றுக்கணக்கான மாணவர்களை சந்தித்து உரையாடக் கிடைத்த வாய்ப்புக்கு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். 1890இல் தொடங்கி இன்றைக்கு 122 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய பல பெருமைகளைப் படைத்தது தான் இந்துக் கல்லூரி. அப்படிப்பட்ட நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்டது உங்கள் கல்லூரி 121 ஆண்டுகள் கல்விப் பணி செய்துள்ள ஒரு கல்லூரியில் இருக்கும் போது அதன் பெருமை என்ன என்று நினைத்துப் பார்த்தேன். நினைக்க, நினைக்க, நம் பால் வெளியில் நடக்கும் நிகழ்ச்சியைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். நண்பர்களே உங்கள் எல்லோருக்கும் தெரியும். பூமி தன்னைத் தானே சுற்ற 24 மணி நேரம் ஆகும். இரவும் பகலும் நிகழ்கின்றன. அதே பூமி சூரியனைச் சுற்றுகின்றது. ஒரு சுற்றுச் சுற்றுவதற்கு ஒரு வருடமாகிறது. அதாவது இந்துக் கல்லூரி பூமியில் இருப்பதால் இது வரை 121முறை சூரியனைச் சுற்றிச் சுழன்று பல மாணவ நட்சத்திரங்களை உருவாக்கியுள்ளது. அந்த மிகப் பெரிய கல்விப் பணிக்கு உங்கள் எல்லோருக்கும் என் வாழ்த்துக்கள். தமிழ் வழிக் கல்வி முறையையும் தமிழை வளர்க்கவும் கல்வியை தமிழ் மாணவர்களுக்கு கிடைக்கவும் இந்துக் கல்லூரி நிறுவுநர்களும் அவர்களுக்கு பின்பாக வந்த நிர்வாகிகளும் ஆசிரியர்களுக்கும் இந்துக் கல்லூரியிலே படித்துப் பயின்று உலகத்தில் பல்வேறு உயர்ந்த பதவியிலிருக்கும் முன்னாள் மாணவர்களுக்கும் இந் நாள் மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர்களே உங்களது எழுச்சி பெற்ற மனங்களைப் பார்க்கிறேன். உங்கள் உற்சாகத்தைப்பார்க்கிறேன். நீங்கள் எல்லோரும் வெற்றியடைய வளமான வாழ்வு பெற ஓர் சிறு கவிதை மூலம் என் கருத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவிரும்புகிறேன். அந்தக் கவிதையின் தலைப்பு ''வாழ்வில் நான் பறந்துகொண்டே இருப்பேன்'' என்பதாகும். இதை எல்லோரும் என்னுடன் சேர்ந்து சொல்கிறீர்களா?

நான் பறந்து கொண்டே இருப்பேன்

நான் பிறந்தேன் அரும்பெரும் சக்தியுடன்

நான் பிறந்தேன் நற்பண்புகளுடன்.

நான் பிறந்தேன் கனவுடன், வளர்ந்தேன் நல்ல எண்ணங்களுடன்

நான் பிறந்தேன் உயர் எண்ணங்களைச் செயற்படுத்த

நான் பிறந்தேன் ஆராய்ச்சி உள்ளத்துடன்

நான் பிறந்தேன் ஆகாய உச்சியில் பறக்க

நான் பூமியில் ஒருபோதும் தவழ மாட்டேன்

தவழவே மாட்டேன் ஆகாய உச்சிதான் என் இலட்சியம்

பறப்பேன் பறப்பேன் வாழ்வில் பறந்து கொண்டே இருப்பேன்

பறக்கவேண்டும் என்ற உணர்வு வாழ்வில் பெரிய இலட்சியத்தை அடைய வழிவகுக்கும். அந்த இலட்சியத்தை அடைய என்ன செய்ய வேண்டும். நீ யாராக இருந்தாலும் பராவாயில்லை. உன்னால் வெற்றியடைய முடியும்.

நன்றி நண்பர்களே.

2020ற்குள் வளமான நாட்டைக் காண்போம்

நண்பர்களே, உங்கள் அனைவரையும் பார்க்கும் போது எனது ஒரு அனுபவத்தைப் பகிந்து கொள்ள விரும்புகிறேன். அதைப்பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். Lead India 2020 அமைப்பு ஆச்சார்யா சுதர்சன்ஜி என்பவரால் ஆந்திர மாநிலத்தில் தொடங்கப்பட்டு இன்றைக்கு கிட்டத்தட்ட 4 மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் இந்தியர்கள் மத்தியிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. தொடக்கம் முதல் இன்று வரை ஆச்சார்யா சுதர்சன் தலைமையில் அமைந்த 'லீட் இந்தியா 2020' என்ற அமைப்பு பல லட்சக்கணக்கான மாணவர்களைச் சந்தித்து, நான் மாணவர்களுக்கு அளித்த 10 உறுதிமொழிகளில் இருந்து சிறப்புப் பயிற்சி அளிக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கும் சிறப்புப் பயிற்சி அளித்து மாணவர்களைத் திறம்பட செயற்பட வழிநடத்தும் விதமாக மாணவர்களுக்கு அந்தப் பத்து உறுதிமொழிகளில் அதாவது கீழ்க்காண்ட வழிகளில் பன்முகப் பயிற்சி அளிக்கிறார்கள். அதாவது

1. உண்மைக்கும், நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக எப்படி வாழ்வது.

2. கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் எப்படி நடப்பது.

3. அடுத்தவர்களை மதிக்கவும், அடுத்தவர்களைப் பாராட்டும் பண்பை எப்படி வளர்த்துக்கொள்வது.

4. பெருமையுடன் எப்படி வாழ்வை எதிர்கொள்வது.

5. தன்னம்பிக்கையுடன் எப்படி வாழ்க்கையின் சவால்களை சமாளிப்பது.

6. பேச்சு மற்றும் தொடர்புத் திறனை எப்படி வளர்த்துக்கொள்வது.

7. கூடி உழைத்தால் எப்படி மிகப் பெரிய வெற்றியடையலாம் என்ற தத்துவத்தைப் புரிய வைப்பது.

8. கற்பனைத் திறனுடன் கூடிய தலைமைப் பண்பை எப்படி வளர்த்துக் கொள்வது என்ற தனித்தன்மையை கற்றுத் தருவது.

9.கோபத்தையும், சோம்பலையும், சுயநல நோக்கையும் வெறுத்தால், எப்படி நாம் எல்லோராலும் விரும்பப்படுவோம், மதிக்கப் படுவோம் என்ற சிறப்பியல்பைக் கற்றுக் கொடுத்தல்.

10. நீ எனக்கு எதைக் கொடுப்பாய் என்ற எண்ணத்தை மாற்றி என்னால் எதைக் கொடுக்க முடியும் என்ற எண்ணத்தை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மனதில் விதைத்து அந்த நல்ல குணத்தை வளர்த்தல்.

இப்படிப்பட்ட சிறப்பியல்புகளை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கற்றுக்கொடுத்து அவர்களது வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முகமாக, ஆந்திரா உட்பட பல்வேறு மானிலங்களில் சிறப்புப் பயிற்சி அளித்து. கிட்டத்தட்ட 35



முதல் 50 சதவீத மாற்றத்தை ஏறத்தாள 10 இலட்சம் மாணவர்கள் மத்தியிலும், ஆயிரக்காணக்கான ஆசிரியர்களிடமும் கிட்டத்தட்ட 20 சதவீத முன்னேற்றத்தைக் கொண்டு வந்ததில் 'லீட் இந்தியா 2020' அமைப்பு மிகப் பெரும் பங்கு வகிக்கிறது. எனவே அப்படிப்பட்ட ஒரு அடிப்படை மாற்றத்தை மனமாற்றம் மட்டும் அல்ல குணமாற்றத்தை மாணவர்கள் மத்தியில் கொண்டுவரவேண்டும். இந்தச் சிறப்புப் பயிற்சி இந்திய முழுமைக்கும் சென்றடைய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டின் அனைத்துப்பகுதி மாணவர்களுக்கும், பள்ளிப்படிப்பை பாதியிலேய விட்டுச் சென்ற இளைஞர்களும் அடையும் விதத்தில் இதை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது தான் என் விருப்பம். எனவே இதைப்போல் பல்வேறு வழிகளில் மாணவர்களையும் இளைஞர்களையும் சந்தித்து அவர்களை நாளைய வளர்ந்த இலங்கையை படைக்கும் வகையில் தயார் செய்ய வேண்டும் என்பது தான் இலங்கையின் கல்வி இலட்சியமாகத் திகழ வேண்டும் - என்றார். (ங-1[illegible])

# கோப் அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்துங்கள் அமைச்சர்களே

### டியூ குணசேகர கோரிக்கை

கொழும்பு, ஜன.24

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு (கோப்) கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையின் சிபாரிசுகளை அமுல் படுத்த வேண்டும் என்று அமைச்சர்களை அறிவுறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சில சிபாரிசுகளை அமுல்படுத்துவதில் தமக்குள்ள வரையறைகளை அமைச்சுகளின் செயலாளர்கள் அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். எனினும் அவற்றை நிவர்த்தி செய்து உரிய சிபாரிசுகளைச் செய்வதன் மூலமே முறைகேடுகளைத் தவிர்க்கலாம்- என்று கோப் குழுவின் தலைவரான சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

இந்த விடயம் தொடர்பாக அரசியல் தலைமைத்துவத்துக்கு அறிவுறுத்துவது அவசியம். நிதி முறைகேடுகள் மற்றும் அரச நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சு செயலாளர்களை கோப் அறிக்கை கோரியிருந்தது.

வருடாந்த அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பிக்காமை, கணக்காய்வு அறிக்கைகளைப் புறக்கணிப்பது என்பன அரச நிறுவனங்கள் மீது கோப் முன்வைத்த இரு பிரதான குற்றச்சாட்டுகளாகும். இந்தவிடயத்தில் அமைச்சு செயலாளர்கள் நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

'முன்னாள் அமைச்சர் ஒருவர் வாகனமொன்றைப் பல வருடங்கள் திருப்பி ஒப்படைக்காமல் இருந்தார். எனினும் அமைச்சின் செயலாளரால் இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. பின்னர் நான் சி.ஐ.டியினரிடம் முறைப்பாடு செய்தேன். அதன் பின் வாகனம் மீள ஒப்படைக்கப் பட்டது. இவ்வாறான விடயங்களில் அரசியல் தலைமைத்துவம் பாத்திரம் வகிக்கமுடியும்'- என்றார் அவர். (ங-சி)



இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களுக்கு அடைகலம் கொடுத்தார்கள் என்று குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது நீதிமன்றுக்கு பொன்சேகா அழைத்து வரப் பட்டார்.

# ரணில், சஜித்தை ஒன்றிணைப்பேன்

### கருஜெயசூரிய சபதம்

கொழும்பு, ஜன.24

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கும் இடையேயான முரண்பாடுகளைத் தீர்த்து அவர்களுக்கு இடையே சமரசம் உண்டாக நான் பாடுபடுவேன் என்று. ஐ.தே.கவின் முன்னாள் பிரதித் தலைவர் கருஜெயசூரிய நேற்றுத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரித்தவை வருமாறு:-

மஹிந்த அரசை எதிர்கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சியாகிய நாம் பலமாக இருப்பது அவசியம். ஆனால் அண்மைக்காலமாக ஐ.தே.க வுக்குள் உட்கட்சிப் பூசல்கள் அதிகரித்து விட்டன. மாற்றத்தை வேண்டி நிற்கும் ஒரு பிரிவினராகவும், மரபைப் பின்பற்றும் இன்னொரு பிரிவினராகவும் எமக்கிடையே நாம் முரண்பட்டு நிற்கின்றோம்.

இந்த முரண்பாடுகளைக் களைந்து எல்லோரும் ஒன்றிணைய வேண்டும். உண்மையில் ஐ.தே.க. தலைமை மீது நான் மனப்பூர்வமாக ஆசைப் பட்டதில்லை. மகா நாயக்கர்களின் கோரிக்கைகளாலேயே நான் ரணிலை எதிர்த்து போட்டியிட நேர்ந்தது. - என்றார்.

# தபால் திணைக்கள ஊழியர்கள் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டம்

கொழும்பு, ஜன.24

தபால் மா அதிபரை அந்தப் பதவியிலிருந்து உடனடியாக அகற்றுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வலியுறுத்தி, தபால் ஊழியர்கள் நேற்றுத் தபால் தலைமையகத்திற்கு முன்னால் சத்தியாக்கிரகமொன்றை மேற்கொண்டனர்.

தபால் மா அதிபர் எம்.கே.பி. திசாநாயக்கவை அப்பதவியிலிருந்து அகற்றக்கோரி தபால் திணைக்கள ஊழியர்கள் கடந்த நவம்பர் மாதம் தொடர்ச்சியாக 8 நாள்கள் வேலைநிறுத்தம் மேற்கொண்டிருந்தனர். எனினும் இது வரை அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. இதனால் தம்முடைய எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாகவும், அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாகவும் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டதாக தபால் ஊழியர்கள் தெரிவித்தனர்.

'கடந்த முறை நாம் நடத்திய வேலை நிறுத்தத்தினால் தபால் திணைக்களத்துக்கு 30 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது. தபால் மா அதிபர் அகற்றப்படாவிட்டால் அதைவிட பலமடங்கு இழப்பை அரசு எதிர்கொள்ள வேண்டியிருக்கும்' என்று தபால் திணைக்கள ஊழியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார். (ங-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஊடக அடக்குமுறை குறித்து அரசு தொடர்ந்தும் அலட்சியம்

## கண்டித்து நாளை ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன.24

இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்ற ஊடக அடக்குமுறைச் சம்பவங்களைக் கண்டித்தும் அவை தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோரியும் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நாளை புதன்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இலங்கையில் உள்ள ஊடக அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளன.

இது தொடர்பாக அந்த ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற ஊடக அடக்குமுறைகள், தாக்குதல்கள் என்பவற்றில் பெரும்பாலானவை ஜனவரி மாதத்திலேயே நிகழ்ந்துள்ளன. இதனை நினைவு கூரும் வகையில் 'ஊடக அடக்குமுறைக்கு எதிரான கறுப்பு ஜனவரி' பிரகடனம் செய்யப்படவுள்ளது.

**ஊடக அடக்குமுறைகள், தாக்குதல்கள் என்பவற்றில் பெரும்பாலானவை ஜனவரி மாதத்திலேயே நிகழ்துள்ளன. இதனை நினைவு கூரும் வகையில் 'ஊடக அடக்கு முறைக்கு எதிரான கறுப்பு ஜனவரி' பிரகடனம்.**

ஊடகவியலாளர்கள் படுகொலை, அவர்கள் மீதான தாக்குதல்கள், ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், மிரட்டல் என்பன குறித்து, அரசு இதுவரை உரிய விசாரணைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை இது தொடர்பான வழக்குகளும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அரசின் இந்தச் செயற்பாடு ஊடகவியலாளர் மீதான அழுத்தங்கள் அதிகரிப்பதற்கே வழிவகுக்கிறது.

அரசின் இந்த அலட்சியப் போக்கைக் கண்டித்தும், ஊடக அடக்குமுறைகளுக்கு எதிரான விசாரணைகளைத் துரிதப்படுத்தக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது எனவும் தெரிவித்தனர். (த)

# யாழ். வாசியிடம் மோசடி; தென் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரிடம் எட்டு லட்சம் ரூபா பணத்தைக் கடனாகப் பெற்று மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த இருவர் தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் இருவரது சார்பிலும் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் முன்னிலையானார்.

றிட்டம்புவ மற்றும் ராஜகிரிய ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரும் யாழ்ப்பாணத்துக்கு வந்து இங்குள்ள ஒருவரிடமிருந்து 6 மாதங்களுக்கு முன்னர் 8 லட்சம் ரூபா பணத்தை வாங்கி மோசடி செய்தனர். இவர்களைக் கைது செய்த பொலிஸார் நேற்று மன்றில் முன்னிலைப்படுத்தினர். அவர்களை பிணை அடிப்படையில் விடுவித்து நீதிவான் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் யாழ். நீதிமன்றில் கையெழுத்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். வழக்கு அடுத்த மாதம் ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-4)

# யாழ். ஆஸ்பத்திரியில் சிப்பாயின் சடலம்

1 »

துடன் மனைவி தற்பொழுது கர்ப்பிணியாக உள்ளார்.

உடற் கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் நேற்று மாலையே சடலம் ஒப்படைக்கப்பட்டது. இவரது சடலத்தில் எவ்வித காயங்களும் காணப்படவில்லை. அத்துடன் இவரது இரத்த மாதிரி மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ங-15-319)

# ஜெனிவாவில் எதையும் எதிர்கொள்ளத் தயார்

1 »

கையின்மனிதஉரிமைநிலைமை தொடர்பாக மேற்கொள்ளப்படக் கூடிய எந்த நடவடிக்கையையும் எம்மால் தடுக்கமுடியும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை இந்த அமர்வுகளில் விவாதிக்கப்படும் என்று நாம் கவலைப்படவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எந்தத் தகவல்களையும் பகிர்ந்து கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். எதிராக அனைத்துலக சமூகம் எந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முனைந்தாலும் அதனை எம்மால் முறியடிக்க முடியும்.

போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும்-அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் சிறப்புத் தூதுவரான ஸ்டீபன் ராப் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது பற்றிய தகவல் ஊடகங்களின் மூலமே தெரிந்து கொண்டேன். என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கலாமிடம் ஒரேயொரு கேள்வி

1 »

னைத்தெரிவித்தார்.

அப்துல் கலாம் தான் உரை நிகழ்த்தி முடிந்ததும் ஐந்து கேள்விகளைக் கேட்குமாறு மாணவர்களிடம் கோரினார். எனினும் மாணவர்களில் ஒருவர் மட்டும் கேள்வி கேட்டார்.

ஐயா, இதுவரை காலமும் யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டும் என ஏன் தோன்றவில்லை? என்ற கேள்வியே அந்த மாணவரால் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த கலாம், யாழ்ப்பாணத்தின் நிலைமைகள் குறித்து அறிந்து கொண்டு தான் இருக்கிறேன் - என்றார்.

புயலைத் தாண்டினால் தென்றல் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்திய கலாம் திருக்குறளை முதன்மைப் படுத்தியிருந்தார். திருக்குறள் தான் என் வாழ்வின் சித்தாந்தம். மனத்தில் இலட்சிய வெறியை உண்டு பண்ணியது என்று அவர் கூறினார்.

(த-14)

# நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை ரத்து

1 »

அதிர்ச்சியடைந்துள்ளது என இராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை திருப்திகரமாக அமையவில்லை என்று நவநீதம்பிள்ளை அம்மையார் சுட்டிக்காட்டியிருக்கின்றார். ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நம்பத்தகுந்த குற்றங்கள் பல குறித்து ஆணைக்குழு எந்த விதத்திலும் பதிலளிக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான தனது பயணத்தைப் புறக்கணிக்கப் போகிறார் என்று நவநீதம்பிள்ளை அம்மையான முன்னர் அறிவித்திருந்தாலும், நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை பகிரங்கப் படுத்தப்பட்டதால் அவர் தனது நிலைப்பாட்டைத் தளர்த்திக்கொண்டு பெப்ரவரி மாதம் இலங்கை செல்ல உத்தேசிக்கிறார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை ஆழமாக ஆராய்ந்துப் பார்த்த அவர், அறிக்கை திருப்திகரமாக அமையவில்லை எனக் கூறி தமது இலங்கை பயணத்தை மீண்டும் ரத்துச் செய்து விட்டார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை, சுட்டிக் காட்டத் தவறிய விடயங்கள் தொடர்பாக தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அண்மையில் 105 பக்கங்களைக்கொண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

# கல்வி நடைமுறையில் மாற்றம்

1 »

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் சந்தர்ப்பத்தை இழக்கின்றனர். எனினும் 2 பாடங்களில் ஏ திறமைச் சித்தியை பெற்ற ஒருவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது குறிப்பிடுகையில்,

இலங்கையில் இலவசக் கல்வியை சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கர அறிமுகப்படுத்திய நாள் முதல் இன்று வரை பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே காணப்படுகின்றன. எனினும் தற்போது நடைமுறையில் உள்ள கல்வி திட்டத்தில் புத்துயிர் அளிக்க வேண்டிய கடப்பாட்டில் நாம் இருக்கின்றோம். இதற்காக சகல பிரிவுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

# எனது கணித பாட ஆசான் யாழ்ப்பாணப் பெருமகன்

1 »

மாணவர்கள், விரிவுரையாளர்கள் முன்னிலையில் நேற்று உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக கலாம் மேலும் கூறியவை வருமாறு:

நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது இராமேஸ்வரத்தில் எனக்கு ஒரு அருமையான கணித ஆசியரிடம் கிடைத்த அனுபவம் தொடர்பாக இங்கு கூற வேண்டியுள்ளது.

அந்த ஆசிரியர் பெயர் கனகசுந்தரம். அவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து படித்து வளர்ந்தவர். அவரை இராமேஸ்வரத்தில் நான் சந்தித்தபோது அவர் ஓய்வு பெற்ற கணித ஆசிரியராக இருந்தார். எல்லோராலும் போற்றப்படுபவர் அவர். அவரிடம் கணிதம் பயின்றால் மாணவர்கள் கணிதத்தில் நல்ல தேர்ச்சி பெறலாம்.

அவரிடம் கணிதம் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் கணிதம் மட்டும் பயிலவில்லை. அவருடைய அற்புதமான வாழ்க்கை நெறியையும், காலை 5 மணிக்கு எழுந்து கல்வி கற்றால் அந்தக் கல்வி நம் மனதில் நீடித்து நிலைக்கும் என்ற நல்ல வழிமுறையையும் கற்றுக் கொண்டேன்.

யாழ்ப்பாணம் என்னுடைய ஆசிரியர் பிறந்த இடமாக இருப்பதனால் அந்த யாழ்ப்பாணத்தை வணங்குகிறேன் - என்றார். (த-15)

# இலட்சியத்தை கைவிடாதீர்

1 »

திருக்கிறோம். உலகில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றில் பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப் பக்கங்களை ஒதுக்குவதே இளைஞர்களுக்குள்ள பொறுப்பாகும்.

ஒவ்வொருவரும் 'நான் தனித்துவமானவன்' என நினைத்தவுடன் வரலாற்றின் பக்கங்கள் ஒதுக்கப்படுகின்றன.

மன எழுச்சி உடைய இளைஞர்கள் தான் ஒரு நாட்டின் மிகப்பெரிய சொத்துக்கள். அறிவார்ந்த முறையில் உழைத்தால் நாட்டை வளமுடையதாக்கலாம்.

அறிவும் அமைதி நிலையும் தேவை வன்முறை எண்ணம் நீங்கி அமைதி நிலவ வேண்டும். உறக்கத்தில் வருவதல்ல கனவு. உறங்கவிடாமல் இருப்பது தான் கனவு. கனவு காண்பது இளைஞர்கள் வாழ்வில் முக்கியமானது. இளைஞர்களுக்கு இலட்சியம் வேண்டும் அதை நிறைவேற்றக் கடுமையாக உழைக்க வேண்டும்.

பாரம்பரியத்தைப் பேணிக் கொண்டு அதைத் தற்காலத்துக்கு ஏற்ப அறிவியல் பூர்வமாக மாற்றிக் கொள்ள வேண்டும். மக்கள் அறிவியல் ரீதியான மறுமலர்ச்சிக்கு இட்டுச் செல்ல வேண்டும். திருக்குறள் தான் என் வாழ்க்கையின் சித்தாந்தம். என் மனதில் இலட்சிய வெறியை அது உருவாக்கியுள்ளது. என்றார்.

அப்துல்கலாமின் அறிவுரைகளைப் பல்கலைக்கழகச் சமூகம் நிசப்தமாக இருந்து அவதானித்ததைக் காணமுடிந்தது.

இந்த நிகழ்வில் இந்தியாத் தூதுவர் அசோக் கே.காந்த், விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் திஸ்ஸவிதாரண, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வர், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரக அதிகாரி வெ. மகாலிங்கம், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-14)

# இலங்கை மீது அழுத்தம் தயாராகிறது மேற்குலகு

1 »

யர் ஸ்டீபன் ரட்னர் இதில் கலந்துகொண்டு அனைத்துலக விசாரணையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் மற்றும் அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவு வழங்குவோர் மத்தியில் இவர் உரையாற்றியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை மற்றும் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளரை அனைத்துலக சமூகத்தின் ஒருபகுதியினர் அழுத்தம் கொடுத்து வரும் நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

வரப்போகும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர்களில் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது குறித்து ஆராய்வதற்கே இந்த வட்டமேசைக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக்கான அமெரிக்கத் தூதுவர் எலீன் சம்பெர்லெய்ன், கனேடிய நிரந்தரப் பிரதிநிதி எலிசா கொல்பேர்க், பிரித்தானிய நிரந்தரப் பிரதிநிதி பீற்றர் கொடஹாம், நோர்வேஜிய நிரந்தரப் பிரதிநிதி ஸ்டீபன் கொங்ஸ்ராட், பிரான்ஸ் நிரந்தரப் பிரதிநிதி ஜீன்-பப்ஸ்ரி மத்தி, ஜேர்மனின் நிரந்தரப் பிரதிநிதி ஹான்ஸ் சூமேச்சர், அவுஸ்ரேலிய நிரந்தரப் பிரதிநிதி பீற்றர் வூல்கொட், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிரந்தரப் பிரதிநிதி மேரிஅஞ்சலா சப்பியா, ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளரின் செயலகப் பிரதிநிதி றொரி மொங்ரோவன், அனைத்துலக மன்னிப்புச் சபையின் பிரதிநிதி பீற்றர் ஸ்பிலின்ரர், ஆசிய அமைப்பின் பிரதிநிதி பூஜா பட்டேல், மனிதஉரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதிநிதி பிலிப்பி டாம், அனைத்துலக நீதியாளர் ஆணைக் குழுவின் பிரதிநிதி அலெக்ஸ் கொன்டே, அனைத்துலக வேல்ட் விசன் பிரதிநிதி பெரிஸ் கைன் ஆகியோர் இந்த வட்டமேசைக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர். பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கத்துக்கு இடையிலான தொடர்புகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாமைக் காண்பதற்காக அலை மோதிய மாணவர்கள்



யாழ்ப்பாணம், ஜன.24

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான கலாநிதி ஒ.பி.ஜெ.அப்துல் கலாமின் அறிவுரையைக் கேட்பதற்கும் அவரைப் பார்ப்பதற்கும் என மாணவர்கள் முதல் விரிவுரையாளர்கள் வரை முண்டியடித்துக் கொண்டு நின்றதை நேற்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அவதானிக்க முடிந்தது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு நேற்று மாணவர் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. கலையரங்கில் உள்ள 600 ஆசனங்களும் நிறைந்திருந்தன. நிற்பதற்குக் கூட இடம் இல்லாமல் நெரிபட்டுக் கொண்டு நின்று கலாமின் உரையைச் செவிமடுத்தனர்.

கைலாசபதி கலையரங்கில் இடமின்றி மண்டபத்துக்கு வெளியேயும் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் காத்திருந்தனர்.

நண்பகல் சுமார் 12.30 மணியளவில் கலாம் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வாகனத்தில் வந்திறங்கினார். இலங்கை, இந்தியா ஆகிய இரு நாட்டுப் பொலிஸாரும் மாணவர்களை ஒழுங்குபடுத்திப் பாதை ஏற்படுத்திக் கலாமை மண்டபம் வரை அழைத்துச் சென்றனர்.

மண்டபத்தில் சுமார் அரைமணி நேரம் அழகிய தமிழ் மொழியில் அறிவுரை நிகழ்த்தினார்.

'புயலைத் தாண்டினால் தான் தென்றல்' என்ற தலைப்பில் அறிவுரை நிகழ்த்தினார். அவ்வப்போது ஆங்கில மொழியில் வசனங்களைக் கூறிப் பின்னர் அதனைத் தமிழிலும் கூறினார்.

மாணவர்களுக்கு அலுப்புத் தட்டாத வகையில் ஆர்வமாகக் கேட்டுச் சிந்திக்கத்தக்க வகையில் கலாம் உரை நிகழ்த்தியதை அவதானிக்க முடிந்தது.

உரை நிகழ்த்தி முடிந்ததும் கலாமிடம் ஓட்டோகிறாப்பில் கையெழுத்து பெறுவதற்கும், அருகில் நின்று ஒளிப்படம் எடுப்பதுக்கும் பொலிஸார் இடமளிக்கவில்லை. அலைகடலாகத் திரண்டிருந்த மாணவர்கள் மத்தியில் இருந்து பொலிஸாரின் உதவியுடன் வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டார் கலாம்.

வாகனத்தின் ஜன்னல் கண்ணாடி மூடியிருந்தது. கண்ணாடியைத் திறந்து விடுங்கள் என்று மண்டபத்துக்கு வெளியே கூடி நின்ற மாணவர்கள் கலாமிடம் வேண்டினர்.

மண்டபத்தில், மாலை அணிவிப்பதைக் கலாம் ஏற்கவில்லை. ஆனால் பல்கலைக்கழக சமூகத்தின் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கலாம் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் பல்கலைக்கழக நூலகத்துக்கு எனத் தான் எழுதிய சில நூல்களைக் கையளித்தார்.

யாழ்.பல்கலைக்கழக நிகழ்வைத் தொடர்ந்து கலாம் குழுவினருக்கான மதிய உணவு ஏற்பாடு யாழ். நகரில் உள்ள ரில்கோ ஹோட்டலில் இடம்பெற்றது.

அங்கு பத்திரிகை ஆசிரியர்கள், மதகுருமார்கள், சமூகப் பெரியார்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலாம் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரிக்குச் சென்று கலாம் உரை நிகழ்த்தினார்.

'அறிவுசார் சமூகத்தின் தோற்றம்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அங்கும் மாணவர்கள் திரண்டிருந்தனர்.

உரை நிகழ்த்துவதற்கு முன்னதாக பிரார்த்தனை மண்டபத்தில் கலாமின் வருகையை ஒட்டி அமைக்கப்பட்ட நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்து வைத்தார்.

அதன் பின்புகுமாரசுவாமி மண்டபத்தில் வைத்து கலாமுக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். தொடர்ந்து உரையாற்றிய அப்துல் கலாம் இறுதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குப் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கலாம் உரையாற்றிக்கொண்டிருந்த வேளை இடையூறு விளைவித்த நபர் ஒருவரைப்பொலிஸார் வெளியேற்றினர்.


அத்துடன் மாணவர்களின் கேள்விகளுக்கும் கலாம் பதிலளித்தார்.

(14-15)

## யாழ். இந்துவில் கலாம்...



கல்லூரி அதிபர் கலாமை அழைத்து வருகிறார்.



தனது வருகையையொட்டி அமைக்கப்பட்ட நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்கிறார் கலாம்.





யாழ். பல்கலைக்கழகத்தில் கைலாசபதி கலையரங்கு மாணவர்களால் நிறைந்து வழிய, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படும் அப்துல் கலாம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா தம்பையா



கட்டுவன்மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி நல்லம்மா தம்பையா (21.01.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் சத்தீஸ்வரன் (நியூஸிலாந்து), வாகீஸ்வரன் (கனடா), சத்தீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் சுபாசினி, சாந்தினி, சிவலிங்கம் ஆகியோரின் மாமியும் விசாகா, தர்சிகா, சயனிக்கா, வசந்தன், சியாமளா, நியாமினி, நிஷாந்தன், கோகுலன் ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும் மிதேஸ், அஜீசன், அஸ்வின் ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்ற பரமானந்தம், செல்லம்மா மற்றும் சின்னம்மா, திருநாவுக்கரசு, திலகவதி, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்:
சிவலிங்கம் (மருமகன்).


City & Guilds English!

புதிய பிரிவு ஆரம்பம் : 28 .01.2012

- குறுகிய காலத்தில், குறைந்த கட்டணத்துடன் சர்வதேச அங்கீகாரமுள்ள இக்கற்கை நெறியை கற்று ஆங்கிலத்தில் சரளமாக உரையாட ஓர் அரிய சந்தர்ப்பம்.
- City & Guilds நிறுவனத்தினால் பயிற்று விக்கப்பட்ட ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டல்
- எமது நிறுவனத்திலேயே பரீட்சைகள் யாவும் நடைபெறும்

A1- EXAM -Sponsor/Settlement Visa மூலம் வெளிநாடு செல்ல உள்ளவர்களுக்கானது

City & Guilds நிறுவனத்தின் A1 பரீட்சையானது மற்றைய ஆங்கில கற்கை நெறிகளுடன் ஒப்பிடும் போது மிகவும் இலகுவானதாக இருப்பதுடன் இது British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கற்கை நெறியானது திருமணமாகி வெளிநாடு செல்ல உள்ளவர்களுக்கு (Sponsor, Settlement Visa), மிகவும் முக்கியமான ஒரு கற்கை நெறியாகும்.

B1- EXAM - Student Visa மூலம் வெளிநாடு செல்ல உள்ளவர்களுக்கானது

B1 பரீட்சையானது British High Commission ஆல் அங்கீகரிக்கப் பட்டது என்பதுடன் IELTS - 4.5 புள்ளிக்கு ஒப்பானதாகவும் உள்ளது. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு உயர்கல்வியை மேற்கொள்வதற்காக உள்ள மாணவர்கள் Student Visa வினை இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக B1 கற்கை நெறி அமைந்துள்ளது.

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 Clock Tower Road,Jaffna
T.P : 021 222 2831 Fax : 021 222 6933
E-mail : iis @iis.edu.lk



மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், கண்க்காளராக உயர் பதவி வகிக்கும் மண மகனுக்கு 35 வயதுக்குட்பட்ட அழகிய மணமகள் தேவை.

தொ.பே- 0778405794



வான் விற்பனைக்கு





இன்று 22½ லட்சம் உங்கள் கையிலிருந்தால் G.K ஆங்கில இலக்க முடைய A/C KDX ADGESTABLE Seet set, CD PLAYER WITH PENDRIVE, SPORTS STREERING WEEL, ALL-OY WEEL WITH NEW TYRE'S, BACK DOOR LEDDER MINT CONDITION. WITH MORE EXTRAS டொல்பின் வாகனமொன்றுக்கு நீங்கள் சொந்தக் காரர் ஆகலாம். பெறுமதியின் மிகுதிப் பணம் பினான்ஸ் முறையில் செலுத்தும் வாய்ப்பு உண்டு.

TELE- 0770230101 ZAHIR



துரித மீட்டல் வினா-விடை வகுப்பு

A/L 2012

LOGIC

எஸ்.எஸ்.மனோகரன்

★ புதிய பாடத்திட்டத்திற்கேற்ப அச்சடித்த குறிப்புக்கள் வழங்கப்படும்.

★ M.C.Q வினாக்களில் கூடிய கவனம் செலுத் தப்படும்.

BEACON - யாழ்.நகர்



தவறிவிட்டது

ஐயாக்குட்டி யோகேஸ்வரன் (691660257V) என்பவரின் தேசிய அடையாள அட்டை அச்சுவேலிக்கும் இராச வீதியில் உள்ள நவக்கிரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு- 0774407107



மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப தாரமிழந்த தற்போது யாழ். வந்துள்ள இரு ஆண் குழந்தைகளின் தந்தை, கனிஸ் PR உடைய அழகான மணமகனுக்கு அழகிய 32 வயதுக்குட்பட்ட மணமகள் உடன் தேவை. தொடர்பு- 0776744371


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org